முதன்மை ஆசிரியர் உரை

# சத்தியம் என்றுமே சத்தியமே

ஜே.ஸி. சோட்



சத்தியம் என்றால் என்ன? அநேகர் இந்த கேள்வியை கேட்டு விட்டு, சத்தியமே என்று ஒன்றும் இல்லை, இது தான் சத்தியம் என்று எதையும் கூற இயலாது என்பார்கள். அப்படி கூறுவோர் நாட்டுக்கு நாடு, கலாசாரத்துக்கு கலாச்சாரம் இது வித்தியாசப்படும் என்பர். எது உண்மையிலே சத்தியம் என்பதை அவரவர் தீர்மானிக்கக் கூடுமா? எது சரி, எது தவறு, எதை ஏற்றுக்கொள்வது, எதை தள்ளுபடி செய்வது, எது ஒருவனுக்கு நல்லது - எது ஒருவனுக்குக் கெட்டது என்பதை தீர்மானிப்பது தனிப்பட்ட ஒவ்வொருவரின் தேர்வுக்கு விடப்பட்டிருக்கிறதா?

பரலோகத்தில் ஒரு தேவன் இருக்கிறார் என்றும், அவர் சிருஷ்டி கர்த்தர், அவர் சர்வ வல்லமையுள்ளவர், சர்வ வியாபி, சர்வ ஞானி, எல்லாவற்றையும் காண்கிறவர், கேட்கிறவர், எல்லாரிடத்திலும் அன்பு கூறுகிறவர் என்று நாம் விசுவாசித் தால், நாம் ரட்சிக்கப்பட்டு, நித்திய வாழ்வை அடைய என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் அறிந்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பவர்களாக இருப்போம். அவர் நம்மிடம் பொய் சொல்ல மாட்டார், ஏமாற்ற மாட்டார், தவறான வழி நடத்த மாட்டார். ஒருவனைப் பார்த்து ஒரு காரியத்தை செய்யச் சொல்லிவிட்டு, மற்றொருவனைப் பார்த்து அதே காரியத்தை வேறுவிதமாகச் செய் என்று கூற மாட்டார். ஒரு

கலாச்சாரத்தில் இருப்பவனுக்கு ஒரு செய்தியும், வேறொரு கலாச்சாரத்தில் இருப்பவருக்கு வேறொரு செய்தியும் தரமாட்டார்.

நாம் எல்லோரையும் அவரே சிருஷ்டித்தவர், நாம் யாவரும் பாவிகள் என்பது அவருக்குத் தெரியும். அதற்காகத் தான், அவருடைய குமாரனான இயேசுவை உலகத்திலுள்ள எல்லாருடைய பாவத்திற்காக அவர் மரிக்க அவரை இவ்வுல கிற்கு அனுப்பினார். ''நானே வழியும், சத்தியமும், ஜீவனு மாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவி னிடத்தில் வரான்'' என்றார் இயேசு.

ஒரே தேவன், ஒரே கர்த்தர், ஒரே ஆவியானவர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே சபை, ஒரே நம்பிக்கை உண்டு. (எபேசியர் 4:4-6). ஒரே வழி, ஒரே வாசல், ஒரே சுவிசேஷம், ஒரே அஸ்திபாரம், ஒரே நாமம், ஒரே ஆராதனை, ஒரே நாளில் ஆராதனை, ஒரே பரலோகம், ஒரே நரகம் என்றும் நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்றே என்றால் ஒன்று தான், இரண்டல்ல, மூன்றல்ல அதற்கு மேலும் அல்ல. சிலர் சத்தி யத்தை தவறாக விளக்கலாம், வியாக்கியானம் பண்ணலாம். அல்லது தள்ளுபடி செய்யலாம். இருப்பினும் சத்தியம் ஒன்று தான். உண்மை உண்மை தான். சத்தியம் சத்தியம் தான். அது மாறாதது. வேதாகமத்தின் மூலம் தேவன் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தி இருக்கிறார். அது தேவாவியினால் அருளப்பட்டிருக்கிறது. (2 தீமோ 3 :16). அது ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது. (யோவான் 6:63) . ஆகையினால் அது தேவனிடத்திலிருந்து வந்தது. அது தேவனுடைய வார்த்தை. அத்துடன் ஒன்றை கூட்டவோ, குறைக்கவோ, அல்லது மாற்றவோ கூடாது. அதை அப்படியே விட்டு விட வேண்டும். (வெளி 22:18,19). மனிதனுடைய தேவைகளை அறிந்து, தேவைக்கேற்றவாறு செய்கிறார். மனிதர்களுக்கும் ஒரே

வியாதி உண்டு, அதுதான் பாவ வியாதி. தேவன் ஒரே பரிகாரத்தை (மருந்தை) தருகிறார். அது தான் சுவிசேஷம். (மாற்கு 16:15,16).

நாம் என்ன செய்ய வேண்டும் என்று கர்த்தர் அறிந்திருக் கிறார். ஒரே காரியத்தை நாம் அனைவரும் செய்ய வேண்டும் என்று கூறி இருக்கிறார். ஒரே வழியில் அவர் நம் அனை வரையும் ரட்சிக்கிறார். ஒரே சபைக்குள் இரட்சிக்கப்படுகிற அனைவரையும் சேர்க்கிறார். (அப். 2:38, 47). தேவன் பேசி இருக்கிறார் (எபி. 1:1,2). அவர் சத்தியத்தைப் பேசி இருக் கிறார். (யோவான் 8:32). நாம் அனைவரும் அதற்குக் கீழ்ப் படிய வேண்டும். அதையே மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டும். வானத்தின் கீழே எல்லா சிருஷ்டிகளுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மை யோடும் தொழுது கொள்ள வேண்டும் என்று கிறிஸ்து கூறுகிறார் (யோவான் 4:24). கர்த்தருடைய பிள்ளைகளாக நாம் நம் ஆராதனையை நேர்மையோடும், தாழ்மையோடும் தேவனுக்கு ஏறெடுக்க வேண்டும். மேலும் தேவன் கட்டளையிட்டபடி அல்ல வழி நடத்துகிறபடி ஆராதிக்க வேண்டும். அதற்கு மிஞ்சியோ, குறைவாக இருந்தாலோ அதை தேவன் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

கர்த்தருடைய வசனமே சத்தியம், அது பூரண சுயாதீனப் பிரமாணம் (யாக். 1:25). நாம் வசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரம் அல்ல அதன்படி செய்கிறவர்களாக இருக்க வேண்டும்.

அவர் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை (வெளி 22:13), (மத் 24:35) கடைசி நாளில் அதுவே நம்மை நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48). தேவன்

பொய்யுரையாதவர். பொய் சொல்ல மாட்டார். (தீத்து 1:2, எபி 6:18). அவர் எப்பொழுதும் சத்தியத்தை அவர் வார்த்தை மூலம் பேசுகிறார். முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர் பிரசங்கித்த சுவிசேஷத்தை இன்றும் நாம் அதே சுவிசேஷத்தை பிரசங்கிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அன்று எப்படி அந்த சுவிசேஷம் பாவிகளை ரட்சித்ததோ, இன்றும் அவ்வாறே ரட்சிக்கிறது. அது இன்றும் காலத்தைப் போல நவீனமாகவும், இன்றைக்கும் ஏற்றதாகவும் உள்ளது. அதைப் போல் ஏன் மனிதன் மாற்ற வேண்டும்? அப்படி செய்ய முயற்சி செய்பவர் களுக்கு ஐயோ! கடந்த காலத்தில் தேவனுடைய சத்தியத்தை விட்டு வழி விலகிச் சென்றவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் குறித்து வேதாகமத்தில் நாம் காணலாம். சத்தியம் பொய்யாக மாற்றப்படும் போது, அதைப் பின்பற்றுகிறவர்கள் கெட்டுப் போவார்கள்.

ஆகவே, சத்தியம் என்றும் சத்தியமே, தேவனுடைய மனதில் இருந்து நேரிடையாக வந்த கட்டளைகள், உண்மைகள், உண்மையான சங்கதிகளாகும். அதை நாம் விரும்பினாலும், விரும்பாமற்போனாலும், அதை ஏற்றுக் கொண்டாலும், தள்ளுபடி செய்தாலும், அது சத்தியமாகவே இருக்கும்.

இந்த சத்தியத்தை விசுவாசிக்கவும், கீழ்ப்படியவும் அதன்படி ஜீவிக்கவும், அதை பிரசங்கிக்கவும், அதை விட்டு விலகாதிருக்கவும், அல்லது அதைக்குறித்து வெட்கப்படா திருக்கவும், அதே வார்த்தையில் கடைசி நாளில் விசவாசமுள்ள வர்கள் என்று நியாயந் தீர்க்கப்படவும், நித்திய வாழ்வுக்கு பாத்திரராக இருக்கவும் தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக.



# சத்தியத்தின் குரல்

## பொருளடக்கம்


1. முதன்மை ஆசிரியர் உரை
2. பொருளடக்கம்
3. தேவன் எனக்கு ஏன் இதைச் செய்தார்?
4. தேவனுடைய ''அருள்''
5. கஷ்ட காலத்திலும் வேதத்தை (பைபிள்) மதித்தல்.
6. கிறிஸ்தவ மார்க்கத்தின் சாராம்சம்
7. கிறிஸ்துவுடனே சிலுவையிலறையப்பட்டிருக்கிறீர்களா?
8. ஆத்மாவின் ஆரம்பம் மற்றும் தன்மை!
9. ஞானஸ்நானம் என்பது என்ன?
10. தேவ அத்தாட்சி பெற்ற அன்னை மரியாளை நாம் வணங்குதல் எவ்விதம் தவறாகும்?
11. ஞானஸ்நானத்தை எவ்வாறு புரிந்து கொண்டிருக்கிறீர்கள்?
12. ஆவிகளைப் பரிசோதித்தல்.
13. கிறிஸ்தவ ஆராதனையில் வாத்தியக் கருவிகளுடன் கூடிய இசை.
14. வேதப்படிப்பு (கல்வி) முக்கியமானது.
15. இயேசுவின் வாக்குத்தத்தம்
16. தேவ கிருபைக்கும் காணிக்கை கொடுத்தலுக்கும் உள்ள தொடர்பு
17. நாம் யார்?

18. ''நீ இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்''
19. ஆவிக்குரிய பார்வையில் சபை
20. வாழ்வை மாற்றியமைக்கும் வேதாகமம்
21. தேவ வசனத்தின் மீதுள்ள அன்பே தேவ அன்பு!
22. உண்மையான மனந்திரும்புதல்
23. கொடிய காலங்கள்
24. என் சகோதரர் யார்?
25. விருப்பத்திற்கேற்ற சபையை தெரிந்து கொள்ளுதல்.
26. விடுவிக்கப்பட்டேன்.
27. பிரித்தெடுக்கப்பட்டவர்கள்!
28. தாவீதின் மன விருப்பம்!
29. சில வெளிப்படையான உண்மைகள்!
30. சோதனையில் வெற்றி பெறுதல்.
31. ஏற்புடைய பலிகள்!
32. கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?
33. தகப்பனே, உன் கடமை மறந்தாயோ?
34. திருமண வாக்குறுதி நினைவிருக்கிறதா?
35. இணைந்த உள்ளங்கள்
36. மாளும் மாந்தரை மீட்கும் பணி!
37. நம்மிடமுள்ள ஓர் ஆபத்தான குறைபாடு.
38. நானொரு கடனாளி!
39. சுவிசேஷத்தைக் கேள்விப்படாத மனிதனுக்குத் தண்டனையா?
40. நமது இலட்சியப் பணி என்ன?
41. மனந்தளர்ந்து போகாதே!

# தேவன் எனக்கு ஏன் இதைச் செய்தார்?

- பெட்டி பர்டன் சோட்

''**சென்று போன மாதங்களிலும், தேவன் என்னைக் காப்பாற்றி வந்த நாட்களிலும் எனக்கு உண்டயிருந்த சீர் இப்பொழுது இருந்தால் நலமாயிருக்கும்**''. அப்பொழுது அவர் தீபம் என் தலையின் மேல் பிரகாசித்தது; அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்து போனேன். தேவனுடைய இரகசியச் செயல் என் கூடாரத்தின் மேல் இருந்தது. அப்பொழுது சர்வ வல்லவர் என்னோடிருந்தார்; என் பிள்ளைகள் என்னைச் சூழ்ந்திருந்தார்கள். என் பாதங்களை நான் நெய்யினால் கழுவினேன்; கன்மலைகளிலிருந்து எனக்காக எண்ணெய் நதிபோல் ஓடிவந்தது; (யோபு 29:2-6).

''... **இப்போது என் ஆத்துமா என்னில் முறிந்து போயிற்று**; உபத்திரவத்தின் நாட்கள் என்னைப் பிடித்துக் கொண்டது. இராக் காலத்திலே **என் எலும்புகள் துளைக்கப்பட்டு, என் நரம்புகளுக்கு இளைப்பாறுதல் இல்லாதிருக்கிறது**.''

''உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீர் எனக்கு மறு உத்தரவு கொடாதிருக்கிறீர்; ... என் மேல் கொடூரமுள்ளவராக மாறினீர்; உம்முடைய கரத்தின் வல்லமையால் என்னை விரோதிக்கிறீர்.... நன்மைக்கு காத்திருந்த எனக்கு தீமை வந்தது; வெளிச்சத்தை வரப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு இருள் வந்தது. என் குடல்கள் கொதித்து, அமராதிருக்கிறது; உபத்திரவ நாட்கள் என் மேல் வந்தது. வெயில் படாதிருந்தும்,

நான் கறுகறுத்து திரிகிறேன்; நான் சபையிலிருந்து எழுந்திருக்கும் போது அலறுகிறேன். (யோபு 30:16,17; 20,21; 26-28).

''மாறுபாடானவனுக்கு ஆபத்தும், அக்கிரமச் செய்கைக்காரருக்கு ஆக்கினையுமல்லவோ கிடைக்கும்? அவர் என் வழிகளைப் பார்த்து, என் நடைகளையெல்லாம் எண்ணுகிறார் அல்லவோ? (யோபு 31:3,4)

''என்னைப் பகைக்கிறவனுடைய கோபம் என்னைப் பீறுகிறது, என் பேரில் பற்கடிக்கிறான்; என் சத்துரு கொடிய கண்ணினால் என்னைப் பார்க்கிறான்.. நான் சுகமாய் வாழ்ந்திருக்கிறேன்; அவர் என்னை நருக்கி, என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கி, என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார். அவருடைய வில்லாளர் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்; என் ஈரலைத் தப்ப விடாமல் பிளந்தார்; என் பிச்சைத் தரையிலே ஊற்றி விட்டார். நொறுக்குதலின் மேல் நொறுக்குதலை என் மேல் வரப்பண்ணினார்; (யோபு 16:9, 12-14).

''***என் கண் தேவனை நோக்கி கண்ணீர் சொரிகிறது***. ஒரு மனு புத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறது போல, தேவனோடே, மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும்! குறுகின வருஷங்களுக்கு முடிவு வருகிறது; நான் திரும்பி வராத வழியே போவேன். என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக் குழி எனக்கு ஆயத்தமாயிருக்கிறது. (16:20-22; 17:1).

துன்பத்தில் சிக்கித் தவிக்கும் சமயத்தில் அநேகர் இந்த யோபுவைப் போலவே அங்கலாய்க்கின்றனர். ''**தேவன்** ***எங்கே இருக்கிறார்?***'' ''அவர் எனக்கு ஏன் இப்படி செய்து விட்டார்?'' ''***நான் என்ன கெடுதி செய்தேன்? எனக்கு ஏன் இப்படி நேரிட்டது?***'' ''தேவன் ஏன் என் அழுகுரலைக்

கேட்டு என் வேதனையை மாற்றிப் போடவில்லை?'' ''***என்னால் தாங்கக் கூடாத துயரம் என்னை வாட்டுகிறதே, எனக்கு இனி நிம்மதியே இல்லையா?***'' என்று பலவிதமான கேள்விகள் அவர்கள் உள்ளத்தில் எழும்புகிறது.

தேவன் ஏன் மௌனமாய் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று நாமும் பலமுறை யோபுவைப் போல குறை கூறுகிறோம். ஆனால் அது சரியல்ல. ஏனென்றால் எந்தவிதமான துன்பத்திலும், நெருக்கதிலும் சிக்கித் தவிக்கும் எவருக்கும், தேவன் நிம்மதியையும், ஆறுதலையும் அளிக்கிறார். துயரம், இழப்பு நேரிடும் சமயங்களில் நாம் நடந்து கொள்ள வேண்டிய விதத்தையும், அவைகளை மேற்கொள்ளும் வழிகளைக் குறித்தும் அவர் நமக்கு ஆலோசனை அளிக்கிறார். வேத வசனங்கள் மூலமாக அவர் நம்மோடு பேசுகிறார்; அவருடைய அளவற்ற அன்பை வெளிப்படுத்துகிறார். வாழ்வின் சுபிட்சமான நேரங்களிலும், துயரமான நேரங்களிலும் அவரை அண்டிக் கொண்டிருப்பதையே அவர் விரும்புகிறார்.

உங்களுக்கு நினைவிருக்கிறதா? இந்த உலகத்தையும் அதிலுள்ள யாவையும் ஆறு நாட்களில் உண்டாக்கி முடித்த போது ''தேவன் தாம் உண்டாக்கின ***எல்லாவற்றையும்*** பார்த்தார், அது மிகவும் ***நன்றாயிருந்தது***'' (ஆதி 1:31) என வேதம் சொல்லுகிறதே. நாசமேயில்லாத, தீங்கில்லாத, துயரங்களில்லாத, மரணமில்லாத ஒரு சுபிட்சமான உலகையே தேவன் ஏற்படுத்தியிருந்தார்.

ஆனால் இவையெல்லாவற்றையும் சீர்குலைக்கும் சதிகாரன் ஒருவன் உண்டென்பதை நினைவில் கொள்ளுங்கள். ***அவன் தேவனுக்கு மட்டுமல்ல அவர் படைத்த அன்பின் சிருஷ்டிகள் எல்லாவற்றிற்கும் விரோதி***. அவன் தான்

***சாத்தான்***. உலகத்திற்குள் பாவத்தைக் கொண்டுவந்தவன் அவன் தான். பாவத்தின் விளைவாகவே தேவனுடைய அழகான படைப்பெல்லாம் சீர்குலைக்கப்பட்டு, செயலிழந்து, பேரழிவை நோக்கிச் சென்று விட்டது. ''..சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப் பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கை யோடே,.... மாயைக்கு கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்கு தெரிந்திருக்கிறபடி, ***இதுவரைக்கும் சர்வ சிருஷ்டி யும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது***. (ரோமர் 8:20-22).

தனக்கு நேர்ந்த துன்பங்களுக்கெல்லாம் காரணமாயிருந்த கொடுமைக்காரன் யாரென்பதை யோபு புரிந்து கொள்ளாமல், தேவன் இப்படியெல்லாம் செய்து விட்டாரென்று எண்ணி விட்டான். ஆனால் ஆரம்பத்திலிருந்தே சாத்தான் தான் யோபுவைக் குறி வைத்து தாக்கிக் கொண்டிருந்தான் என வேதம் சொல்லுகிறது. அவனை அழிப்பதற்காக சூறாவளிக் காற்று, பெரும் தீவிபத்து போன்ற பலவிதமான இயற்கைச் சீற்றங்களை உண்டாக்கி சதி செய்தான்! (யோபு 1:16, 19).

இன்றைய உலகில் இயற்கைப் பேரழிவுகள் வாடிக்கை யாகி விட்டன. இவைகளுக்கெல்லாம் முழு பொறுப்பாளன், பிசாசானவன் தான். ஒரு வேளை சில சம்பவங்கள் அவனது நேரடிச் செயலாகவும், இன்னும் பல சிலரது தவறுகளின் காரணமாக இயற்கை விதிகள் மீறப்பட்டு நடந்து கொண்டிருந் தாலும், சகல நாச மோசங்களுக்கும் அவன் தான் காரணம். அவன் தேவனுக்கும் அவர் நேசிக்கும் மனிதனுக்கும் மகா விரோதி. நம்மை அழித்து நிர்மூலமாக்குவதே அவனது குறிக்கோள்.

அப்படியானால், "தேவன் சர்வ சக்தி படைத்தவராக இருந்தும் இப்படிப்பட்ட பயங்கரமான சேதங்களை சாத்தான் ஏற்படுத்த அவர் ஏன் அனுமதிக்கிறார்?" என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். ஏனென்றால், மனிதன் தனது சுய விருப்பத்தின்படி வீழ்ந்து பாவ வாழ்க்கையிலேயே நிலைத் திருக்க தீர்மானித்தபடியால் இந்த உலகத்தை ஆளும் அதிபதியாக சாத்தானை அவனே நியமித்துவிட்டான். இயேசுவோ இந்த மனிதனுக்கு "நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் கிடைக்க ஓர் புதிய வழியை ஏற்படுத்தினார். (2 பேதுரு 3:13). ***அந்த புதிய உலகத்தில் தான்*** ஆதி 1:31-ல் உள்ளபடி மீண்டுமாக, "எல்லாம் மிகவும் நன்றாய்" இருக்கும். இயேசுவை பின்பற்றும் எல்லோரும் இந்த ***நாசமோசம் இல்லாத புதிய பூமியில்*** வாழலாம்.

"***அப்படியானால் இந்த உலகத்தின் மேல் தேவனுக்கு எந்தவித அதிகாரமுமில்லையா? அல்லது நமக்கு நேரிடுகிற அல்லது வரப்போகிற எந்த ஆபத்தை யும் பற்றி தேவன் கவலைப்படுவதில்லையா?***" இல்லவே இல்லை! ஆனால் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்; இயற்கைச் சீரழிவுகளைத் தடுப்பதற்காக, தேவன் இவ்வுலகத் தின் இயற்கை விதிகளை மாற்றியமைக்கப் போவதில்லை. நல்ல கால சூழ் நிலையிலும் சூறாவளிக் காற்று ***வீசத்தான் செய்யும்***. அமைதியான சூழ்நிலையிலும் கடும்புயல் ***மோதத்தான் செய்யும்***. சற்றும் எதிர்பாராத நேரத்தில் கடும்புயல் மோதத் தான் செய்யும்.

மற்றும் பல துயர சம்பவங்களுக்கு பாவமே நேரடி காரணம். பள்ளி சிறுவர்கள் சக மாணவர்களை கொலை செய்தல், பழங்குடி இனத்தவர் மற்றொரு இனத்தவரை

படுகொலை செய்தல், மதுபானம் மற்றும் போதைக்கு அடிமை யானோர் நிகழ்த்தும் பலாத்காரம், படுகொலை போன்ற இவை களுக்கு வேறு யாரை நாம் நொந்து கொள்வது? இவை யெல்லாம், பாவத்தின் காரணமாக தடம்புரண்ட இந்த தலை கீழ் உலகில் (சமுதாயத்தில்) நடக்கத்தான் செய்யும்.

மனிதன், தானாகவே கெடுத்து சீரழித்துப் போட்ட இந்த உலகத்தை தேவன் மீண்டும் சீர்படுத்திக் கொடுப்பதால் எவ்வித நிலையான பயனும் இந்த பாவசாபம் மிக்க உலகிலிருந்து தமது பிள்ளைகளை பிரித்தெடுத்து, அவர்களுக்கென்று ஓர் உன்னத மான வீட்டை (வாசஸ்தலத்தை) ஆயத்தப்படுத்திக் கொண்டிருக் கிறார்.

அந்த புதிய வாசஸ்தலத்தினை சென்றடையும் வரை ''இவ்வுலகத்தில் தம்முடைய பிள்ளைகளுக்கு சகலமும் நன்மை யாகவே நடக்கும்'' என்று அவர் வாக்களித்துள்ளார் (ரோமர் 8:28). அப்படியானால், நம்மைச் சுற்றிலும் ஓர் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு, சேதம் நம்மை அணுகாது என்று பொருளல்ல. நாமும் இந்த சேதம் நிறைந்த உலகின் ஒரு அங்கம் தானே. நமக்கும் துயர சம்பவங்கள், அன்பிற் குரியவர்களின் இழப்பு, வாழ்க்கைப் போராட்டங்கள், ஆபத்து மற்றும் மனவேதனைகள் வர வாய்ப்புண்டு.

ஆனால் நம் ***தேவன் நம்மைத் தாங்கி நடத்துவார்***. அதுவுமன்றி ''அவரது ***ஆவியானவரும்*** நமது உள்ளான மனுஷனில் நம்மை வல்லமையால் ***பலப்படுத்துவார்***''- எபேசி 3:16 நமக்கு வரும் இக்கட்டு நேரங்களில் நாம் தேவனுக்கு உண்மையானவர்களாயிருந்தால், சாத்தான் நம்மேல் எய்யும் ஆபத்தான ஆயுதங்களை நமது நன்மைக் கேற்ற கருவிகளாக அவர் மாற்றி விடுவார். ''நான் உன்னை விட்டு

விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை'' என்பது அவருடைய வாக்குத்தத்தமல்லவா? (எபி 13:5)

தேவன் ''நமது பரம தகப்பன்'' என்று அறிவோம். உங்கள் பிள்ளைகளுக்கு ஒரு ஆபத்தான சூழ்நிலையென்றால் நீங்கள் எங்கேயிருப்பீர்கள்? பிள்ளைகளின் வேதனையை உங்கள் வேதனையாகப் பாவித்து கண்ணீர் சிந்துவீர்களல்லவா? அவர்களின் வேதனையைப் போக்க உங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்வீர்களல்லவா? அவர்களை விட்டு விலகாமல், கூடவே இருந்து அவர்களுக்கு துணை செய்வீர் களல்லவா? ஒருவேளை இப்பேற்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் உங்கள் பிள்ளையின் வேதனையைப்போக்க நீங்கள் அருகில் செல்லும் போது, ''நீர் தான் என் வேதனைக்கும் பிரச்சனைக்கும் காரணம்'' என்று கூறி உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கு மிடையே ஓர் பிளவு உண்டாகுமானால் உங்கள் மனம் என்ன பாடுபடும் என்பதை கற்பனை செய்து பாருங்கள்.

நம்முடைய வாழ்வின் எந்த சூழ்நிலையிலும் தேவன் நமது ஆவிக்குரிய தகப்பனாக, கூடவே இருக்கிறார். இரத்த சாட்சியாகிய ஸ்தேவான் கண்ட காட்சி உங்களுக்கு நினைவிருக் கிறதா? தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருப்பதாக பல சந்தர்ப்பங்களில் காட்சியளித்த இயேசு, ஸ்தேவான் கல்லெறியப்படுகிற துயர வேளையில மனம் தாளாது எழுந்து நிற்பதைக் காண முடிகிறதல்லவா? வேதனைகள் நம்மைத் தாக்கும்போது இந்தக் காட்சி நமக்கு மிகுந்த ஆறுதலை அளிக்கும். நம் வேதனைகளை நீக்க இயேசு எழுந்து நின்று, தம் கரத்தை நீட்டி, தம்மால் இயன்றதையெல்லாம் செய்து நமது துயரத்தை நீக்கி விடுவார் என்பது அதிக நிச்சயமல்லவா?

"*அவர் எவ்விதம் நமக்கு உதவி செய்கிறார்?*" ஒரு அற்புதத்தின் மூலம் அல்ல. ஏனென்றால், தமது ஜனத்திற்கு புதியதொரு பிரமாணத்தை அளிக்கும்போதும், ஒரு புதிய செய்தியாளனை அனுப்பும்போதும் மாத்திரமே தேவன் அற்புதங்களை உபயோகிக்கிறார். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலை களை வைத்தே தேவன் பல மகத்தான உதவிகளை தம் ஜனங் களுக்கு செய்திருக்கிறார். சாதாரண ஜனங்கள், அரசாங்கங்கள், சூழ்நிலைகள் மற்றும் சம்பவங்களை, தம்முடைய ஜனங் களுக்கு சரீரபிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் உதவி செய்யும் ஒப்பற்ற கருவிகளாக அவர் பயன்படுத்தியிருக்கிறார்.

ஆக, இக்கட்டு நேரங்களில், ***தம்முடைய மற்ற பிள்ளைகளாகிய*** சபையாரின் மனங்களையும், கரங்களை யும், உடமைகளையும் துயர்துடைக்கும் கருவிகளாக பயன் படுத்துகிறார். இவர்கள் அவரது குடும்பமாயிற்றே. தம்மு டைய பிள்ளை களுக்கு மட்டுமல்ல, பாடுபடும் உலகத் தாருக்கும் சபையின் மூலம் ஒத்தாசை வருகிற. மேலும் நொறுங்கிப் போன அநேக உள்ளங்களைத் தேற்ற அவர், உலகப்பிரகாரமான அரசாங்கம், மருத்துவர்கள், மருந்துப் பொருட்கள், தச்சர்கள், ஆலோசகர்கள் போன்றவர்களையும் தமது கருவியாகப் பயன்படுத்துகிறார். மறுவாழ்வு பெற்ற அநேகரின் முகங்களில் மீண்டும் புன்னகை தவழச் செய்கிறார். தாங்கள் பெற்ற நன்மைகளுக்காக அவர்கள் அவரை நன்றி யுடன் துதிக்கின்றனர்; சாத்தானின் தீங்குகள் எல்லாவற்றையும் நீக்கி, அவன் வாழ்வை ஆசீர்வதிக்க அவைகளைத் தேவன் பயன்படுத்திய போது, முன்பு யோபு விரக்தியில் சொன்ன, "என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக் குழி எனக்கு ஆயத்தமாயிருக் கிறது" என்ற வார்த்தைகளுக்குப்

பதிலாக நிம்மதியும், ஆனந்தமும் அவன் வாழ்வில் இடம் பிடித்தன.

தேவனையோ அல்லது சாத்தானையோ தேர்ந்தெடுக்கும் உரிமையை மனிதனிடம் தேவன் கொடுத்துவிட்டார். எனவே, கஷ்ட காலத்தில் நாம் தேவனுக்கு உண்மையாயிருப்பதும் அவர் பார்வைக்கு சரியானதை செய்வதும் நமது இஷ்டம். அவர் நம்மைக் கட்டாயப்படுத்த இயலாது. ஆனால் நாம் அவருடைய கரத்தை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கும் வரை, எந்த துயர சம்பவங்கள் நம் வாழ்வில் வந்தாலும், அவைகள் தலைகீழாக மாற்றப்பட்டு, நமக்கு நன்மையாகவே முடியும் என்று அவர் ரோமர் 8:28-ல் வாக்களித்துள்ளார்.

***இது அவர் அளித்த வாக்குறுதி அல்லவா?***

***அவர் வாக்கு மாறாதவர் ஆயிற்றே!***

☆★☆★☆★☆

## தேவ அன்பு

மனிதனுடைய குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற தேவநீதியை தவிர மனிதனுடன், தேவன் வைத்திருக்கும், எல்லா உறவு முறையிலும், அவருடைய அன்பை பெற பாத்திரமில்லாதவனுக்கும் தேவன் சந்தோஷத்தையும், வாழ்வையும் இரக்கத்தையும் அளிக்கிறார்.

வேதாகமம் ஒரு நீண்ட காதல் (அன்பு) கதை. தேவனுடைய அன்பு கடிதத்தில், தம் உள்ளத்தை திறந்து நம்மீது கொண்டுள்ள மிகச்சிறந்த பாசத்தை வெளிப்படுத்துகிறார். அவர் அன்பு நமக்கு எவைகளை எல்லாம் செய்ய வைத்தது, அது எப்படிப்பட்ட அன்பு என்பதை இந்தப் புத்தகத்தின் பக்கங்களை வாசிக்கும் போது கற்றுக்கொள்கிறோம்.

# தேவனுடைய "அருள்"

டேன் புளோர்னாய்

"***தேவனுடைய அருள்***" என்ற சொற்றொடர் வேதாகமத்தில் இல்லையெனினும் இந்தக் கருத்து இப்புனித நூலில் எங்கும் இழையோடியிருக்கிறது. இந்த சொற்றொடரின் கிரேக்க மூலம், "முன்னறிந்து ஆயத்தம் செய்து வைத்தல்" என்பதாகும்.

"***தேவ அருள்***" என்பது தேவனுடைய இயல்பான பண்பு. இதன் காரணமாகவே, தாம் படைத்த சிருஷ்டிகள் மேல் அக்கரையுள்ளவராக, அவைகளை பாதுகாத்து, போஷித்து, காப்பாற்றி வருகிறார். மற்றொரு வகையில், தேவன் தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற "திரைமறைவில்" செயலாற்றுகிறார் என்றும் சொல்லலாம்.

இந்த தேவ அருளை இருவகையாகக் காணலாம். ஒன்று பொதுவானது, மற்றொன்று விசேஷமானது. பொதுவாகப் பார்த்தால் தேவன் தமது சிருஷ்டிகள் அனைத்தையும் போஷித்து, பராமரித்து, காப்பாற்றி வருகிறார். "அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்ள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்". (மத்தேயு 5:45). எபிரெய எழுத்தாளன் இதனை, "சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய்" என்று குறிப்பிடுகிறார். (எபி 1:3).

தேவனுடைய விசேஷித்த அருள் அவருடைய பிள்ளைகளின் மேல் பொழிவதையும் நாம் காணமுடிகிறது. எவ்வா

றெனில், "கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை சோதனையின்றி இரட்சிக்கவும்... அறிந்திருக்கிறார்" (2 பேதுரு 2:9) என்று பேதுரு உறுதியாகக் கூறுகிறார். சீஷர்களுக்கு ஜெபிக்க கற்றுக் கொடுக்கும் போதும் இயேசு, "எங்களை சோதனைக்கு உட்படப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும் என்று சொல்வதை கவனியுங்கள் (மத் 6:13). இந்தத் தேவ அருளின் காரணமாகத்தான், "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது" (ரோமர் 8:28).

***தேவ அருள்*** நம் தேவைகளையெல்லாம் சந்திக்கிறது. "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி, உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்"( பிலி 4:19; 2 கொரி 9:10ம் காண்க). ***தேவ அருள்*** தம்முடைய ஜனத்தைப் பத்திரமாக பாதுகாக்கிறது. "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்கு திறந்திருக்கிறது.... நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார்". (சங் 34:15,17). ***தேவ அருள்*** உலக ராஜ்ஜியங்களை கட்டுப்படுத்துகிறது. " அவர் ஜாதிகளை பெருகவும் அழியவும் பண்ணுகிறார்; அவர் ஜாதிகளைப் பரவவும் குறுகவும் பண்ணுகிறார்; (யோபு 12:23; சங் 22:28; தானி 5:21; அப் 17:26).

நம் எதிர்பார்ப்புகளெல்லாம் பொய்த்துப் போனதாய்த் தோன்றுகிற வேளைகள் வரலாம். உண்மையும் நியாயமும் முற்றிலும் தோற்றுப் போனதாய் தோன்றலாம். ஆயினும்

**தேவ அருள்** நம்மை ஒருபோதும் கை விடாது. இவற்றின் பின்னணியில் தேவ கரம் செயல்படுவதை நாம் உணர்ந்து இளைப்பாற வேண்டும்.

எந்தச் சூழ்நிலையிலும் தமது ஜனத்தைக் கண்காணித்து பாதுகாக்கிற தேவன் நமக்குண்டு. தேவனுடைய செயல் பாடுகளை நாம் கண்கூடாகக் காணமுடியாத வேளைகளிலும், அவர் நமக்காக செயலாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை நாமறிவோம். பொல்லாப்பு மேற்கொள்ளும் சமயத்திலும் கூட தம்முடையவர்களை சேதமின்றி காக்கிறவர் நம் மத்தியில் உண்டு.

எனவே மோசமாய் தோன்றுகின்ற சூழ்நிலைகளிலும் நாம் மனம் தளர்ந்து போக வேண்டாம். எல்லாம் தேவனுடைய கரத்தின் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது என்பதை மறந்து போக வேண்டாம். ''அவருடைய தீர்மானத்தின்படி அழைக் கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது'' (ரோமர் 8:28).

✞✞✞✞✞✞

## வாசகர் கவனத்திற்கு

அன்புள்ள வாசக நண்பர்களே,

''சத்தியத்தின் குரல்'' புத்தகத்தின் பிரதியைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ள விரும்புவோர், உங்கள் முகவரியை பின்கோடுடன் தெளிவாக எழுதி எங்களுக்கு அனுப்பவும்.

# வாழ்வை மாற்றியமைக்கும் வேதாகமம்

*- எட்டி கூப்பர்*

முன்பின் அறிமுகமில்லாத ஒருவர் உங்களைப் பார்த்து, ''வேதாகமம் உங்கள் வாழ்வில் நிகழ்த்திய மாற்றம் என்ன?'' என்று கேட்டால், உங்கள் பதில் என்னவாயிருக்கும்? உங்கள் பிள்ளைகளின் வாழ்வின் இக்கட்டான நேரங்களில் எந்த புத்தகத்தை நாடும்படி ஆலோசனை கொடுப்பீர்கள்? என்னைக் கேட்டால், முறையாகப் பயன்படுத்தினால், மக்களின் வாழ்வில் ஓர் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்த வேதாகமத்தால் முடியும், என்கிறேன்.

இன்றைய உலகை சற்று சிந்தித்துப் பாருங்கள். மனிதனுக் கிடையேயும், நாடுகளுக்கிடையேயும் கசப்புணர்வு, பகை, போராட்டம், சண்டை ஆகியவை மலிந்து கிடக்கின்றன. இவைகளுக்கெல்லாம் மனித மனத்தில் காணப்படும் திருப்தி யின்மையும், அங்கலாய்ப்பும் தான் காரணம். (யாக் 4:1,2). இந்த அவல நிலையை நீக்க வழிகாட்டுவது எது? குறைவற்ற ஓர் வாழ்வுக்கான வழிமுறைகளை எங்கு சென்று தேடுவது (யோவான் 10:10) நாம் சரியான வழியில் சென்று ஆனந்தமாய் வாழ வேண்டுமென்பதே தேவனுடைய விருப்பம். எனவே நமக்கு ஓர் சிறந்த வழிகாட்டி மிகவும் அவசியம்.

வேதமே தங்கள் வாழ்வின் வழிகாட்டி எனும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட அநேகர் என் வாழ்வில் சம்பந்தப்பட்டுள் ளனர். என் பெற்றோர், தாத்தா பாட்டி மற்றும் நெருங்கின உற

வினர்கள், வேதாகம போதகர்கள், வயதான பிரசங்கிமார்கள் போன்றோர் என் வாழ்வில் மாபெரும் முன் மாதிரிகளாக நின்று, வேத வாக்கியங்களின்படியே வாழும்படி என்னை உந்தித் தள்ளினர். அதன் பயனாக, நான் அபரிமிதமாக ஆசீர்வதிக்கப் பட்டேன்.

வயது முதிர்ந்த பிரசங்கிமார்கள் எங்கள் ஊருக்கு வந்து மிகுந்த உற்சாகத்துடன் பிரசங்கித்த வல்லமையான தேவ செய்திகள் எங்கள் உள்ளங்களை தட்டியெழுப்பி, சரியான வழியில் செயல்பட வைத்ததை எங்களால் இன்னும் மறக்க இயலாது. வேதாகமத்தின் முக்கியத்துவம் மற்றும் பாவத்தைக் குறித்தும் அதன் விளைவுகள் குறித்தும் ஆணித்தரமாக அவர்கள் போதித்தனர். எள்ளளவும் சந்தேகமின்றி தெளிவாக வும் மிகுந்த தைரியமாகவும் அவர்களால் பேச முடிந்தது.

ஆம்! மனித வாழ்வை மாற்றியமைக்கும் வல்லமை வேதாகமத்திற்கு உண்டு. (ரோம 1:16; 12:1,2). ''இவர், அன்று பார்த்த பழைய நபர் இல்லையே'' என்று நாம் திகைக்கும் அளவுக்கு மாறிய அநேகர் உண்டு. (2 கொரி 5:17). இந்த மாற்றங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டோ, பயமுறுத்தப்பட்டோ உண்டானவையல்ல. மாறாக, ***தேவ வசனத்தின் உருமாற்றும் வல்லமையால்*** இது சாத்தியமாயிற்று.

அநேகர் தங்களை பக்திமான்கள் என்று கூறிக்கொள்வர். ஆயினும் தங்கள் தவறுகளை வேதம் சுட்டிக் காட்டும் போதும், மாறி வாழ எச்சரிக்கும் போதும் அதன கட்டளைகளைப் புறக்கணித்து தள்ளிவிடுவர்.

யாரோ ஒருவர் பின்வருமாறு எழுதினார் :

''**வேதாகமம்** :

உன்னதத்திலிருந்து வந்தது;

தேவனால் அருளப்பட்டது;

மனிதரைக் கொண்டு எழுதப்பட்டது;

வழுவாத அதிகாரம் பெற்றது;

பிரம்மாண்டமான அளவிலானது;

உலகளாவிய கரிசனை கொண்டது;'

நித்திய காலத்திற்குரியது;

தனிப்பட்ட வாழ்விற்கும் பொருத்தமானது''.

இந்த வேதாகமத்திற்கு உங்கள் வாழ்வில் தனி இடம் கொடுப்பீர்களா? இந்த உன்னதமான புத்தகத்தைப் புரிந்து கொள்ள நேரம் ஒதுக்குவீர்களானால், அதன் மூலம் உங்கள் வாழ்வில் ஆச்சரியமான நித்திய மாற்றத்தைக் காண்பீர்கள்!

**மரித்தோராகிய சிறியோரையும்**
**பெரியோரையும் தேவனுக்கு முன்பாக**
**நிற்கக் கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள்**
**திறக்கப்பட்டன....**
**மரித்தோர் தங்கள் தங்கள்**
**கிரியைகளுக்குத் தக்கதாக**
**நியாயத்தீர்ப்படைந்தார்கள்.**
**(வெளி. 20:12)**

# கஷ்ட காலத்திலும் வேதத்தை [பைபிள்] மதித்தல்

*- ஸ்டீவ் ஸ்நைடர்*

''அகங்காரிகள் எனக்கு விரோதமாய் பொய்களைப் பிணைக்கிறார்கள்; நானோ, முழு இருதயத்தோடும் உம்முடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவேன்.... அகங்காரிகள் என்னைப் பொய்களினால் கெடுக்கப் பார்த்தபடியால் வெட்கப் பட்டுப் போவார்களாக; நானோ உமது கட்டளைகளை தியானிப்பேன்... அவர்கள் என்னை பூமியிலிராமல் நீக்கிவிட சற்றே தப்பிற்று; ஆனாலும் உமது கட்டளைகளை விட்டு விட வில்லை.... நான் ஒரு போதும் உம்முடைய கட்டளைகளை மறக்க மாட்டேன்; அவைகளால் நீர் என்னை உயிர்ப்பித்தீர்.'' (சங். 119:69, 78,87,93).

நெருக்கடியான நேரங்களில் நீங்கள் யாரை நாடுவீர்கள்? உற்ற நண்பனையா? பெற்றோரையா? உடன்பிறப்புக் களையா? கிறிஸ்துவுக்குள் சகோதர, சகோதரிகளையா? அல்லது சபையின் முக்கியஸ்தர்களையா? ஆனால் இந்த அருமையானவர்கள் நம்மை தேவ வசனத்தினருகில் நம்மைக் கொண்டு செல்லும் பட்சத்தில் இதில் தவறேதுமில்லை. ***பொதுவாக நமக்கு நல்லது நடக்கும் போது வேதத்தை மதிக்கிறோம்; ஒருவேளை நமக்கு கஷ்டம் வரும்போது அதை ஒதுக்கித் தள்ளுகிறோம்***. தேவனுக்கு உத்தமமாய் நடந்து கொண்டவர் களுக்கும் நெருக்கடியான சூழ்நிலைகள் வந்ததாக நமக்கு நிறைய ஆதாரங்களுண்டு. மோசே, ஆபிரகாம், லோத்து தீர்க்கதிரிகள் போன்றோருக்கும், நமது

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும்கூட துன்பம் நேரிட வில்லையா? எவ்வளவு நெருக்கடிகள் வந்தபோதும் இவர்கள் ஜெயங்கொண்டவர்களே!

சங்கீதக்காரன் சொல்லுவதைக் கவனியுங்கள்! அவனுக் கெதிராய் அநேகர் பொய்யை பிணைத்தார்கள். அவனை கெடுக்கப் பார்த்தார்கள், அவனை அழிக்கவே திட்டமிட்டார் கள் என்ற போதிலும், அவன் தேவனுடைய வசனத்தை மட்டும் விட்டுவிடவில்லை. இந்த உறுதிக்கு காரணமென்ன? ''***அவை களால் நீர் என்னை உயிர்ப்பித்தீர்***'' என்ற எண்ணமே! (சங் 119:93). இக்கட்டான நேரங்களில் தேவ வசனமே நமக்கு ஆறுதலையும், பெலத்தையும், ஆலோசனையையும் அளிக்க வல்லது என்பதை அவன் அறிந்திருந்தான்.

நமக்கு எதிராக யாரேனும் பொய் கூறி,அவமானப் படுத்தி, நம்மையே ஒழித்துக் கட்ட வந்தால் நாம் விசுவாச ஜீவியத்தை விட்டு ஓடிவிடுவோமா? அல்லது முன்பைவிட வேத வசனங்களை அதிக உறுதியாகப் பற்றிக்கொள்வோமா?

மத்தேயு 4-ல் நம் ஆண்டவர் பிசாசினால் சோதிக்கப் பட்ட போது, ***வேத வசனங்களின் உதவியோடு*** தானே அவைகளை ஒவ்வொன்றாக மேற்கொண்டார். நமது ஆண்ட வருக்கே வேதத்தின் வாக்குதத்தங்கள் உத்வேகத்தையும், பெலனையும் கொடுத்திருக்குமானால், நமது வாழ்விலும் சிக்கலான நேரங்களிலும் இது மிகவும் ஆறுதலைத் தருமே!

வாழ்க்கையின் கடினமான வேளைகளில் தான் நாம் வேதத்தை மதிக்கிறோமா இல்லையா என்பது வெளிப்படும். நமது வாழ்வின் எத்தகைய சூழ்நிலையிலும் தாவீதுக்கு இருந்த மனநிலை நமக்கிருக்குமானால் நாம் தேவனுடைய வசனத்தை விட்டு விலகவே மாட்டோம். ஏனென்றால் ***இந்த வேத வசனங்களில் மட்டுமே நித்திய வாழ்வை நாம் காண முடியும்.*** ❀

# கிறிஸ்தவ மார்க்கத்தின் சாராம்சம்

- டேவிட் சாட்வெல்

சுவிசேஷ ஊழியத்தில் அக்கரை உள்ள கிறிஸ்தவர்கள், எளிதில் நம்பக்கூடிய காரியம் என்னவெனில் ஒவ்வொருவனும் நன்மை, தீமை மற்றும் சரி, தவறு அதாவது அடிப்படை நீதி ஒழுக்க முறைகளை அறிந்திருப்பான் என்பதே.

கிறிஸ்தவர்கள் இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதில் கூற கடமைப்பட்டுள்ளனர். 1.கிறிஸ்தவ மார்க்கத்தின் மையப் பொருள் (சத்தியம்) என்ன? 2. கிறிஸ்தவ மார்க்கத்தின் அஸ்தி பாரம் எது? (பைபிள்). வேதத்தை நன்கு அறிந்தவர்கள் கூறு வார்கள். (1) ''கிறிஸ்தவ மார்க்கத்தின் மையப் பொருள், ஆண்ட வரும், கிறிஸ்துமாக இருப்பதற்காக, இயேசு மரித்தோரி லிருந்து உயிர்த்தெழுந்தார். (2) கிறிஸ்தவ மார்க்கத்தின் அஸ்திபாரம் கிறிஸ்துவே (1 கொரிந்தியர் 3:11). கிறிஸ்தவ மார்க்கத்தின் அடிப்படை சத்தியங்கள் இவை.

இந்த விடைகளிலிருந்து கிறிஸ்தவர்கள் அபாயகரமான கற்பனைகளை செய்யக் கூடும். அநேகர் நினைக்கிறார்கள், மேற் கூறிய உண்மைகளை ஏற்றுக்கொள்கிறவன், அதன் பொருளை, அர்த்தத்தைப் புரிந்து கொண்டிருப்பான். அப்படி நினைப்பவர்கள், ஆத்தும ஆதயப் பணியில் 3 தவறுகளை செய்யக் கூடும். 1. மக்களை ரட்சகரிடத்தில் திரும்புவதற்குப் பதில், ஒரு மதக் கொள்கை முறைகளுக்கு திருப்ப தங்கள் காலத்தையும், சக்தியையும் செலவழிக்கின்றனர். 2. கிறிஸ்தவ மார்க்கத்தின் அமைப்பைப் பற்றி அதிகமாக கிறிஸ்தவ

ரல்லாதாருக்குப் போதிக்கிறார்களே தவிர கிறிஸ்தவ மார்க்கத்தின் உட்பொருளைப்பற்றி கூறுவதில்லை. 3. கிறிஸ்துவைப்பற்றி அதிகம் பேசாமல், மத மாற்றத்தைப் பற்றிக் கூறுவதற்கு கடுமையாக உழைக்கின்றனர்.

கிறிஸ்தவ மார்க்கம் முழுவதும் இயேசு என்கிற ஒரு மனிதனை அடிப்படையாகக் கொண்டது. கிறிஸ்து இல்லாமல் கிறிஸ்து மார்க்கமே இல்லை. அவர் ஒரு சாதாரண மனிதர் அல்லர். மனிதனாகப் பிறப்பதற்கு முன்பு, பிதாவாகிய தேவனுடைய தெய்வீகத் தன்மையை பகிர்ந்து கொண்டிருக்கிறார். (யோவான் : 1-4, பிலிப்பியர் 2:1-11). இந்தத் தெய்வீக நபர் சிருஷ்டிப்பில் தேவனுடைய கருவியாக பயன்பட்டாலும், அவர் முழுமையாக மனிதனாக மாறினார். மனிதர்களுக்கு உண்டாகும் பசி, தாகம், இவருக்கும் வந்திருக்கிறது. எல்லா மனித சோதனைகளை அனுபவித்து இருக்கிறார், பாடுபட்டு இருக்கிறார். (எபிரெயர் 4:14-16). சாத்தானுடைய கொடுமையான சோதனைகளை தாழ்மையோடு சகித்திருக்கிறார். காட்டிக் கொடுக்கப்பட்டார். மறுதலிக்கப்பட்டார், தள்ளப்பட்டார், கைவிடப்பட்டார், அநீதி இழைக்கப்பட்டார், குற்றவாளியைப் போல நடத்தப்பட்டார், அவமானப்படுத்தப்பட்டார். கொடுமைக்குருசில் மரணத்தை அனுபவித்தார்.

பார்வைக்கு அவர் முழுமையாக தோற்றுவிட்டார், சாத்தான் வெற்றி பெற்றான் என்று தெரிகிறது. தேவனோ சாத்தானுடைய மற்றும் எல்லா தீமையின் அழிவுக்கும் முடிவு கட்டியுள்ளார். இயேசு கிறிஸ்துவின் குற்றமற்ற (மாசற்ற) தம் மரணத்தில் சிந்திய ரத்தத்தினாலே, செய்த (செய்கின்ற) ஒவ்வொரு பாவத்திற்கும், முழுமையான பலியை தேவன் செலுத்தினார் (ரோமர் 3:21-26). பாவமற்ற இயேசு கிறிஸ்து

சிந்திய ரத்தத்தினாலே தேவன் பாவத்துக்கான அபராதத்தைச் செலுத்தினார். இதினிமித்தம் இயேசுவில் விசுவாசம் வைக்கும் யாவருக்கும் முழுமையான பாவ மன்னிப்பை அளிக்கும் காரணரானார். பாவமற்ற இயேசுவின் மரணத்தினாலே, சிலுவையிலறையப்பட்ட இயேசுவில் விசுவாசம் வைக்கும் யாவருக்கும் தேவனுடைய கிருபையை (இரக்கம்) பெறும்படி செய்தார்.

இயேசுவின் மரணத்தினாலே, பாவம் முறியடிக்கப் பட்டது. அவருடைய உயிர்த்தெழுதலினாலே நித்திய ஜீவன் நிச்சயமாயிற்று. இயேசுவை உயிர்த்தெழச்செய்த வல்லமை யுள்ள தேவன் தம்முடைய ஒவ்வொரு வாக்குத்தத்தை நிறைவேற்றுவார் என்பதற்கு அதுவே அத்தாட்சி. இயேசு கிறிஸ்வுக்குள் இணைந்த எவரும் அதே வல்லமையினாலே மீட்கப்படுவார்கள், நீதிமானாக்கப்படுவார்கள், பரிசுத்த மாக்கப்படுவார்கள்.

இயேசு, மாம்சத்தில் ஜீவித்தார், வாழ்ந்தார், நம்மைப் போலவே மரித்தார். சாத்தானின் வல்லமையை, பாவத்தின் அடிமைத்தனத்தை அழித்தார். (எபி. 2:14-18). கிறிஸ்து மாம்சத்தில் வாழ்ந்த அனுபவத்தில் கிறிஸ்து நம்முடைய பூரணமான பிரதான ஆசாரியராக தேவனுக்கு முன்பாக ஆசாரிய ஊழியஞ்செய்கிறவருமாயிருக்கிறார். (எபி. 8:1,2). நம்மைப்போல் சோதிக்கப்பட்டவர், நம்மை நன்றாக அறிவார். பூரண தெய்வீக அம்சத்தை உடையவர், தேவனை நன்றாக அறிந்திருக்கிறார். அப்படிப்பட்ட அறிவினாலே, ஆழ்ந்த நுண்ணறிவினாலே, இரக்கமுள்ள தேவனுக்கு நம்மை பரிந்துரை செய்கிறார். நம் பலவீன நேரத்திலும், தேவனுடைய இரக்கத் தைப் பெறத் தைரியமாக அவருடைய கிருபாசனத்தண்டையில் தைரியமாக வந்து சேருகிறோம்.

இந்த தைரியம் எப்பொழுதும் நம்முடைய தகுதியினால் வந்ததல்ல. எப்பொழுதும் முழுமையான பிரதான ஆசாரியரின் தகுதியினால் வருகிறது. இயேசுவுக்குள் அந்த நிச்சய நம்பிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அது அழியாததும், நித்தியமான சுதந்திரம், தேவனுடைய பாதுகாப்பான வல்லமைக்கு அடியில், விசுவாசத்தில் அவருக்குள் ஜீவிப்பவர்களுக்கு அது சாத்தியம் (1 பேதுரு 1:3-5).

கிறிஸ்தவ மார்க்கம், சபையின் மீது கட்டப்படவில்லை அல்லது மத சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்களின் மீதும் அல்ல. அல்லது விவரமான இறை இயல் ஒழுங்கு முறையின் மீது அல்ல. அது இயேசு கிறிஸ்துவின் மீது கட்டப்பட்டது. அவர் தாமே நம்முடைய பாவங்களுக்காக சிலுவையிலறையப் பட்டார். மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுந்தார்.

## தேவனுடைய வெளிப்பாடு

இவ்வுலகமும் அதிலுள்ள யாவும், தேவன் இருக்கிறார் என்பதை அறிவிக்கிறது. ஆனால், தேவன் வேதாகமம் (பைபிள்) மூலமாக அவரை வெளிப்படுத்தாமல் இருந் திருந்தால், அவர் யார் என்கிற விசயத்தில் முற்றிலும் அறியாமையிலே இருந்திருப்போம். இந்தப் புத்தகத் திலிருந்து தான், அவரைப்பற்றியும் அவருடைய சிருஷ்டி யைப் பற்றியும், கற்றுக்கொள்கிறோம். மனிதனைப் பற்றியும், அவனுடைய பாவம் மற்றும் வீழ்ச்சி, மீட்பு பற்றியும் அறிந்து கொள்கிறோம்.

எல்லாவற்றிலும், தேவன் உண்மையிலே நமக்கு கிருபை யுள்ளவராக இருக்கிறார். அவருடைய வெளிப்பாட்டைப் படித்து அவருடைய சித்தத்துக்கு கீழ்ப்படிவதன் மூலம் நம் அன்பையும்,நன்றியையும் காண்பிப்போம்.

# ஆத்துமாவின் ஆரம்பமும் தன்மையும்

*வெயின் ஜாக்ஸன்*

மனிதனுக்கு ஆத்துமா உள்ளதா? இல்லை என்று மறுப்பு தெரிவிக்கிறது நாஸ்திகம். இவ்வுலகில் ஜடப்பொருள் மாத்திரமே முக்கியம் வாய்ந்தது என்று நம்பும் மதப்பற்று டையவர்கள் மனிதனுக்கு ஆத்துமா உண்டு என்று நம்பினாலும், சரீரத்திலிருந்து வித்தியாசப்பட்ட ஒரு ஆத்துமா மனிதனுக்கு இல்லை என்று வாதிடுகிறார்கள். உண்டு என்று எண்ணிக் கொண்டாலும், அது நித்தியமானது என்பதை மறுக்கின்றனர். பொல்லாதவர்கள் ஆத்துமா ஒன்றுமில்லாமல் நிர்மூலமாகி போகிறது என்று நம்புகிறார்கள் மேற்கூறிய எல்லா எண்ணங் களும் சரியல்ல.

## ஆத்துமா இருக்கிறது

''ஆத்துமா'' என்ற வார்த்தை வேத வாக்கியங்களில் அனேக வழிகளில் உபயோகப்படுத்தபட்டிருக்கிறது. ஆத்துமா என்று கூறும்பொழுது, அது ஒரு முழு மனிதனைக் குறிக்கலாம். (1 பேதுரு 3:20). அல்லது மாம்ச சரீரத்திலே காணும் ஜீவனைக் குறிக்கலாம் (ஆதி 1:30). மனிதனுக்குள் வாசமாயிருக்கும் அறிவுள்ள உணர்வுள்ள ஒரு பொருளாக இருக்கலாம். ஒரு மனிதன் தனக்குள் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு பொருளையுடையவனாக இருக்கிறான் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. (ஆதி 1:26, 27). அந்த மனிதனுக்குள் இருக்கும் அந்தப் பொருள் ''ஆத்துமா'' (மத் 10:28). அல்லது ''ஆவி'' என்றழைக்கப்படுகிறது. இந்த

மனிதனின் ஆத்துமா அறிவுள்ளதாகவும் (1 கொரி.2:11), உணர்ச்சியுள்ளதாகவும் இருக்கிறது. (தானியேல் 7:15).

### ஆத்துமாவின் ஆரம்பம்

மனித ஆத்துமாவின் ஆரம்பத்தைப்பற்றி என்ன விளக்கம் கூற முடியும்? இந்த கேள்விக்கான வித்தியாசப்பட்ட விடைகளை தருகின்றனர். முதலாவது, புராதன யூத ரபீக்கள் முன்னமே ஆத்துமா இருந்ததாக நம்பினர். வேறு சில மதப்பற்றுடைய வர்கள் சரீரம் உண்டாவதற்கு முன்னமே ஆத்துமா இருந்ததாகவும், சரீரம் உருவான பிறகு தேவன் அந்த சரீரத்துக்குள் விலையுயர்ந்த முத்து ஆத்துமாவை அனுப்புவதாகவும் நினைக்கின்றனர்.

சீஷர்கள் ஒருமுறை, பிறவியிலே குருடனாகப் பிறந்த ஒருவனைப் பற்றி ஒரு கேள்வி கேட்டனர். இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம். இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ (யோவான் 9:2). ஆத்துமா சரீரம் விட்டு சரீரம் குடி பெயருவதாகக் கேல்வின் கூறி இருந்தாலும், அப்படிப்பட்ட கண்ணோட்டம் நமக்குத் தேவையில்லை. குழந்தைகள் தாயின் கர்ப்பத்திலே பாவம் செய்யக் கூடும் என்று சில யூத ரபீக்கள் விவாதித்திருக்கின்றனர். பிறக்குமுன்னமே ஏசா, தன் சகோதரன் யாக்கோபை கொல்ல முயற்சித்ததாக அவர்கள் கூறினார்கள். இப்படிப்பட்ட எண்ணங்களில் எந்தவித நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை. சரீரத்துக்கு முன்னமே ஆத்துமா இருந்ததாக வேதாகமத்தில் எந்த சான்றுமில்லை.

இரண்டாவது, சரீரத்தை போலவே ஆத்துமாவும், பெற்றோரிடமிருந்து (வம்சாவழியாக) பரம்பரையாக பெற்றுக் கொள்வதாக நினைக்கின்றனர். இவ்விதமாக வம்சாவழியாகப் பெற்றுக் கொண்ட ஆத்துமா மூலம் ஆதாமுடைய பாவத்தின்

களங்கம் எல்லா மனிதர்களுக்கும் பரவியது. இதற்கும் வேதாகமத்தில் எந்த சான்றுமில்லை. இப்படிப்பட்ட தத்துவங்களால் மேலும் சில பெரிய பிரச்சனைகள் எழும்பும். உதாரணமாக, மரியாளிடமிருந்து, இயேசு களங்கப்பட்ட ஆத்துமாவைப் பெற்றுக் கொண்டார். ஆத்துமா பாவம் வம்சாவழியாக பெற்றுக் கொள்வதானால், அதற்கு தனிப்பட்ட ரீதியில் அவனுடைய நடத்தைக்கு அவனே பொறுப்பாளியாகிறான்.

ஆத்துமா உண்மையிலே தேவனால் சிருஷ்டிக்கப்பட்டது என்றும், சரீரத்துக்குள்ளாக வைக்கப்பட்டது என்றும் வேதாகமம் போதிக்கிறது.

☆☆☆☆☆☆

## மனுக்குலம் ரட்சிக்கப்படுவதற்கான தேவனுடைய திட்டம்

1. சுவிசேஷத்தை அறிவியுங்கள். (மாற்கு 16:15,16, 1 கொரி 15:1-4)
2. இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பவன், (யோவான், 8:24, ரோமர் 1:5, எபி 11:6)
3. பழைய பாவங்களை விட்டு தேவனிடத்தில் மனந்திரும்பியவன் (லூக்கா 13:3,5 அப் 17:30, 2 பேதுரு 3:9)
4. இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று வாயினால் மனுஷர் முன்பாக அறிக்கை இடுபவன் (மத்தேயு 10:32, ரோமர் 10:9,10, அப் 8:37)
5. பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுகிறவன், (மத்தேயு 28:18-20, அப் 2:38, ரோமர் 6:3,4,17,18, மாற்கு 16:6)
6. ரட்சிக்கப்படுகிறவனை கர்த்தர் (கிறிஸ்து) தம்முடைய சபையிலே சேர்க்கிறார். (மத்தேயு 16:18, அப் 2:47, ரோமர் 16:16)
7. மரணபரியந்தம் உண்மையுள்ளவனாக ஜீவித்தால் (ஜீவகிரீடம்) பரலோகம் செல்வான் (வெளி 2:10)

- *பி.ஆர்.எஸ்*

# கிறிஸ்துவுடனே சிலுவையில் அறையப்பட்டிருக்கிறீர்களா?

பவுல் கலாத்திய நாட்டு சபைகளுக்கு எழுதுகிறபோது, அவர் கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டதாகக் ஆச்சரியத்துடன் கத்திக் கூறுகிறார். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அநேக பாடுகளை அனுபவித்தவர் என்றாலும் அவர் கூறியதின் அர்த்தம் என்ன சரீர பிரகாரமாக சிலுவையிலறையப்படுதலைப் பற்றி கூறி இருக்க மாட்டார். அவர் பல தடவை சிறையலடைக்கப்பட்டார். மிலாதுகளால் அடிபட்டார். ஒரு தடவை கல்லெறியுண்டு குற்றுயிராக விடப்பட்டார். கப்பற் சேதத்தில் மூன்று முறை இருந்தார். இவ்வளவு கஷ்டப்பட்டவர், ரோமபுரியில், சிரத்சேதம் பண்ணப்பட்டார், மரித்ததாக பாரம்பரியம் கூறுகிறதே தவிர, சிலுவையிலறையப்பட்டார் என்று கூறவில்லை. அவர் எப்படி மரித்தார் என்று யாருக்கும் தெரியாது.

பவுல் கிறிஸ்துவுடனே கூட சிலுவையிலறையப்பட்டேன் என்று கூறும் பொழுது அடையாள மொழியிலே, உருவக அணியிலே கூறுகிறார். (அப். 22:16)-ல் சவுலே நீ எழுந்து ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று கூறப்பட்ட போது, அது ஒரு அடையாள மொழியில் கூறப்பட்ட சிலுவையிலறையப்படுதலாகும். பவுலுக்கு மாத்திரமல்ல, கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவனும் (ரோமர் 6:3-7, கலாத்தியர் 3:27). ஆவிக்குரிய நிலையில் சிலுவையிலறையப்பட்டிருக்கிறான்.

ஞானஸ்நானத்தைப் பற்றி, ரோமாபுரி கிறிஸ்தவர்களுக்கு விளக்கும் போது, பவுல், ரோமர் 6:5-6. இந்த வாக்கியம் ஞானஸ்நானத்தைக் குறிக்கும்.

ஞானஸ்நானத்தை சிலுவையிலறையப்படுவதற்கு ஒப்பிட்டு (இந்த வாக்கியத்தில்) பேசும் பொழுது, பவுல் 3,4 வசனங்களில் தான் விளக்கத்தை கூறி முடிக்கிறார். கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ் நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ் நானம் பெற்றதை அறியாதிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையி னாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு அவருடைய மரணத்துக்குள்ளாக்கும். ✪✪✪✪✪

# ஞானஸ்நானம் என்பது என்ன?

- டேவிட் மருப்

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரி வாழ் கிறிஸ்தவர்களுக்கு எழுதுகையில், நாம் ஞானஸ்நானம் பெறும்போது நடைபெறும் மூன்று விஷயங்களைக் குறிப்பிடுகிறார்.

***1. கிறிஸ்துவோடு மரிக்கிறோம் (ரோ 6:3).***

ஞானஸ்நானம் பெறும்போது அநேகர் செய்யத் தவறுவது இது. கிறிஸ்துவோடுகூட மரிக்காமலே அவரோடு கூட அடக்கம் பண்ணப்படுவது சாத்தியமல்ல. ''கிறிஸ்துவோடு மரித்தல்'' என்பது ''சுயம் செத்துப்போதல்''. எஸ்.டி.கார்டன் இதை அழகாக சித்தரிக்கும்போது பின்வருமாறு கூறுகிறார். 'மீட்கப்பட்ட ஒருவனின் உள்ளத்தில் ஒருபுறம் ஒரு சிங்காசனமும், மறுபுறம் ஒரு சிலுவையும் உள்ளது. சுயம் எங்கே ஆட்சி செய்கிறதோ, (சிங்காசனத்தில் உட்கார்ந்திருக் கிறதோ) அங்கே கிறிஸ்து சிலுவையில் தொங்குகிறார். ஆனால் சுயம் எங்கே சிலுவையிலறையப்படுகிறதோ அங்கே கிறிஸ்து சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆளுகிறார்''.

எனவே இந்த முக்கியமான கேள்விக்கு முதலாவது பதில் சொல்லுவோம். ''நான் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன் என் சுயத்தை சிலுவையிலறைந்தேனா?'' (கொலோ. 3:5-7). சுயம் செத்துப்போகாமல், இன்னும் உயிரோடிருந்து கொண்டு, சிங்காசனத்தில் வீற்றிருந்து நம்மை ஆட்சி செய்து கொண்டிருந்தால் நாம் ஒரு கிறிஸ்தவராக செயல்படவே முடியாது.

***2. கிறிஸ்துவோடு புதைக்கப்படுகிறோம். (ரோம 6:4).***

ஞானஸ்நானம் என்பது அடக்கம் பண்ணுதல் என்று மேற்கூறிய வசனக் குறிப்பு எடுத்துரைக்கிறது. எனவேதான்

இந்த அடக்கத்திற்கு மிகுதியான தண்ணீர் தேவைப்படுகிறது. (அப்8:38, யோவான் 3:23).

**3. கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழும்புகிறோம் (ரோ 6:4).**

"நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு" தான் ஞானஸ்நானம் பெறுகிறோம். எனவே ஞானஸ் நானத்திற்குப் பிறகு நாம் ஒரு புதிய சிருஷ்டியாய் மாற்ற மடைகிறோம் (2 கொரி 5:17). பழைய மனுஷனை கழற்றிப் போட்டவர்களாய் மாறிவிட்டோம். (எபேசி 4:22). முன்பிருந்த வாழ்க்கைக்கும் இப்போதுள்ள நம் நடவடிக்கை களுக்கும் இடையே ஒரு பெருத்த மாற்றத்தைப் பிறர் காண வேண்டும்.

ஞானஸ்நானம் என்பது என்னவென்று இப்பொழுது தெளிவாய்ப் புரிகிறதா? நீங்கள் ஒருவேளை இதுவரை ஞானஸ்நானம் பெறாதவராயிருந்தால் இப்பொழுதே முடி வெடுத்து அவருடைய சரீரமாகிய சபையில் இணைக்கப் படலாமே! அதிலே எந்தவிதமான ஆக்கினைத் தீர்ப்புமில்லை (ரோ 8:1). ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவுக்குள் பிரவேசித் தால் பாவமன்னிப்பையும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அனைத்தையும் பெற்று அனுபவிக்கலாம். (எபேசி 1:3, 7). நீர் ஞானஸ்நானம் பெற்றவராயிருந்தால் கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணுவதற்கு முன் அவரோடு சிலுவையில் அறையப் பட்டீர்களா? இப்போது உங்கள் ஜீவியத்தில் ஓர் புது மாற்றம் காணப்படுகிறதா? அப்படியானால் மிக்க நன்று.

★★★★★★

**கீழ்ப்படிதல்**

" பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள்." - எபேசி 6:1.

# தேவ அத்தாட்சி பெற்ற அன்னை மரியாளை வணங்குதல் எவ்விதம் தவறாகும்?

*- கேரி வாக்மேன்*

''எவனைக் கனம் பண்ண வேண்டியதோ அவனை கனம் பண்ணுங்கள்'' என்று வேதம் சொல்லுகிறது. (ரோ 13:7). எனவே, மரியாதைக்குரியவர்களுக்கு மரியாதையளிப்பதிலோ, சாதனை புரிந்தவர்களை புகழ்வதிலோ எவ்விதமான தவறு மில்லை. ஆனால் தேவனைத் தவிர வேறொருவரை வணங்கு வதோ, ''சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியை தொழுது சேவித்தல்'' ஆகும். (ரோமர் 1:25). மரியாள் விஷயத்திலும் மக்கள் இதே தவறை செய்து போனார்கள். மரியாளின் சிலைக்கு முன்பாக மண்டியிடுதல், மரியாளை நோக்கி மன்றாடுதல், கும்பிடுதல் போன்ற ஆசாரங்களுக்கு அளவே யில்லை. ஆனால் மரியாளைக் குறித்து வேதம் என்ன சொல்லு கிறது?

***1. மரியாள் ஓர் சிறந்த பெண்மணி தானே*** தவிர ***தெய்வம் அல்ல***. (லூக் 1:28-30). ஒரு பெண்ணி டத்தில் இயேசு உற்பவித்ததினால் தான் அவர், ''மனுஷ குமாரன்'' என அழைக் கப்படுகிறார். (மத் 8:20). மரியாள் இயேசுவை பெற்றெடுப் பதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே இயேசு மரியா ளின் சிருஷ்டிகர் என்பதை நாம் மறக்கலாகாது. (யோவான் 1:3, கொலோ 1:16). மேலும் பாவத்தில் கிடப்பவர்களுக்கு தானே இரட்சிப்பு தேவைப்படுகிறது. அப்படியிருக்கும் போது ''அமலோற்பவம்' (பாவமேயில்லாத) என்று அநேகர் அழைக்கின்ற மரியாள், தேவனை நோக்கி, ''என் இரட்சகராகிய தேவன்'' என்று சுட்டிக் காட்டுவதைக் கவனியுங்கள். (லூக் 1:47)

***2. மரியாள் இயேசுவை கர்ப்பந்தரித்தபோது ஒரு கன்னிகை*** (மத் 1:23; லூக் 1:27).

தீர்க்கதரிசனத்தில் உள்ளபடியே, இயேசுவை கருத் தரிக்கும் போது மரியாள் ஒரு வாலிப கன்னிகையாக இருந்தாள் (ஏசா 7:14). ஆனால் அவள் எப்போதுமே ''கன்னி மரியாள்'' என்ற கருத்து தவறானது. இயேசுவைப் பெற்றெடுத்த பிறகு (மத் 1:25) அவளுக்கும் யோசேப்புக்கும் மேலும் நான்கு ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் பிறந்துள்ளனர். (மத் 13:55-56, மாற் 6:3)

***3. மரியாள்*** ''ஸ்திரீகளுக்குள் பாக்கியவதி என்று தான் வேதம் சொல்லுகிறதே ஒழிய மற்ற எல்லா ஸ்திரீகளுக்கும் மேலானவர் என்று சொல்லவில்லையே! (லூக் 1:42). தேவன் ஒருவரை மட்டுமே நாம் வணங்க வேண்டும். (மத் 4:10) வேறு யாரையும் நாம் வணங்குதல் தவறு.

***4. மரியாள் ஜென்ம சரீரத்தோடு மோட்சம் செல்லவில்லை.***

இந்த பூமிக்குரிய உடலோடு மரியாள் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாக சிலர் 1950-ம் வருடத்தில் பிரகடனப்படுத்தினர். ஆனால், 1 கொரி 15:50-ல் ''மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை'' என்று எழுதியிருக்கிறதே! பூமியில் பிறந்த எல்லோருமே, மரியாளும் கூட இயேசுவானவரின் இரண்டாம் வருகையில் உயிரோடு எழுப்பப்படுவார்கள் (1 கொரி 15:23; யோவா 5:28,29). மனுஷரில் யாருமே இதுவரை பரலோகத் திற்குள் பிரவேசிக்கவில்லை என வேதம் திட்டவட்டமாகக் குறிப்பிடு கிறது. (யோவா. 3:13).

யாரையும் கனப்படுத்துவது தவறல்ல, மாறாக அவர்களை தெய்வமாக்கி வணங்குவது முற்றிலும் தவறானது.

******

# ஆவிகளைப் பரிசோதித்தல்

- ரே ஹாக்

முதல் நூற்றாண்டில், சபையில் அற்புத வரங்கள் காணப் பட்ட சமயத்தில், அந்த வரங்கள் தங்களுக்கும் உண்டு என்று கூறித் திரிந்த கள்ளப் போதகர்களும் இருந்தார்கள். இன்றும் அதே வரங்களையும் வல்லமைகளையும் உடையவர்களென தங்களைப் பறைசாற்றிக் கொள்ளும் மக்கள் உண்டு.

1 யோவான் 4:1ல் தேவன் கூறுவதாவது, ''பிரியமான வர்களே, உலகத்தில் அநேகம் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றி யிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்து அறியுங்கள்''.

ஒரு கள்ளப் போதகனை பரிசோதித்துப் பார்க்க முதல் நூற்றாண்டில் பரிசுத்த ஆவியானவர் ஒரு பரிசோதனை முறை யைக் கொடுத்திருப்பாரானால் அதே வழிமுறையைக் கொண்டு இந்த 20-ம் நூற்றாண்டில் அற்புத வரங்களைப் பெற்றவர்கள் என்று தங்களை கூறிக்கொள்ளும் நபர்களையும் பரிசோதித்துப் பார்க்க முடியும்.

அந்த நபர் கூறுவது உண்மையா அல்லது வெறும் வறட்டு வாதம் தானா என்பதை அந்தப் பரிசோதனை நிரூபித்து விடும்.

பவுலின் அப்போஸ்தலத்துவத்தைப் பற்றி சிலர் கேள்வி எழுப்பியபோது, தான் ஒரு அப்போஸ்தலன்தான் என்று கொரிந்து சபையினர் நன்கு அறிவார்களென்றும், அவர்கள் கர்த்தருக்குள் பவுலின் அப்போஸ்தல ஊழியத்திற்கு முத்திரை யாயிருக்கிறார்கள் என்றும் பதில் கூறுகிறார். (1 கொரிந்தியர் 9:1).

அப்போஸ்தலர் மட்டுமே பிறர் மீது கைகளை வைத்து அற்புத வரங்களை அளிக்க முடியும். (அப். 8:17,18). பவுல் கொரிந்துவில் ஊழியம் செய்தபடியால், அங்கு இருந்த சிலர் அவன் மூலம் இந்த வரங்களைப் பெற்றுக் கொண்டனர். அவ்விதம் அவர்கள் அவ்வரங்களைப் பெற்றதனால் அவன் மெய்யாகவே ஒரு அப்போஸ்தலன்தான் என்பது நிரூபிக்கப்பட்டது.

சிலர் தங்களுக்கு அற்புத வரங்கள் உண்டென்று சொல்வது உண்மையல்ல என்பது பவுலுக்குத் தெரிந்திருந்தது. இவர்களைப் பரிசோதித்துப் பார்க்க பரிசுத்த ஆவியானவர் அவனுக்குத் தந்தருளின வழி முறை இதோ; பவுல் கூறுவதாவது, ''ஆகிலும் கர்த்தருக்கு சித்தமானால் நான் சீக்கிரமாய் உங்களிடத்தில் வந்து, இறுமாப்படைந்திருக்கிறவர்களுடைய பேச்சையல்ல, அவர்களுடைய பெலத்தையே அறிந்து கொள்ளுவேன். தேவனுடைய இராஜ்ஜியம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது' (1 கொரிந் தியர் 4:19, 20).

உரிமை கோருதல் யாராலும் செய்ய முடியும். ஆனால் வெறும் உரிமை கோருதல் அற்புதங்களாகாது. இன்று அற்புத வரம் பெற்றவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்பவர்கள் பவுல் கூறும் பரிசோதனைக்கு உடன்படமாட்டோம் என்கிறார்கள்! ஒரு அற்புதத்தைச் செய்து காட்டி தங்கள் வாதத்தை நிரூபிப்பதை விட்டுவிட்டு, இந்தப் பரிசோதனையிலிருந்து நழுவுவதிலேயே குறியாயிருக்கிறார்கள்.

ஒருவனுக்கு அற்புத சக்தியிருந்தால் அவன் அதை நிரூபித்துக் காட்டுவான் என்பதுவே பவுலின் கருத்து. அவன் சொல்வது பொய்யானால் அவனால் அதை செயலில் காட்ட முடியாது. அற்புத அடையாளங்கள் செய்யும் வரமுள்ளவர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் பிரசங்கியார்களிடம்

தனிப்பட்ட முறையில் நான் பலமுறை சவால் விட்டதுண்டு. பவுலின் பரிசோதனை முறைக்கு தங்களை உடன்படச் சொன்ன என்மேல் சினங்கொண்டதைத் தவிர வேறு எந்த ஒரு அற்புதத்தையும் ஒருவனும் செய்யவில்லை. பரிசுத்த ஆவியானவர் தாமே இந்தப் பரிசோதனையை அருளியிருக்கிறார். ஆனால் அவர்கள் எல்லாரும் இதிலே தோற்றுப் போனார்கள்.

இன்று ஒருவன் தான் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்று, அற்புத அடையாளங்களை நடப்பிக்க முடியுமென்று கூறி னால் அவன் தனது கூற்றினை அடையாளங்களால் நிரூபிக்கச் சொல்லுங்கள். எந்த அடையாளங்கள்?

***விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன :***

என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளை பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றை குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.

இவ்விதமாய் கர்த்தர் அவர்களுடனே பேசின பின்பு, பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டுப் போய் எங்கும் பிரசங்கம்பண்ணி னார்கள். கர்த்தர் அவர்களுடனே கூட கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். (மாற்கு 16:17 - 20).

அற்புத வரம் தனக்குண்டு என்று வாதிடும் ஒருவனால் இந்த அடையாளங்கள் நடைபெறவில்லை என்றால் அவ னோடு தேவன் இல்லை என்பது உறுதி. அந்த வல்லமை அவனிடமில்லை என்பது அவன் ஒரு கள்ளப் போதகன் என்பதைக் காட்டுகிறது.

இந்த பிரசங்கிமார்களில் ஒருவராவது விஷப் பாம்புக் கடிக்கு முன் வருவதில்லை. இவர்களில் ஒருவராவது நான் கொடுக்கும் விஷத்தைக் குடிக்க முன்வருவதில்லை. இவர் களில் ஒருவராவது மருத்துவமனைக்குச் சென்று நோயாளிகள் எல்லோரையும் குணமாக்கி வீட்டுக்கு அனுப்ப முன் வருவ தில்லை. இவர்களில் ஒருவராவது தான் முன்பின் அறியாத ஒரு மொழியை பேச முடிவதில்லை.

பரிசுத்த ஆவியானவரின் பரிசோதனைக்கு உடன்பட மறுக்கும் இவர்கள் கள்ளப் போதகர்கள் என்பது நிதர்சனமான உண்மை. மாற்கு 16:17, 18ல் கூறப்பட்டுள்ள அடையாளங் களை இவர்கள் செய்ய இயலாமற்போனதினால், இவர்களோடு தேவன் இல்லை என்பது உறுதியாகிறது. ஏனெனில், தேவன் தம்முடைய உண்மை சீஷர்களுக்கு ஒத்தாசை புரியத் தவற மாட்டார்.

அற்புத வரம் தனக்கு உண்டு என்று வாதிடும் எந்த ஒருவனும் அதை உண்மையென்று நிரூபிக்க முன் வருவான், ஒரு அடை யாளத்தைச் செய்து இதை உறுதிப்படுத்த ஆசைப்படு வானே!

✣✣✣✣✣✣✣

# பெலனுண்டு

**"என்னைப் பெலப்படுத்துகிற**

**கிறிஸ்துவினாலே**

**எல்லாவற்றையும் செய்ய**

**எனக்கு பெலனுண்டு"**

- பிலிப்பியர் 4:13

# கிறிஸ்தவ ஆராதனையில்

## வாத்தியக் கருவிகளுடன் கூடிய இசை : தேவனிடமிருந்தா? மனிதனிடமிருந்தா?'

- கென் டைலர்

இந்த கேள்விக்கு விடை காண வேண்டுமென்றால் நாம் புதிய ஏற்பாட்டிற்குச் சென்று, முதல் நூற்றாண்டு ஆராதனையில் வாத்தியக் கருவிகளுடன் கூடிய இசை இருந்ததா என்று பார்க்க வேண்டும்.

புதிய ஏற்பாட்டில் இந்தக் கேள்விக்கு 10 வேத வசனப் பகுதிகள் எளிமையான விடைகளைத் தரும்.

1. ''அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடினபின்பு, ஒலிவ மலைக்கு புறப்பட்டுப் போனார்கள்'' (மத்தேயு 26:30)
2. மாற்கு 14:26ல் மத்தேயு 26-30ல் சொல்லப்பட்ட அதே கருத்து குறிப்பிடப்பட்டுள்ளது.
3. ''நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப் பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டு இருந்தார்கள்'' (அப். 16:25)
4. ''புற ஜாதியாரும் இரக்கம் பெற்றதின் நிமித்தம் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள் என்றும் சொல்லு கிறேன். அந்தப்படி ''இதினிமித்தம் நான் புற ஜாதிகளுக் குள்ளே உம்மை அறிக்கை பண்ணி, உம்முடைய நாமத் தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன் என்று எழுதியிருக் கிறது''. (ரோமர் 15:9)

5. ''இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்;நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்''(1கொரிந்தியர் 14:15).

6. ''சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணி'' (எபேசியர் 5:19)

7. ''கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாடி.'' (கொலோசெயர் 3:16).

8. ''உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்து பாடுவேன்.. (எபி. 2:12).

9. ''ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம்''. (எபி. 13:15).

10. 'உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம்பாடக்கடவன்'' (யாக்கோபு 5:13).

இந்த வசனப்பகுதிகளைப் படிக்கின்ற நேர்மையுள்ள எவருமே, புதிய ஏற்பாட்டில், பாடுவதைப் பற்றி மட்டுமே வாசிக்க முடிகிறது என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். சபையில் பியானோ, ஆர்கன் போன்ற எந்தவிதமான வாத்தியக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டதாக, எந்த

வேதவசனப் பகுதியிலும் குறிப்பிடப்படவில்லை; கிறிஸ்தவர்கள் பாடல் பாடினார்கள்! எனவே கிறிஸ்தவஆராதனையில் வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தும் காரியம் மனிதனால் உண்டானதே தவிர தேவனிடமிருந்து வந்ததல்ல!

சபை உருவாகி நூற்றுக் கணக்கான ஆண்டுகள் ஆன பிறகு தான் கிறிஸ்தவ ஆராதனையில் வாத்தியக் கருவிகள் புகுத்தப்பட்டன. கிறிஸ்துவுக்கு பின் 670 வருடம் கழித்துத் தான். முதன் முதலில் ஒரு ஆர்கன் கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிறவர்களின் ஆராதனையில் புகுத்தப்பட்டது.

முதல் விட்டாலியன் என்ற ஒரு போப்பு தான் இந்தக் காரியத்தை செய்தவர், ஆயினும் இது ரோமன் கத்தோலிக்க சபையில் பிளவை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தில் ஆர்கன் என்ற வாத்தியக் கருவி நீக்கப்பட்டது.

பின்னர் 800 ஆண்டுகள் கழித்து மிகுந்த எதிர்ப்பின் மத்தியில் ஆர்கன் ரோமன் கத்தோலிக்க சபையில் மீண்டும் புகுத்தப்பட்டது. இதற்கு கிரேக்க கத்தோலிக்க சபை எதிர்ப்பு தெரிவித்து இன்றுவரை வாத்தியக் கருவிகளை பயன்படுத்துவதில்லை.

இயேசுவானவர் ஸ்தாபித்த சபையின் ஆராதனையில் எந்தக் காலத்திலும் வாத்திய கருவிகளுடன் கூடிய இசை இருந்ததில்லை என்பதை நாம் திட்டவட்டமாக அறிந்து கொள்ள வேண்டும். புதிய ஏற்பாடு இதை அங்கீகரிக்கப்பதில்லை. கிறிஸ்துவுக்கு பின்னர் பல நூற்றாண் டுகள் கழித்துத்தான் இந்தப் பழக்கம் உண்டானது என்று உலக சம்பந்தமான சரித்திரம் காட்டுகிறது.

வாத்தியக்கருவிகளுக்கு ஆதரவாக சிலர் அடிக்கடி கூறும் வாதத்தை நான் இந்த சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன். ''பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இசைக் கருவிகள் பயன்

படுத்தப்படவில்லையா?'' என்று அநேகர் கேட்கிறார்கள். ''ஆம்'' என்பதே இதற்குரிய பதில். எடுத்துக்காட்டாக, சங்கீதம்150ல் தேவனைத் துதிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பல்வேறு வாத்தி யக் கருவிகள் சொல்லப் பட்டுள்ளன. ஆயினும், பழைய ஏற்பாட்டில் ஒரு காரியம் செய்யப்பட்டது என்பதற்காக புதிய ஏற் பாட்டுக் காலத்திலும் அதைச் செய்து கொள்ளலாம் என்று நாம் நினைக்கலாகாது. ஒருவேளை ''நீங்கள்'' ஏன் பழைய ஏற்பாட் டின்படியான மிருக பலிகளையும், தூபம் காட்டுதலையும் இன்று உங்கள் ஆராதனையில் செய்வது இல்லை?'' என்று கேட்டால் அதற்கு நீங்கள், ''மிருக பலிகளும், தூபங்காட்டுதலும் பழைய ஏற்பாட்டுக் கால ஆராதனையின் காரியங்கள்'' என்று பதில் சொல்வீர்கள். உங்கள் பதில் சரியானதே! ஏனென்றால் நாம் இப்போது மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி வாழ்கின்ற வர்கள் அல்ல. (ரோமர் 7:4-7; 2 கொரிந்தியர் 3:7-11; கொலோசெயர் 2:14). நாம் இன்று ஆராதனையில் எவை களைச் செய்கிறோமோ அவைகள் கிறிஸ்துவின் புதிய பிர மாணத்தில் கட்டாயம் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டு வாத்தியக் கருவிகளின் இசைக்கு கிறிஸ்தவ ஆராதனையில் உரிமை இருக்குமானால் அதே உரிமை மிருக பலிகளுக்கும் தூபங்காட்டுதலுக்கும் உண்டு தானே!

முதல் நூற்றாண்டு சபை ஆராதனையில் வாத்தியக் கருவி கள் காணப்படவில்லை. பாட வேண்டுமென்ற கட்டளையே கிறிஸ்தவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. தேவன் காட்டும் வழி நமக்கு போதும்! ''தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்'' என்றார் இயேசு! (யோவான் 4:24) ✧✧✧✧✧

# வேதப்படிப்பு [கல்வி] முக்கியமானது

- ஜோ. ஸ்பாங்ளர்

***நாம் வேதாகமத்தின் மூலம் நியாயம் தீர்க்கப்படுகின்றோம்.***

இந்தப் பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனும் இயேசு கிறிஸ்துவின் முன்பாக நியாயத் தீர்ப்புக்கு முன் நிற்பான். இது நிச்சயிக்கப்பட்டது. இதில் இருந்து ஒருவரும் தப்பமுடியாது. (அப் 17:30,31, ; ரோமர் 2:1-16 ; ரோமர் 14 : 11,12).

இது கிறிஸ்துவின் வசனம் (யோவா 12:48), சுவிசேஷம் (ரோமர் 2:16) எனவும், வேதாகமத்தின் அடிப்படையில் தான் கடைசி நாள் நியாயத் தீர்ப்பு நடைபெறும் என்றும் நாம் காண்கிறோம்.

ஆகவே வேதவாசிப்பு மிக முக்கியமானதாகப் பார்க்கிறோம். இது இல்லாமல் ஒருவன் அறியா மைத்தனத்தினால் நித்திய ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுகிறான். "நீ வெட்கப் படாத ஊழியக் காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக் கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. (2 தீமோ. 2:15).

***இரட்சிப்பு இதன் மேல் சார்ந்திருக்கிறது.***

வேத அறிவு இல்லாமல் ஒருவர் பாவத்தில் வீழ்ந்து அழிந்து போகிறான். மன்னிப்பைப்பற்றியும், நித்தியத்தைப்பற்றியும் அறிந்துகொள்ள வேண்டுமென்றால் நாம் தேவனுடைய வார்த்தைகளைப் படிக்க வேண்டும். யோ 5:39ல் இயேசு, "வேத

வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள், அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவனுண்டு என்று......... " கூறினார்.

ரோமர் 1:16ல் "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்... இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாய் இருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

இரட்சிப்பு கிறிஸ்துவுக்குள் இருக்கிறது (2 தீ 2:10), அவரிடத் தில் முதலாவது கற்றுக் கொண் டால்தான் அவரிடத்தில் சேர்ந்து இரட்சிப்பு அடைய முடியும் (யோ 6:44, 45).

***விசுவாசத்தைப் பிறப்பிக்கிறது.***

விசுவாசத்தின் முக்கியத்துவத்தை பார்ப்போமானால் வேதாகம வாசிப்பின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடியும். "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" (எபிரெயர் 11:6). "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் 10:17). விசுவாசமில்லாமல் இரட்சிப்பைப் பற்றி எண்ணிப்பார்க்க முடியுமா? ஆகையினால் தேவனுடைய இரட்சிப்புக்கு ஏதுவான விசு வாசத்தின் அறிவு இல்லாமல் இரட்சிப்பு இல்லை.

***இதன் மூலமாக வளர்ச்சி உண்டாகிறது.***

ஆவிக்குரிய எல்லா வளர்ச்சிக்கும் வேத வாசிப்பு தேவை. எபேசி 4:15 வசனத்திலும் அதற்கு முன் வசனத்திலும் கூறப் பட்டுள்ள சாராம்சம் என்னவென்றால், கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சி யடைய வேண்டும் என்றால் கிறிஸ்துவைப்பற்றி அறிகின்ற அறிவு தேவை என்பதே. அவருடைய பிள்ளைகள் வளர வேண்டும் என்பதற்காக, தேவன், போதகர் மற்றும் தீர்க்கதரிசிகளின் மூலம் இந்த வார்த்தைகளை வெளிப்படுத்தினார்.

முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வார்த்தைகள் இன்று 21ம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு பிரயோஜனமாக உள்ளது. (2தீமோ 3:16-17, 2 பேதுரு 3 : 15,16).

உண்மையான வளர்ச்சி தேவ வசனமாகிய பாலின் மூலமாகவும், வேதவசனமாகிய மாமிசத்தின் மூலமாகவும் கிடைக்கிறது.(எபிரெயர்5:13,14). ''பாலுண்கிறவன் குழந்தையாய் இருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்''. மேலும் 1 பேதுரு 2:2 காண்க.

***சந்தோஷம் இதனுடைய கனி***

ஆவியின் கனிகள் சந்தோஷம், சமாதானம் (கலாத்தியர் 5 : 22) இந்தச் சமாதானமும் சந்தோஷமும் மற்ற எந்த சந்தோஷ சமாதானத் திலும் இல்லை (பிலிப்பியர் 4:7). இந்தச் சந்தோஷமும், தேவனுடைய வசனமாகிய ஆவியின் பட்டயத்தினால் உண்டாகிறது. (எபேசி 6:17).

உண்மையான சந்தோஷம் உலகப்பிரகாரமான மனிதனால் தர முடியாது. எல்லாவற்றையும் உண்டாக்கிய நித்திய பிதாவினால் அவருடைய சிருஷ்டிகளுக்கு கிடைக்கிறது. ''கர்த்தாவே மனுஷனுடைய வழி அவராலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்'' (எரேமியா 10:23).

''உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது'' (சங்கீதம் 119:105). ''கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்'' (சங்கீதம் 1:1-2)

வேதவாசிப்பின் முக்கியத்துவத்தை, பார்க்கையில் எதிர் வரும் மாதங்களிலும், வருடங்களிலும் இன்னும் இரவும், பகலும் தியானித்து நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.

''அனேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம் (சங் 119 :72). ✡

# இயேசுவின் வாக்குத்தத்தம்

- ஜெரி ஜென்கின்ஸ்

2000 வருடங்களுக்கும் அதிகமான காலத்திற்கு முன்பு, எருசலேமுக்கு வடக்கில், சுமார் 120 மைல் தொலைவில் உள்ள எர்மோன் மலையடிவாரத்தில் இயேசு தமது சீஷர்களுக்கு ஒரு வாக்குறுதி கொடுத்தார்: ''மேலும் நான் உங்களுக்குச் சொல்கிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை'' (மத்தேயு 16:18). ஐந்து வருடங்களுக்குள் அவர் வாக்குக் கொடுத்த அந்த சபை, உலகத்தையே அசைக்கும் விதத்தில் அபரிமிதமாக வளர்ந்து, செழித்து நின்றது.

நம் ஆண்டவர் எதைக்கட்டினார்? அது ஒரு பூமிக்குரிய கட்டிடமோ, அரசியல் ஸ்தாபனமோ அல்லது ஒரு பொது நல சங்கமோ அல்ல. மாறாக, அது அவரது சரீரம், அவரது குடும்பம், அவரது இராஜ்ஜியம். ஓர் மாபெரும் இரட்சகரைக் குறித்தும் அவரது அன்பின் மேன்மையைக் குறித்தும் கால காலமாக பறைசாற்றுவதற் கென்றே இவர்கள் உருவானவர்கள்.

உலகின் எந்த நாட்டைச் சேர்ந்தவராயினும், ஆண் பெண் பாகுபாடின்றி இந்தச் சபையில் அங்கத்தினராகலாமென்ற ஓர் திறந்த வாய்ப்பு இருந்த போதிலும், சில நிபந்தனைகளுக்கு இவர்கள் கீழ்ப்படிய வேண்டும்.

அவையாவன :

1. இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் (யோவான் 8:24).
2. பழைய பாவங்களெல்லாவற்றையும் விட்டு மனந்திரும்புதல் (அப். 17:30)

3. இயேசுவின் விலையேறப்பெற்ற நாமத்தை அறிக்கையிடுதல் (மத்தேயு 10:32).

4. பாவமன்னிப்புக்கென்று கிறிஸ்துவின் அதிகாரத்தினால் ஞானஸ்நானம் பெறுதல் (அப் 2:38).

கர்த்தரின் குடும்பமாகிய இந்தச் சபையின் ஆராதனை அம்சங்களாவன : ஜெபம் (1 தெசலோனிக்கேயர் 5:17), பாட்டு (எபேசியர் 5:19), அப்பம் பிடுதல் (அப். 20:7), காணிக்கை அளித்தல் (1 கொரிந்தியர் 16:1,2), வேத போதனை (2 தீமோத்தேயு 2 :15)

எளிமைதான் இந்த ஆராதனையின் சிறப்பம்சம். இந்த ஆராதனையை பிரமாண்டமான ஓர் கட்டிடத்திலும் நடத்தலாம். அதே சமயத்தில் புல் வெளியின் ஓர் மரத்தடியிலும நடத்தலாம்.

பரமபிதாவின் உள்ளத்திற்கேற்ற மக்களாய் வாழ்ந்து அவர் நாமத்திற்கு மகிமை வரப் பண்ணுவதே இந்தக் குடும்பத்தின் நோக்கம். கிறிஸ்துவும் பிதாவுக்கு பிரியமாய் வாழவே விரும்பினார் என்பதை பின்வரும் கூற்று உறுதி செய்கிறது. ''பிதாவுக்கு பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால்....'' (யோவான் 8:29). ஆதி கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவையே தங்கள் முன்மாதிரியாகக் கொண்டு வாழ்ந் தார்கள் என்றால் (1 கொரிந்தியர் 11:1) இன்று நம்முடைய வாழ் வின் எல்லா காரியங்களிலும் அவரையே நமது முன்மாதிரியாகக் கொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

''இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள் ; ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார். (1 பேதுரு 2:21).

✧✧✧✧✧✧

# தேவ கிருபைக்கும் காணிக்கை கொடுத்தலுக்கும் உள்ள தொடர்பு

- டிக் சேன்யோ

தேவனுடைய கிருபைக்கும், நாம் காணிக்கைக் கொடுப்ப தற்கும் ஏதாவது சம்பந்தமுண்டா? என்ற கேள்விக்கு சிலர், ''இல்லை'' என்றே பதில் கூறுவர். ''கொஞ்சம் தொடர்பு உண்டு'' என்று கூறுவோரும் உண்டு. ஆனால் கிருபைக்கும், காணிக் கைக்கும் இணை பிரியாத சம்பந்தம் உண்டு என்று நான் உறுதி யாகச் சொல்லமுடியும்.

### *1. நம் தேவன் கிருபை அளிக்கிறவர்*

2 கொரிந்தியர் 8:9-15 வரையிலான வசனங்களில் காணிக்கை கொடுத்தலைப்பற்றி விவரமாக பேசப்பட்டுள்ளது. அதில் உள்ள ஓர் முக்கியப் பகுதியைக் கவனியுங்கள். ''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும்.... நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர் களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர் களாயுமியிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்..... தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்''. (2 கொரிந்தியர் 8:1,9; 9:8, 15).

தேவனுடைய கிருபையினால் நமக்குக் கிடைத்த ஓர் மாபெரும் ஈவுதான் இயேசு கிறிஸ்து (தீத்து 2:11, யோவான் 3:16; 2 கொரிந்தியர் 9:15). சகலமும் தேவன் அருளிய ஈவு என்பதுவே சரித்திரம் கூறும் சான்று! மனிதன் பெற்று

அனுபவிக்கிற சகல நன்மைகளும், தன் பிள்ளைகளுக்கு நன்மையான ஈவுகளைக் கொடுக்கின்ற கிருபையுள்ள தேவனைச் சுட்டிக் காட்டுகின்றன (யாக்கோபு 1:17). ''வாங்குகிறதைப் பார்க் கிலும் கொடுக்கிறதே பாக்கியம்'' என்ற இயேசு கிறிஸ்துவின் கூற்று எவ்வளவு உண்மையானது பாருங்கள். (அப் 20:35).

## 2. நாமும் கொடுக்கின்ற கிருபையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

பின்வரும் வசன பகுதியை வாசித்துப்பாருங்கள்.

''ஆதலால் தீத்து இந்த தர்ம காரியத்தை உங்களிடத்தில் தொடங்கினபடியே, அதை முடிக்கவும் வேண்டுமென்று அவனைக் கேட்டுக்கொண்டோம். அல்லாமலும், விசுவாசத் திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதை யிலும், எங்கள் மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக்கிறது போல, இந்த தர்ம காரியத்திலும் பெருக வேண்டும்''. (2 கொரிந்தியர் 8:6, 7),

சுவிசேஷ ஊழியத்திற்கு நாம் பண உதவி அளித்து தாங்கும்போது நாம் கிருபை நிறைந்தவர்களாயிருக்கிறோம். அதுபோலவே, நாம் நம்முடைய குடும்பங்களுக்கும் நண்பர் களுக்கும் நம் நேரத்தை செலவிடும்போதும், கிறிஸ்துவின் நாமத்தில் வரும் ஒரு நபருக்கு ''ஒரு கலசம் தண்ணீர்'' கொடுக்கும் போதும், ஒரு ஆத்துமா இரட்சிக்கப்பட உதவி செய்யும் போதும், நாம் கிருபை நிறைந்தவர்களாயிருக் கிறோம். கிருபையும் காணிக்கை கொடுத்தலும் இணைபிரியாத தொடர்பு டையவை. இந்த இரண்டு விஷயங்களிலுமே நாம் நம்முடைய பரம பிதாவைப் போலவே இருக்க வேண்டும். (எபேசியர் 5:1 பார்க்கவும்). ******

# நாம் யார்?

*- டான்.ஆர். ஓவன்*

மிகவேகமாக மாறி வரும் இன்றைய உலகில், சபைக்கு ஓர் அத்தியாவசிய தேவை ஏற்பட்டிருக்கிறது. சபையின் தனித் தன்மையைப் பற்றிய உணர்வுதான் அது. கிறிஸ்தவர்களில் அநேகருக்கு சபையைப் பற்றிய சரியான மதிப்பீடு இல்லை! நாம் யார் என்பதைக் குறித்தோ, நம்முடைய உரிமை என்ன என்பதைக் குறித்தோ உறுதியற்றவர்களாயிருந்து கொண்டிருக் கிறோம்.

நாம் கிறிஸ்துவின் சபையாக இருக்கிறோம். அவர் பழைய ஏற்பாட்டிலுள்ள அனைத்து தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலாய் இவ்வுலகில் வந்தார். அவர், பூமியிலுள்ள எல்லா ஜாதிகளையும் ஆசிர்வதிக்க வந்த ஆபிரகாமின் சந்ததியாகவும், தேவனுடைய இராஜ்யத்தை ஆள வந்த தாவீதின் வம்சத்து இராஜாவாகவும, சகல ஜனங்களையும் ஆட்சி செய்யும் தானியேல் தீர்க்கதரிசனத்து மனுஷ குமாரனாகவும் முன்னுரைக்கப்பட்டிருந்தார்.

தம்முடைய ஆட்சிக்குட்பட்டவர்கள் தேவனுடைய மகா விருந்தின் அழைப்பை ஏற்றுக்கொண்டவர்கள் என்று இயேசு வானவர் குறிப்பிட்டார். இவர்கள், மனந்திரும்பி, தன் தகப்பனு டைய வீட்டிற்கு திரும்பி வந்த இளைய குமாரனைப் போல தேவனுடைய வீட்டிற்கு வந்து சேர்ந்தவர்கள். இவர்கள், தொலைந்துபோய், மேய்ப்பனால் தேடிக் கண்டுபிடிக்கப்பட்ட வர்கள். இவர்கள் தங்கள் எஜமானன் திரும்பி வரும்வரை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களை தேவனால் பெற்றவர் கள். இவர்கள், தேவனுடைய திராட்சைத் தோட்டத்தில் வேலை

செய்து அவர் தரும் அற்புத பலன்களைப் பெறுகிறவர்கள். இவர்கள், வளமிக்க நல்ல நிலம் போன்று பரலோகத்தின் வசனத்தை ஏற்றுக்கொண்டவர்கள். இப்படிப்பட்டவர்களைத் தான் இயேசு தம்முடைய சபையாக தெரிந்து கொண்டார். (மத்தேயு 16:18).

அவருடைய கர்த்தத்துவத்தைக் குறித்து அப்போஸ்தலர்கள் பிரசங்கித்தபோது, இயேசுவுக்கு கீழ்ப்படிந்த ஆத்மாக்கள் அனைவரும், அவருடைய இரத்தத்தால் விலைக்கு வாங்கப் பட்ட கிறிஸ்துவின் சபையாக மாறினார்கள்.

ஆக, நாம் யார்? நாமே கிறிஸ்துவின் சபை. தேவனிடத்தில் ஒப்புரவான ஓர் தனித்தன்மை வாய்ந்த ஜனத்தை ஏற்படுத்துவதே இயேசுவின் நோக்கமாயிருந்தது. இயேசுவின் கர்த்தத்துவத்திற்குக் கீழ்ப்படிந்து, அவர் விதித்த நிபந்தனைகளுக்கு உடன்படுவதிலும், சபைக்கென்று தேவனால் நியமிக்கப்பட்ட ஆட்சி அமைப்பு மற்றும் ஆராதனை முறைமைகளை அனுசரிப்பதிலும், தேவ பக்தியுள்ளவர்களாய் ஜீவிப்பதிலும், அநேகரை சீஷர்களாய் மாற்றும்படி ஊழியம் செய்வதிலும் இயேசுவானவர் கட்டளையிட்ட எல்லாவற்றிற்கும் அடிபணிவதிலும் இந்த சபை தனித்தன்மை வாய்ந்தவர்கள் என்பதை நன்கு அடையாளம் காண முடியும்.

நாமே கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டு, உலகில் அவர் சொற்படி வாழ்ந்து வருகிற அவரது ஜனமாகிய இயேசு கிறிஸ்துவின் சபை. அவருடைய ஆன்மீக சரீரமாகிய சபையில் அங்கமாய் இருப்பதை விட மேலான காரியம் வேறு எதுவுமில்லை.

# ஞானஸ்நானத்தைப் பற்றி என்ன புரிந்து கொண்டீர்கள்?

- டேவிட் மருபே

ரோமர் ஆறாம் அதிகாரத்தில், நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது மூன்று காரியங்கள் நடைபெறுகின்றது என்று பவுல் கூறுகின்றார்.

***1. கிறிஸ்துவுக்குள் மரிக்கின்றோம் (ரோமர் 6:3).***

இந்தக்காரியத்தை அநேக ஜனங்கள் தாங்கள் ஞானஸ் நானம் எடுக்கும் பொழுது ஒதுக்கி விடுகின்றனர்.

''கிறிஸ்து இயேசுவோடு கூட சிலுவையில் மரிக்காமலே, கிறிஸ்து வோடு கூட தண்ணீரில் அடக்கம் பண்ணப்படு கிறார்கள். கிறிஸ்துவோடு கூட மரிப்பது என்றால் என்ன அர்த்தம்?

சந்தேகமில்லாமல் சுயத்துக்கு மரிப்பது என்று அர்த்தம் எஸ்.டி.கார்டன் இவ்வாறு கூறுகிறார். ''ஒவ்வொரு இரட்சிக் கப்பட்ட இருதயத்திலும் ஒரு சிம்மாசனமும் ஒரு சிலுவையும் உண்டு. சுயம் சிம்மாசனத்தில் இருந்தால், இயேசு சிலுவையில் இருக்கிறார்.. சுயம் உன்னுடைய ராஜாவாக இருந்து சிம்மா சனத்தில் இருந்தால், இயேசு சிலுவையில் இருப்பார்.... ஆகை யினால் சுயம் சிலுவையில் இருந்தால் தான் இயேசு சிம்மாச னத்தில் இருக்க முடியும்.

இந்தக் கேள்விக்கு நாம் ஒவ்வொருவரும் பதிலளிக்க வேண்டும். ஞானஸ்நானத்தில் தண்ணீரில் அடக்கம் பண்ணு வதற்கு முன்பாக நான் சுயத்தை சிலுவையில் அறைந்தேனா

(கொலொசெயர் 3:5-7). சுயம் சிம்மாசனத்தில் உயிரோடிருக்கும் வரை ஒருவன் கிறிஸ்தவனாக வாழ இயலாத காரியம்.

**2. நாம் கிறிஸ்துவோடு கூட அடக்கம் பண்ணப்படுகிறோம்.**
(ரோமர் 6:4).

இந்த வசனத்தின் மூலம் ஞானஸ்நானம் வேத வசனத்தின்படி நடைபெற வேண்டுமென்றால், அதற்கு அதிகத் தண்ணீர் தேவைப்படுகிறது, மற்றும் ஞானஸ்நானம் ஒரு அடக்கம் பண்ணப்படுதலாக இருக்கிறது.(அப் 8:38 ; யோவான் 3:23).

**3. ஒரு புதிய ஜீவியத்தை ஜீவிப்பதற்காக நாம் கிறிஸ்துவோடு கூட எழுப்பப்படுகிறோம்.**

(4-ம் வசனம்)

ஞானஸ்நானத்திற்குப் பிறகு நாம் புதிய சிருஷ்டிகளாக மாறுகிறோம். ஞானஸ்நானத்திற்கு பிறகு சுயத்தைக் களைந்து போட்ட (எபேசியர் 4:22). புதிய சிருஷ்டிகளாக மாறுகிறோம். (2 கொரி 5:17). ஆகையினால் ஞானஸ்நானத்திற்குப் பிறகு நாம் முந்தின நிலைமையை விட புதியதாக காணப்பட வேண்டும்.

நீ எப்படி ஞானஸ்நானத்தைப் புரிந்து கொண்டாய்? நீ இன்னும் ஞானஸ்நானம் பெறவில்லை என்றால், இன்றைக்கே அந்தத் தீர்மானத்தை எடு. இதன் மூலமாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் நீ அங்கத்தினனாக முடியும். இங்கு எந்தவிதமான ஆக்கினைத் தீர்ப்பும் இல்லை (ரோமர் 8:1). இங்கு சகல விதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும், பாவமன்னிப்பும் மற்றும் மீட்பும் கிடைக்கும் (எபேசியர் 1:3,7). நீ ஞானஸ்நானம் எடுத்திருந்தால், அடக்கம் பண்ணப் படுவதற்கு முன்னதாக கிறிஸ்துவோடு கூட சிலுவையில் அறையப்பட்டீரா? புதிய வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறீரா? அப்படியிருந்தால் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ✤

# நீ இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்?

டேவிட் ரோப்பர்

பாழும் கிணற்றில் வீழ்ந்த மனிதனைப்பற்றிய ஒரு கதையுண்டு. அவ்வழியே வந்த மற்றொருவன் அவனுடைய கதறலைக் கேட்டு, ஒரு கயிறைக்கொண்டு, அதன் மூலம் அவனைக் காப்பாற்ற முயன்றான். ஆனால் கிணற்றில் கிடந்த மனிதனோ பயத்துடன் அவனைப் பார்த்து, ''கயிறு அறுந்து போகுமானால் என் கதி என்ன?'' என்றான். காப்பாற்ற முயன்றவனோ அதற்கு மறுமொழியாக, ''நீ இருக்குமிடத்திலேயே கிடந்தால் உன் கதி என்ன?'' என்று கேட்டான்.

ஆவிக்குரிய வகையில் சுவிசேஷத்திற்கு இன்னும் கீழ்ப் படியாதவர்களின் அடிமனதில் இக்கேள்வி உறுத்திட வேண்டியது அவசியம். கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்போது உறுதி சொல்ல முடியாத பல கட்டங்கள் உண்டு. ஆனாலும், ''நீ இப்பொழுது இருக்கும் இடத்திலேயே இருந்து கொண்டிருந் தால் உன் கதி என்ன?''

தற்போது, நீ ''அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவனா யிருக்கிறாய்'' (எபேசியர் 2:1). இந்த நிலையில் நீ ''கிறிஸ்துவைச் சேராத, தேவனற்ற, இவ்வுலகில் நம்பிக்கை யற்றவனாயிருக்கிறாய்'' (எபேசியர் 2:12). நீ இழந்து போனவன்! இதே நிலையில் நீ நீடிப்பாயானால் என்ன ஆகும்? நீ உன் ஆத்துமாவை என்றென்றும் நித்திய காலமாக இழந்து போவாய். (2 தெசலோனிக்கேயர் 1:7-9). நம்பி கீழ்ப் படியுங்கள் என்று உங்களை மனதுருக்கத்துடன் வேண்டு கிறோம்.

''அவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் பார்த்து சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிபுக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.... மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள். (அப். 2 : 37, 38, 40)

கிறிஸ்துவுக்குள் இருக்கிற நாமும் கூட இந்தக் கேள்வியால் பயனடைய முடியும். ''நீ இருக்கும் நிலையிலேயே இருந்து கொண்டிருந்தால் உன் கதி என்னவாகும்?'' பேதுரு இவ்வுண்மையை குறிப்பிடும்போது, ''நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்'' என்றார் (2 பேதுரு 3:18).

ஆனால் நாம் இருக்கும் இடத்திலேயே இருந்து கொண்டிருந்தால் என்ன ஆகும்?

வேதத்தைக் கற்பதிலும, ஜெபிப்பதிலும நாம் வளர்ச்சியடையாமலிருப்பதால் அதன் விளைவு என்ன? ஆராதனையில் பங்கேற்பதிலும், கர்த்தரை சேவிப்பதிலும் இன்னும் உத்தமம் அடையவில்லை என்றால் என்ன சம்பவிக்கும்? நாம் விசுவாசமற்றவர்களாய் மாறி கெட்டுப் போக நேரிடும். (2 பேதுரு 1:3, 9).

✦✧✦✧✦✧✦✧

# ஆவிக்குரிய பார்வையில் சபை

*- சன்னி டேவிட்*

சபை என்பது ஆராதனைக்கான பூமிக்குரிய ஒரு கட்டிடம என்பதுவே மக்களின் பொதுவான கருத்தாக இன்று நிலவி வருகிறது. காரணம், சபை (சர்ச்) என்கிற பதத்திற்கு தற்கால அகராதிகள் சொல்லும் விளக்கம இதுவே. ஆனால் புதிய ஏற்பாட்டில் ''சபை'' என்கிற வார்த்தை இந்த அர்த்தத்தில் சொல்லப்படவில்லை.

வேத வாக்கியங்களின்படி, ''சபை'' என்ற வார்த்தை, தேவனுடைய குடும்பமாகிய மக்கள் கூட்டத்தையே குறிப்பிடு கிறது. கிறிஸ்துவின் உபதேச சட்டமாகிய அவரது சுவிசேஷத் திற்குக் கீழ்ப்படிந்து (ரோமர் 6:16-18) யோவான் 3ம் அதிகாரத்தின்படி மறுபிறப்பை அடைந்தபோது, கர்த்தர் தாமே இவர்களை தமது ஆவிக்குரிய சரீரமாகிய தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டார்.

''எக்லீசியா'' என்கிற கிரேக்க வார்த்தை தான் ''சபை'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்தி, உருது போன்ற சில மொழிகளில் இவ்வார்த்தை ''கலீசியா'' என்றே பயன்படுத்தப் பட்டுள்ளது. இதன் பொருள் ''குடிமக்களின் கூட்டம்'' அல்லது ''மக்கள் கூட்டம்'' என்பதாகும். மத்தேயு 16:18ல் கிறிஸ்து, ''... இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்'' என்று வாக்களித்திருந்தார். ''ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்'' என்ற சத்தியத்தைத்தான் ''இந்தக்கல்'' என்று அவர் குறிப் பிட்டார். இந்த நிலையான, உறுதியான அஸ்திபாரத்தின் மேல்தான் தேவனுடைய குடும்பமாகிய சபை நிலைநின்று கொண்டி ருக்கிறது.

இயேசுவானவர் பரலோகத்திற்குச் சென்ற பிறகு அப்போஸ்தல நடபடிகளின் 2ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டார். அன்று அவரது சீஷர்கள், அவரது பெரிதான ஆணைக்கிணங்க, முதன்முதலாக ஒரு பெருந்திரளான கூட்டத்தாருக்கு முன்பாக அவரது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைப் பற்றிய சுவிசேஷத்தை பிரசித்தம் பண்ணினார்கள். தேவனுடைய அளவற்ற அன்பையும, அவரது குமாரன் பாவிகளுக்காக உயிர்த்தியாகம் செய்ததையும் அந்த நற்செய்தியின் மூலம் கேள்வியுற்ற அந்த மக்கள், தங்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி அப்போஸ்தலர்களைப் பார்த்து, ''சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்கள். அவர்கள் தங்கள் தவறை உணர்ந்த படியால், அதற்கு மன்னிப்பைப் பெற நாடினார்கள்.

''பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' (அப். 2:37, 38) என்றும், மேலும் தொடர்ந்து வாசிக்கையில், ''அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்ட வர்கள ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக் குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள்'' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அப். 2:41).

இவ்விதமாக, அந்த பன்னிரண்டு அப்போஸ்தலர் மற்றும் தங்கள் முழு இருதயத்தோடும் கிறிஸ்துவை விசுவாசித்து, தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பி, ஞானஸ்நானத்தின் மூலம் தங்கள் பாவங்கள் நீங்கக் கழுவப்படட மூவாயிரம் ஆத்துமாக்கள், ஆகிய இந்த இரட்சிக்கப்பட்ட மக்கள் கூட்டம் முதன்முதலில் உருவானது.

இவ்விதமாக, ஞானஸ்நானம் பெற்று தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்ட 3000 பேரும், "... தேவனைத் துதித்து, ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள், இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" என்று அப்போஸ்தல நடபடிகளின் 2ம் அதிகாரத்தின் கடைசி வசனம் கூறுகிறது ஆக கிறிஸ்துவின் சபையானது வாக்குத்தத்தத்தின்படி ஸ்தாபிக்கப்பட்டு விட்டது. அப்போஸ்தல நடபடிகளின் 2ம் அதிகாரத்திற்கு முன்னதாக, சபையானது எதிர்காலத்தில் கட்டப்படப்போகிற, இன்னும் உருவாகாத ஒன்றாகவே பேசப்பட்டது. ஆனால் அப். 2ம் அதிகாரத்திற்கு பின்வரும் வேத பகுதிகளில், சபை ஓர் நிகழ்கால ஸ்தாபனமாக, உலகில் ஏற்படுத்தப்பட்டு விட்ட ஒன்றாகவே எழுதப்பட்டுள்ளது. அந்த பெந்தகொஸ்தே நாளில் இரட்சிக்கப்பட்ட 3000 பேர்களை கர்த்தர் எவ்வாறு சபையில் சேர்த்துக் கொண்டாரோ அதே விதமாகவே அவர் இரட்சிக்கப்படுகிறவர்களை அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வருகிறார்.

இதன்மூலம் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், கிறிஸ்துவானவர் ஸ்தாபித்த அவரது சொந்த சபையில் எந்த மனுஷனும் தன் சுய விருப்பத்தின்பேரில், அல்லது சுய தீர்மானத்தின் பேரில் தானே சென்று சேர்ந்து கொள்ள முடியாது, என்பதுவே! யார் உண்மையாய் சுவிசேஷத்தைக் கேட்டு, இயேசுவே தேவனுடைய குமாரன் என்பதை முழு மனதோடு விசுவாசித்து, தங்கள் பாவ வாழ்வை நினைத்து மனஸ்தாபப்பட்டு, மனந்திருந்தி வாழ தீர்மானித்து தங்கள் பழைய மனுஷனை ஞானஸ்நானமாகிய கல்லறைக்குள் புதைத்துவிட்டு, கிறிஸ்துவுக்குள் ஒரு புது வாழ்வை வாழும்படி அந்த தண்ணீரிலிருந்து மேலே எழும்பி வந்தவர்கள் (ரோமர் 6:3-6) என்றும் மெய்யாகவே மறுபிறப்படைந்தவர்கள்

(யோவான் 3:3-5) யாரென்றும் நம் கர்த்தர் அறிந்தவராகை யால் இவர்களை சபையில் சேர்க்கும் பணியை அவரே செய்கிறார்.

மத்தேயு 16:18, 19ல் ''சபை'' ''பரலோக இராஜ்ஜியம்'', ''தேவனுடைய இராஜ்ஜியம்'' என்ற ஒரே அர்த்தமுள்ள மாற்று பதங்களை கிறிஸ்து பயன்படுத்துகிறார். அவர் பேதுருவை நோக்கி, ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான் ; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப் படுத்தினார். மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், (கிரேக்க பாஷையில் பெத்ரோஸ் என்றால் கூழாங்கல் அல்லது கல் என்று பொருள்) இந்தக் கல்லின் மேல் (கிரேக்க பாஷையில் பெட்ரோ என்றால் ஒரு பெரும் பாறையின் மேல் முகடு என்று பொருள்) என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள் வதில்லை. பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்தில் நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்தில் நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும்'' என்றார்.

இதை வாசிக்கும் அன்பரே, தமது சபையைக் கட்டுவேன் என்று ஆண்டவர் வாக்களிக்கும் அதே சமயத்தில் பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை தருவதாகவும் சொல்கிறார். பாதாளமே முயன்றாலும்கூட இந்தச் சபை ஏற்படுவதைத் தடுக்க முடியாது என்றும், அந்த வேத பகுதியின் பின்பகுதியில், இந்த இராஜ்ஜியம், அபபோஸ்தலர்கள் உயிரோடிருக்கும் காலத்திலேயே வந்துவிடும் என்றும் அவர் உறுதி கூறினார்.

(மத்தேயு 16:28). ''இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்ஜியம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்பதில்லை என்றும் மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மாற்கு 9:1).

பரலோக இராஜ்ஜிய்த்தின் பூமிக்குரிய வடிவம் தான் கிறிஸ்துவின் சபை ஆகும். அப்போஸ்தலருக்கு அவர் இந்தச் சந்தர்ப்பத்த்தில் அளித்த வாக்குத்தத்தங்களிலிருந்து இதை அறிய வருகிறோம். யூதருக்குள் அதிகாரியான நிக்கொதேமு விடம் ஆண்டவர் உரையாடுகையில், ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க முடியாது (யோவான் 3:5) என்றார். இதுவே ''தண்ணீரில் ஞானஸ்நானம்'' பெறுவதன் மூலம் அடைகின்ற ''மறுபிறப்பு''. இத்தகைய மறுபிறப்பு அடைந்தவர்கள் சபையிலே சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். (அப் 2:47).

இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய இராஜ்யமாகிய சபையிலே சேர்க்கப்படுவது எவ்வாறு என்று தமது தாசர்கள் மூலம் பரிசுத்த ஆவியானவர் மிகத் தெளிவாக விளக்குகிறார். (2 பேதுரு 1:20, 21) (2 தீமோ 3:16). இந்த வழிமுறைகளை சரிவர அறிந்து கொண்ட தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் ''ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்.'' (1 கொரி 12:13). அந்த ஒரே சரீரம் என்பது கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட சபையைக் குறிக்கிறது. (எபேசியர் 1:22, 23; 4:4).

இதன் மூலம் நாம் அறிய வருவது என்னவென்றால் ; ஒரு மனிதன் சபையில் சேர்க்கப்பட எதைச் செய்கிறானோ அதன் மூலமாகவே பரலோக இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கிறவனாயிருக்கிறான். கர்த்தரால் அப் 2:47ல் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்ட மக்கள் கொலோசெயர் 1:13ன்படி.

''அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்குட்பட்டிருக்கிறார்கள்''. சபை என்கிற ஸ்தாபனம் தேவனுடைய இராஜ்யம் என்று அழைக்கப்படுவதால், சபையிலுள்ளவர்கள் அனைவரும் இராஜ்ஜியத்திற்குள் இருக்கிறார்கள்.

ஆம், இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் தமது இராஜ்ஜியமாகிய சபையிலே சேர்க்கிறார். எப்போது? ''ஒருவன் தேவனுடைய சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்தெழுதலின் சாயலில் ஞானஸ்நானம் பெறும்போது!''.

*******

## என்றால்......

***கிறிஸ்து வாசல் என்றால்***, மற்றோருக்கு கதவை திறக்க, மூட நீ தான் அந்த வாசலை காப்பவன். அவர் உலகத்தின் ஒளி என்றால், பூமியின் கடையாந்திரமும் நீ தான் அந்த ஒளியை எடுத்துச் செல்பவன்.

அவர் ***திராட்சை செடி என்றால்***, கனி தரும் கொடி நீ தான்.

***அவர் ஜீவ அப்பம் என்றால்*** அதை பிட்டு (பசியுற்றோருக்கு) வழங்குபவன் நீ.

***அவரே சத்தியம் என்றால்***, சத்தியத்தை விளக்கி, அதை மற்றோருக்கு வழங்குபவன் நீ.

***அவர் பிரகாசமுள்ள விடி வெள்ளி என்றால்*** மனுக்குலம் அவரைக் கண்டு என்றும் வாழ, உலகத்திலிருந்து அவர் அழகை மறைக்கும் மேகங்களை அப்புறப்படுத்த வேண்டியவன் நீ.

***அவர் மகிமையுள்ள சத்தியம் என்றால்*** பிதாவின் பிரதான ரட்சிப்பின் திட்டத்தில் தவிர்க்க முடியாத ஒரு பாகம் நீ.

# தேவ வசனத்தின் மீதுள்ள அன்பே தேவ அன்பு

- கென்னத் மெக்லைன்

தேவனுடைய வார்த்தையை நேசிக்கிறவர்கள்தான் தேவன் பேரிலும், அவரது குமாரன் பேரிலும் மெய்யான அன்புள்ளவர்களாயிருக்கிறார்கள். 2 யோவான் 1:6ல், ''நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு'' என்று வாசிக்கிறோம். இயேசுவும்கூட, ''நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்'' என்றார். (யோவான் 14:15).

தேவனுக்கு பிரியமாய் வாழ்வதற்குரிய வழிவகைகள் அனைத்தும் வேத வசனங்களில் உண்டு. தேவனோடும், மீட்கப்பட்ட அனைவரோடும் நித்திய காலம் வாழ நம்மை தகுதிப்படுத்துவதும் வேத வசனங்களே. இத்தகைய ஒப்பற்ற தேவ வசனத்தை நாம் நேசிக்கிறோமா இல்லையா என்பதை எவ்விதம் கண்டறியலாம்?

***தேவ வசனம் மனிதனுடைய வார்த்தைகள் அல்ல, அது தேவ ஆவியானவரின் வார்த்தைகள் என்று நாம் மதிப்பிடுவதே, அதன் மீது நாம் காட்டும் அன்பு!***

''வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது'' என்று பவுல் எடுத்துரைக்கிறார் (2 தீமோ 3:16). எனவே இன்று பலர் எண்ணுவதைப் போல இது வெறும் மனுஷர்களால் எழுதப்பட்ட மனிதரின் வார்த்தைகள் என்று நாம் கருதுவோமானால், அதை கனவீனப்படுத்தி, அவமதிக்கிறோம் என்று பொருள்; அவ்வாறு எண்ணினால்

''இது ஆவியானவரால் ஏவப்பட்டது'' என்று கூறிய தேவனையும் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம்.

***தேவ வசனத்திற்கு கீழ்ப்படிதலே, நாம் அதன் மீது காட்டும் அன்பு!***

எபிரெய எழுத்தாளன், ''தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையுள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும்... இருக்கிறது'' என்கிறார் (எபி 4:12) மேலும் எபிரெயர் 5:8,9ல் கிறிஸ்து தான் நித்திய இரட்சிப்புக்கு காரணர் என்றும் அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தான் இந்த உன்னத சிலாக்கியம் கிடைக்கும் என்றும் வேதம் கூறுகிறது.

***சபை கூடிவருதலை அலட்சியம் செய்யாதிருப்பதே, நாம் தேவ வசனத்தின் மீது காட்டும் அன்பு ஆகும்.***

சபை கூடி வருதலை விட்டு விடாதே என்று வேத வசனம் எச்சரிக்கையில், நாம் பங்கெடுக்கத் தவறும் வேளைகளில் தேவ கட்டளையை மீறுகிறோம். (எபி 10:25). தேவ வசனத்தின் மீது நமக்கு நாட்டமிருக்குமானால், ஆராதனை வேளைகள் நமக்கு பாரமானதாயிராமல், மிகுந்த ஆசீர்வாதமாயிருக்கும். ''கண்டிப்பாக இந்தக் கூட்டத்திற்கு வர வேண்டுமா?'' என்ற கேள்விக்கே இங்கு இடமில்லை. தேவ சேவையில் பெரிய காரியங்களை நாம் சாதித்திட நம்மை உந்தித்தள்ளும் அற்புத வேளைகள் தான் சபையின் கூட்டங்கள்! இதை உணர்ந்த அனைவரும் அடுத்த கூட்டத்திற்காக ஆசையாய் காத்துக் கொண்டிருப்போம்.

***தேவ வசனத்தை பிறருக்கு அறிவிப்பதே, அதன் மீது நாம் காட்டும் அன்பு!***

இயேசுவைப்பற்றியும் அவர் பாவியின் மேல் காட்டும் அன்பைப்பற்றியும் பிறரிடம் விவரிக்கையில் அது நமக்கு மிகுந்த சுவாரஸ்யத்தை உண்டு பண்ண வேண்டும். இந்த வேத வசனங்களுக்கு நாம் கீழ்ப்படிந்ததினால் தானே பாவத்திலிருந்து விடுதலை பெற்று, கிறிஸ்துவுக்குள் ஓர் புது வாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். உலகத்தின் இரட்சகராம் இயேசுவண்டையில் பாவிகளை அழைத்து வந்து அவர் தரும் இரட்சிப்பை அவர்களும் பெற்றுக்கொள்ள உதவுவதைக் காட்டிலும் மேலான புண்ணியம் இவ்வுலகில் வேறு எதுவுமில்லை.

வேத வசனத்தை மதிக்க நம் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்தலே, அதன் மீது நாம் காட்டும் அன்பு.

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளை கர்த்தருடைய வழியில் பத்திரமாய் நடத்தி வளர்த்தும் மாபெரும் பொறுப்பை அவர் உங்கள் கைகளில் கொடுத்திருக்கிறார். வளர்ந்து பெரியவர்களான பிறகும் தேவனையும் அவரது வசனத்தையும், அவர் சபையையும், பரலோக பாக்கியத்தையும் மதித்து நடக்கும் விதத்தில், சிறு வயது முதற்கொண்டே அவர்களுக்கு ஓர் திடமான அடித்தளத்தை அமைத்துக்கொடுப்பது நமது கடமை ஆகும்.

தேவ வசனத்திற்கு பாத்திரமாய் நடந்து கொள்ளுதலே, நாம் அதன் மீது காட்டும் அன்பு ஆகும்.

தேவ கட்டளைகள் ஒவ்வொன்றையும் உங்கள் வாழ்வில் தவறாமல் கைக்கொண்டிருக்கிறீர்களா?

''உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது'' என்று தாவீது கூறுவதைப் போல வேத வசனம் காட்டும் வெளிச்சத்தில் மிகுந்த கவனத்தோடு காலடி வைத்து நடந்து வர உங்களுக்கு விருப்ப முண்டா?

மேற்கூறிய சில விஷயங்களில் நீங்கள் தவறியிருப்பீர் களேயானால் இன்றே காலம் தாழ்த்தாமல் தேவனையும் அவரது வசனத்தையும் உளமார நேசிக்க தீர்மானிப்பீர்களா?

# உண்மையான மனந்திரும்புதல்

- ஒ.பி.பெயர்ட்

மனந்திரும்புதல் என்பது, ''சாவா, வாழ்வா'' என்பதை நிர்ணயிக்கும் ஓர் முக்கியமான செயல் ஆகும். மனந்திரும் பினால் வாழ்வு; இல்லையேல் அழிவு என்பதை பேதுருவின் வார்த்தைகள் சுட்டிக் காட்டுகின்றன.

''தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்? (2 பேதுரு 3:9).

ஆகவே இந்த ''மனந்திரும்புதல்'' என்பது என்ன வென்பதை சரியாகப் புரிந்து கொள்ளுதல் மிகவும் அவசிய மானது.

மனந்திரும்புதல் என்பது பாவத்தைக் குறித்த ஓர் துக்கம் (வருத்தம்) அல்ல. இந்த மனஸ்தாபம் மனந்திரும்புதலுக்கு ஒருவனை வழி நடத்துகிறது. ''தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகீக (உலகப் பிரகாரமான) துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது'', (2 கொரி 7:10). மாட்டிக்கொண்ட ஒருவன் வருத்தப்பட்டால் அது லௌகீக துக்கம். ஆனால் தேவன் பேரில் தனக்கு ஏற்படும் அன்பின் நிமித்தம் பாவத்தைத் தூக்கியெறிந்து விட்டு மனந் திரும்புதல் ''தேவனுக்கேற்ற துக்கமாகும்''.

வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல், மனந்திரும்புதலல்ல, மாறாக, மனந்திரும்புதல் தான் வாழ்க்கையை மாற்றியமைக்கிறது.

இயேசு இதைக் குறித்து ஓர் உவமை சொன்னார். ''ஆயினும் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே நீ போய் இன்றைக்கு என் திராட்சைத் தோட்டத்தில் வேலை செய் என்றான். அதற்கு அவன் மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப் பட்டுப் போனான்''. (மத்தேயு 21:23, 29). முதலில் அவன் மனஸ்தாபப்பட்டான், பின்பு போனான் எனக் காண்கிறோம்.

ஆக, மனந்திரும்புதல் என்பது தேவனுக்கேற்ற துக்கத்தினால் மனதில் உண்டாகும் திருப்பம். அந்த மனம் நம். செயல்களைத் திருத்தியமைக்கிறது.

நாம் உண்மையிலேயே மனந்திரும்பினவர்கள் தானா என்பதற்கு ஒரு சில பரிசோதனைகள் இதோ:

- ✦ உண்மையாய் மனந்திரும்பியிருந்தால், பாவத்தைக் குறித்த ஓர் வெறுப்பு உணர்வு நம்மில் காணப்படும். பொல்லாதவைகளாய் தெரிகின்ற எல்லாவற்றையும் தேவன் வெறுப்பதால், அவர் வெறுப்பதை நாமும் வெறுக்கிறோம்.
- ✦ உண்மையாய் மனந்திரும்பியிருந்தால், நீதியை நாம் நேசிப்போம். நீதி அவருக்கு பிரியமானதால், அவருக்கு பிரியமானதில் நாமும் பிரியமாயிருக்கிறோம்.
- ✦ உண்மையாய் மனந்திரும்பியிருந்தால், ஒரு சிறு தவறு நம் வாழ்வில் வந்து விட்டாலும், அந்நேரமே மனம் கசந்து வருந்திடுவோம்.

- உண்மையாய் மனந்திரும்பியிருந்தால், நம்மை மிகவும் அதிகமாய் நேசிக்கிறவருக்கு பிடிக்காதவைகளை தவிர்த்திடுவோம்.
- உண்மையாய் மனந்திரும்பியிருந்தால், தேவனுக்கு பிரியமானவைகளை எந்தத் தடைகளையும் தாண்டி, நிறைவேற்றிடுவோம்.
- உண்மையாய் மனந்திரும்பியிருந்தால், நீதியைக் குறித்த ஓர் பசி தாகம் நம்மில் எப்போதும் காணப்படும். (மத் 5:6). தேவ வசனமாகிய சத்தியத்தின் மேல் நமக்கு அளவற்ற ஆவல் உண்டாகும். ''உம்முடைய சத்தியத்தினாலே அவர் களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்'' என்று இயேசு ஜெபித்தார். (யோவா 17:17).

சத்திய வசனங்கள், நம் வாழ்வில் மனந்திரும்புதலுக் கேற்ற கனிகள்.

☆☆☆☆☆☆

**ஆரம்ப முதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம் பேர் ஏற்பட்டபடியினால், ஆதி முதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறிய வேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று. (லூக்கா 1:2-4)**

# விருப்பத்திற்கேற்ற சபையை தெரிந்து கொள்ளுதல்

- ஜி.எப்.ரெயின்ஸ்

பலவிதமான குழப்பமான உபதேசங்கள் நிலவிவரும் இந்த நாட்களில் மக்கள் தங்கள் விருப்பத்திற்கும், வசதிக்கும் ஏற்ற சபையை தங்களுக்குத் தெரிந்து கொள்ளுகின்றனர். ஒரு சோப்பு, சீப்பு வாங்குவதைப் போல் இதையும் கடைச்சரக்கு ஆக்கிவிட்டனர். பிரமாண்டமான கட்டிடம், புகழ் பெற்றது, மக்கள் பலம் அதிகமுள்ளது என்ற பல அடிப்படைக் காரணங் களைக் கொண்டு தம் சபையைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

கேளிக்கை நிகழ்ச்சிகளுக்காக நெடுந்தூரம் பயணம் செய்யும் பலர் சத்தியத்தின்படி ஆராதிக்க ஒரு மைல் தூரம் பயணம் செய்யத் தயங்குகின்றனர். ''தேவன் ஆவியாயிருக் கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்'' என்றார் இயேசு (யோவா 4:24).

நமது விருப்பத்திற்கேற்ற சபையை நாம் தேர்ந் தெடுப்பதற்கு இயேசு பல சபைகளை உருவாக்கி வைக்க வில்லையே! அவர் இது பற்றி, ''..... இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை'' என்று கூறினார் (மத்தேயு 16:18).

பவுல் இதுகுறித்து மேலும் கூறுகையில்,

''அவரே சபையாகிய சரீரத்துக்கு தலையானவர்; எல்லா வற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்

தோரிலிருந்து எழுந்த முதற் பேறுமானவர்'' (கொலோ 1:18). ''அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றே '' என்கிறார்.

எனக்கு அருமையானவர்களே, நீங்களாகவே வேதாகமத்தை ஆராய்ந்து பாருங்கள். குறிப்பாக, அப்போஸ்தல நடபடிகள், மற்றும் பவுல், பேதுரு, யாக்கோபு, யோவான், யூதா என்பவர்கள் எழுதிய நிருபங்களையும் பக்குவமாய் படிப்பீர்களானால் ''பிரிவினைகளில்லாத ஓர் ஏக சபையை அறிந்து கொள்ள முடியும். அதைத் தவிர வேறு எந்த பிரிவுக்கூட்ட சபையையும் நீங்கள் ஒதுக்கித் தள்ளி விடுவீர்கள். ஏனென்றால், ''வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தத்திற்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'' (2 தீமோ 3:16, 17).

எல்லா மனுஷரையும் கடைசி நாளில் நியாயந் தீர்க்கப் போகிற தேவ வசனம் (வெளி 20:11 - 15) மிகத் தெளிவாய்ச் சொல்லுகிறது: ''மனுஷனுக்கு செம்மையாய் தோன்றுகிற வழி உண்டு. அதன் முடிவோ மரண வழிகள்'' (நீதி 14:12).

நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து எச்சரிக்கிற சத்தம் உங்கள் செவிகளில் கணீரென ஒலிக்கட்டும்!

''என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்'' (மத்தேயு 15:13).

# கர்த்தரின் சேனையில் இன்றே சேர்ந்திடுவீர்!

- கோர்டன் ஹோரகன்

தேவன் தம்முடைய போர்ப்படையில் சேர்ந்து கொள்ளும் படியாக ஆண்களையும், பெண்களையும் இன்று அழைக்கிறார். அந்த போர்ப்படைக்கு தமது குமாரனாகிய இயேசுவையே பிரதான படைத்தளபதியாக நியமித்திருக்கிறார்.

''கிறிஸ்துவின் சபை''யாகிய அந்த ராணுவம் கொல்லவோ, அழிக்கவோ ஏற்படுத்தப்படவில்லை, மாறாக, மனமுவந்து இதில் சேர்பவர்களுக்கு பேரின்பத்தையும், மனநிறைவையும், நித்திய ஜீவனையும் அளிப்பதற்கென்றே உருவாக்கப்பட்டது.

இதில் உடனே சேர்ந்து கொள்ளுங்கள். ஏனென்றால் எதிரியாகிய சாத்தான் எவனைத் தாக்கி அழிக்கலாம் என்று தீவிரமாய் அலைந்து கொண்டிருக்கிறான். தாமதம் வேண்டாம். இந்த ஆவிக்குரிய ராணுவத்தில் சேர என்ன செய்ய வேண்டும்? இதில் சேருபவர் முதலாவதாக இதன் படைத் தளபதியாகிய இயேசு தேவனுடைய குமாரன் என்று முழுமனதோடு விசுவாசிக்க வேண்டும். (யோவான் 5:24; 6:29; 8:24). பின்பு தேவனிடமாக மனந்திரும்புவதன் மூலம் தன் மனதையும் வாழ்க்கையையும் அவர் பக்கமாக திருப்பிக் கொள்ள வேண்டும். (அப் 2:38; லூக் 13:3). படைத் தளபதியாக இயேசுவை தன் வாயினால் அறிக்கை செய்து பிரகடனப்படுத்த வேண்டும். (ரோமர் 10:9, 10). இறுதியாக முழு அர்ப்பணிப்

புடன் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். (அப் 2:38, மாற் 16:16; கலா 3:26, 27).

இந்த இராணுவத்தின் போர் வீரர்களுக்கு எதிராக மிக பயங்கரமான பொல்லாத எதிரியாகிய சாத்தான் களமிறங்கி இருக்கிறான். எனவே கிறிஸ்துவின் போர் வீரர்களுக்கு மிகுந்த பயிற்சியும் ஆயுத பலமும் தேவையாயிருக்கிறது.

அதற்கு அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் வழிமுறைகள் இதோ:-

"கடைசியாக என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய தத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல, துரைத் தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்த கார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு. ஆகையால் தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அறையில் கட்டினவர்களாயும், நீதி எனும் மார்க்கவசத்தை தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத் திற்குரிய ஆயத்தம் எனும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ் திரங்களையெல்லாம் அவித்துப் போடத் தக்கதாய், எல்லா வற்றிற்கும் மேலாக, விசுவாசமெனும் கேடகத்தைப் பிடித்துக்

கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சண்யமெனும் தலைச்சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்'' (எபேசியர் 6:10-12).

கர்த்தரின் சேனையிலுள்ள வீரர்கள் எப்போதும் உஷாராகவும், தயாராகவும் இருப்பது மிகவும் அவசியம்.

☆☆☆☆☆☆

# ஒரே முறை

- மால்கம் ஜேம்ஸ் மக்லியோடு

***இந்த உலகத்தை ஒரே முறை கடந்து செல்லப் போகிறேன். நான் செய்யத்தக்க ஒரு நன்மையிருக்குமானால் அல்லது நான் மற்றவரிடத்தில் காண்பிக்கத்தக்க தயை இருக்குமானால், அதை நான் இன்றே செய்வேன். அதை நான் அசட்டை செய்யவோ, தள்ளிப்போடவோ வேண்டாம். ஏனெனில் இந்த வழியில் நான் மீண்டும் செல்ல மாட்டேன்.***

***உன் இருதயத்தை வெறுப்பிலிருந்தும், உன் மனதை கவலையினின்றும் விடுவி. எளிமையாக வாழு, குறைவாக எதிர்பார். அதிகமாகக் கொடு, அடிக்கடி பாடு, எப்பொழுதும் ஜெபி. உன் வாழ்க்கையை அன்பால் நிரப்பு . சூரிய ஒளியை பரப்பு. (சுயத்தை) உன்னையே மற. மற்றவரை எண்ணிப்பார். உனக்கு நடக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதை நீ முதலில் செய்.***

***இவைகள் திருப்தி என்கிற தங்கச்சங்கியில் சேர்க்கப் பட்ட வளையங்கள்.***

# "கொடிய காலங்கள்"

- வெயின் பேரியர்

"மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக". (2 தீமோ 3:1)

வரவிருக்கும் மிக மோசமான நாட்களில் கர்த்தருடைய ஊழியன் நடந்து கொள்ள வேண்டிய விதத்தை பவுல் தமது உடன் ஊழியனான தீமோத்தேயுவுக்கு எடுத்துரைக்கிறார். இன்றைய உலகின் அதே சூழ்நிலையில் வாழும் நமக்கும் தேவ ஆவியானவரின் இந்த தகவல்கள் மிகவும் பிரயோஜனமுள்ள தாயிருக்கிறது. 2 தீமோத்தேயு 3:2-5ல் இந்த அபாயகரமான சூழ்நிலையை ஆவியானவர் விவரிக்கிறார்.

"எப்படியெனில் மனுஷர்கள் தற்பிரியராயும், பணப் பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்கு, கீழ்ப்படியாதவர் களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர் களாயும், சுவாப அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர் களாயும், கொடுமை செய்கிறவர்களாயும், நல்லோரை பகைக் கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப் பிரியராயிராமல் சுக போகப் பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப் பட்டவர்களை நீ விட்டு விலகு."

மேற்கண்ட இந்த வசனப் பகுதியில் காணப்படும் மனிதர்கள் நமக்கு பரிச்சயமானவர்கள் தான். இவர்கள் எங்குமிருக்கிறார்கள். கடந்த காலங்களை விட சமீபத்தில்

இவர்கள் மிகவும் பெருகிப்போனார்கள். வெளியுலகில் மட்டுமல்ல, சபைக்குள்ளும் இப்படிப்பட்டவர்களால் பலவித மான இன்னல்கள் உருவாகியுள்ளன. 2 தீமோ 3:7ல் "எப்போதும் கற்றாலும் ஒரு போதும், சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற...." என்றும் இவர்களைப் பற்றி வேதம் சொல்லுகிறது. இதுபற்றி, அன்றுமட்டுமல்ல இன்றும் கூட தேவ ஆலோசனை என்ன? "இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு!"

முதலாவதாக இந்த தீமையான கண்ணிக்குள் நாம் சிக்கிக் கொள்ளாதபடி நாம் மிகுந்த சவனமாயிருக்க வேண்டும். வாழ்க்கைப் பாதையில் தேவ வசனம் நம்மை வழி நடத்த அனுமதிக்க வேண்டும்.

"நீயோ என் போதகத்தையும், நடக்கையையும் நோக்கத்தையும், விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும், அன்பையும், பொறுமையையும், அந்தியோகியா, இக் கோனியா, லீஸ்திரா எனும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும், பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்; எவ்வளவோ துன்பங்களை சகித்தேன்; இவையெல்லா வற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கி விட்டார். அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்."

"பொல்லாதவர்களும், எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாயும், மோசம் போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்".

"நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறது மில்லாமல் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே

உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்கு தெரியும்."

"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாக வும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்கு தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." (2 தீமோ 3:10-17).

இரண்டாவதாக, இந்த கொடிய சூழ்நிலையில் தேவ ஊழியனுக்கு ஓர் மாபெரும் கடமை உண்டு என்பதை நாம் மறக்கலாகாது. சபைகளில் நிறைவேற்றவேண்டிய பணிகளை ஊழியர்கள் தவறவிடுவதாலேயே சபைக்குள் அநேக பிரச்சனைகள் தலைதூக்குகின்றன. பல ஊழியர்கள் வேத வசன பிரசங்கத்தை விட்டுவிட்டு, வேறு பல அலுவல்களிலும், சமூக நலத் திட்டங்களிலும், ஆலோசனை மையங்களிலும், ஈடுபட ஆரம்பித்து விட்டனர். இவைகள் அவசியமற்றவை என்று நான் சொல்லவில்லை. ஆயினும் தேவ ஊழியரின் அத்தியாவசியப் பணியாகிய தேவ வசன பிரசங்கத்திற்கு இவை இணையானவை யல்லவே! ஒரு தேவ ஊழியனின் மேலான பொறுப்பைக் குறித்து 2 தீமோ 4:1ல் பின்வருமாறு பவுல் கூறுகிறார்.

"நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர் களையும், மரித்தோர்களையும் நியாயந்தீர்க்கப் போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும், அவருடைய இராஜ்ஜியத்தையும் சாட்சியாக வைத்து கட்டளையிடுகிறதாவது; சமயம் வாய்த் தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப்

பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு.''

''ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித் தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களை தங்களுக்கு திரளாக சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்கு செவியை விலக்கி, கட்டுக் கதைகளுக்கு சாய்ந்து போகும் காலம் வரும்.''

''நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாய் இரு; தீங்கனுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று.''

கொடிய இந்த சூழ்நிலைகளில் அநேக ஆத்துமாக்கள் வீழ்ந்து போய் மிகுந்த மன வேதனைகள் நம்மைத் தாக்கும். நமது சமுதாயத்தின் நிலை தரம் தாழ்ந்த போது இதன் முடிவு என்னாகுமோ என்ற மன உளைச்சல் நமக்கு ஏற்படுகிறது.

ஆயினும் இந்த கொடிய சூழலில் நாம் தப்பித்துக் கொள்ளவும், மேற்கொண்டு ஜெயிக்கவும் முடியும் என்று வேத வசனம் உணர்த்துகிறது. பின்வரும் பவுலின் வார்த்தைகள் நமக்கு உத்வேகத்தையும், தெம்பையும் அளிக்கிறதல்லவா?

''நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்கு தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்''. (2 தீமோ 4:7, 8)

எனவே, உத்தமமான தேவ பிள்ளைகளுக்கு என்றுமே தோல்வியில்லை என்பது நிச்சயம்.✦✦✦

# ''என் சகோதரர் யார்?''

- மேக்சி. பி. போரான்

அப்போஸ்தலனாகிய பேதுரு, ''சகோதரரிடத்தில் அன்பு கூறுங்கள்'' என நமக்கு அறிவுரை கூறுகிறார் (1 பேதுரு 2:17). சகோதரரிடத்தில் உண்மையான அன்பு செலுத்துகிறவர்கள் மட்டுமே தேவனிடத்தில் சரியான உறவுகொண்டவர்களாக விளங்குகிறார்கள்.

''நாம் சகோதரரிடத்தில் அன்பு கூறுகிறபடியால், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம்'' (1 யோவா 3:14).

உண்மையான மனமாற்றம் பெற்றவர்களின் உள்ளம் தேவ அன்பினால் நிறைந்திருக்கும். (1 யோவா 4:19, மத் 22:37). அதே சமயத்தில் விசுவாசிகளாகிய சகோதர சகோதரிகளிடமும் மிகுந்த அன்புள்ளவர்களாயிருப்பார்கள். (1 பேதுரு 1:22, ரோமர் 12:10).

அப்படியானால் ''யார் நம்முடைய உண்மையான சகோதர சகோதரிகள்?'' என்ற கேள்வி எழும்புகிறதல்லவா? இதற்கு இயேசுவே விடையளிக்கிறார். உலகிலுள்ள அனை வரும் நமது ஆன்மீக சகோதர, சகோதரிகள் அல்ல. குறிப்பாக, அவிசுவாசிகள் ஆக்கினைக்குட்பட்டவர்கள் என்று அவர் சொல்லியிருப்பதால் (யோவா 3:18; 2:24; மாற் 16:16) அவர்கள் நம்முடைய ஆன்மீக உடன்பிறப்புகளல்ல. அப்படிப் பார்த்தால் கோடிக்கணக்கான நாத்திகர்கள், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத பிற மதங்களைச் சேர்ந்தவர்கள் நமது ஆன்மீக சகோதரர் அல்ல என்பது புரிகிறது.

விசுவாசிகளின் மத்தியிலும் கூட யாரேனும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கர்த்தத்துவத்திற்குக் கீழ்ப்படியாமல் முரட்டாட்டம் பண்ணுகிறவர்களாயிருந்தால் அவர்களையும் நாம் நமது சகோதரர் என்று கணிக்க முடியாது. அவர் "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்கிறார். (மத் 7:21).

ஒரு சமயத்தில் இயேசுவானவரின் சொந்தத் தாயும், உடன்பிறந்தவர்களும் வந்து நின்ற போதும் கூட தமது சீஷர்களுக்கு நேராக தமது கையை நீட்டி, "இதோ என் தாயும், என் சகோதரரும் இவர்களே! பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்கு சகோதரனும், சகோதரியும், தாயுமாய் இருக்கிறார்கள்" என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். (மத்தேயு 12:49, 50).

பரமபிதா தம்முடைய சித்தத்தை வேத வாக்கியங்களின் மூலமாக மிகத் தெளிவாக வெளிப்படுத்தி விட்டார். (2 தீமோ 3:16). அவரது குமாரனுக்கு சகல அதிகாரத்தையும் கொடுத்து அவர் பேச்சையே நாம் கேட்க வேண்டுமென்றும் கட்டளையிட்டிருக்கிறார். (மத் 28:18, எபேசி 1:22, 23. மத்தேயு 17:5, எபிரெயர் 1:1, 2). எனவே குமாரனாகிய இயேசுவுக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு மட்டுமே நித்திய இரட்சிப்பு உண்டு. (எபி 5:9).

மனிதனால் உருவாக்கப்பட்ட சட்ட திட்டங்களைப் பின்பற்றி ஆராதிப்பவர்களது ஆராதனை வீணானது என மத்தேயு 15:9 காட்டுகிறது. "என்னை ஆண்டவரே, ஆண்ட


வரே என்று நீங்கள் சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?'' என்று இயேசு கேட்கிறார். (லூக் 6:46).

ஆக யாரெல்லாம் முழுமனதோடு இயேசு கிறிஸ்துவை தேவகுமாரன் என்று நேசித்து, அவரது இனிய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருக்கே அடிபணிந்து வாழ்கிறார்களோ அவர்களே நமது ஆன்மீக சகோதர சகோதரிகள் ஆவர். சபையாகிய அவர் சரீரத்தின் சிறந்த அவயவங்கள் இவர்களே! தேவ பிள்ளைகளாய், பரலோகத்தை சுதந்தரிக்கப் போகிறவர் களும் இவர்களே!

மெய்க் கிறிஸ்தவர்களாகிய இவர்களிடம், அன்பு , தயவு, இரக்கம், மென்மை, மன்னிக்கும் சிந்தை, சேவை உணர்வு என்ற உயர்ந்த பண்புகள் மட்டுமல்லாமல், சத்தியத்திற்குச் சென்று உறுதியாய் நின்று தவறுகளை எதிர்த்து நிற்கும் ஆற்றலும் உண்டு. ''அவர் ஒளியிலிருக்கிறது போல' இவர்களும் ஒளியிலே நடந்து, அவர் குரல் வேட்டு அவர் வழியில் உறுதியாய் நிலைத்திருக்கும் உத்தமர்கள்! ( 1யோவான் 1:7).

✤✤✤✤✤✤

''வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள்
எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான்
உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான்
சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என்
நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு,
என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது,
உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல்
கிடைக்கும்'' (மத்தேயு 11:28, 29).



✪✪✪✪✪

# விடுவிக்கப்பட்டேன்

- கேரி மூர்

தாவீதின் எல்லா சத்துருக்களின் கையிலிருந்தும் கர்த்தர் அவர்களைத் தப்புவித்துக் காப்பாற்றியபோது அவரைத் துதித்துப் பாடிய பாடல் தான் சங்கீதம் 18.

''என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூருவேன். கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடயமும், என் இரட்சண்யக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்.

''விடுவிக்கப்படுதல்'' என்ற வார்த்தையின் சுவாரஸ்யம் தப்பிப் பிழைத்தவர்களுக்குத் தான் தெரியும். கல்வாரியில் அன்று சிந்திய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தாலே நீங்களும் நானும் கூட விடுதலை பெற்றவர் களாயிற்றே. நாம் எவைகளிலிருந்து காப்பாற்றப்பட்டோம் என்று காண்போமா?

### 1. பாவத்திலிருந்து விடுதலை

''அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர் களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்.... தேவனோ இரக்கத் தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்து தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்காளாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்'' (எபேசியர் 2:1, 4,5,)

### 2. மரண பயத்திலிருந்து விடுதலை

''அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக் கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும்போது, ''மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது'' என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? ..... நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்'' (1 கொரி 15:54, 55,57).

### 3. உபயோகமற்ற நிலையிலிருந்து விடுதலை

''கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளி னால் உண்டானதல்ல; ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிற தற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனு டைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும் படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக் கிறார்''. (எபேசியர் 2:8-10).

ஏறக்குறைய 2000 வருடங்களுக்கு முன்பு ஓர் இருள் கவ்விய மத்தியான வேளையில், கொடிய சிலுவையொன்றில் தொங்கிக் கொண்டிருந்த நசரேயனாகிய இயேசுவின், ''முடிந்தது'' என்று ஒலித்த குரல் கேட்டு வானகம், ''விடுதலை'' என மறுமொழி கொடுத்தது.

இந்த மாபெரும் விடுதலையை எண்ணி மகிழ்ந்து அவர் புகழ் பாடிக் கொண்டிருப்போமாக!

# பிரித்தெடுக்கப்பட்டவர்கள்

*- டேல் கிரிசோம்*

கிறிஸ்தவர்கள் உலக மக்களிலிருந்து ஆவிக்குரிய வகையில் வேறு பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். நமது ஜீவியம் முழுவதையும் கிறிஸ்துவுக்கென்றே அர்ப்பணித்து, அவரோடு கூட சேர்ந்து பரலோகத்தில் சதாகாலமும் வாழ்வதற்காக ஆசையாய் எதிர்நோக்கி காத்திருக்கிறோம். (பிலி 3:20, 2 கொரி 3:1,2) இதை அறிந்த பிசாசானவன் நம்மை கிறிஸ்துவிடமிருந்து எப்படியாவது பிரித்து தன் வசப்படுத்திக் கொள்ள இரவும், பகலும் போராடி வருகிறான். தனக்கு கொஞ்ச கால அவகாசம் மட்டுமே உண்டு என்பதை அவன் உணர்ந்து தீவிரமாய் செயல்பட்டு வருகிறான். கிறிஸ்துவின் வருகையின் நாளில் அவனும் அவனது சகாக்களும் (மனந்திரும்ப மறுப்பவர்களும்) நித்திய அழிவாகிய நரக தண்டனையை அடைவது நிச்சயம் என்று அவனுக்குத் தெரியும்.

இந்நிலையில், தேவனுடைய பிள்ளைகளிலும் சிலர் உலகத்தின் பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதற்காக தங்கள் ஆத்துமாக்களை விற்றுப்போடுவதை நாம் கண்கூடாகக் காண் கிறோம். தேவன் நம்முடைய நல்வாழ்விற்காக தமது அன்பின் குமாரனையே சிலுவையில் பலியாக கொடுத்திருக்கும்போது, நாம் அந்த பரலோக பாக்கியத்தை நழுவ விட்டால் அது மாபெரும் குற்றமல்லவா?

சிலர் தங்களை கர்த்தருக்கென்று முழுமையாய் அர்ப் பணிக்காத காரணத்தினால் தான் மீண்டுமாய் உலக ஆசாபாசங்

களில் வீழ்ந்து போகிறார்கள். இதைத் தவிர்க்க இரட்சிக்கப் பட்ட நாள் முதற்கொண்டு ஒவ்வொருவரும் தேவ வசனத்தை அன்றாடம் கற்றுக்கொண்டு, மென்மேலும் கிறிஸ்துவுக்குள் வளர்ச்சியடைந்திட வேண்டும். நாம் விசுவாசத்தில் பெலன டையும்படிக்கு ஊக்கமான ஜெப ஜீவியம் அவசியமாயிருக் கிறது.

அதுவுமல்லாமல், அழிகின்ற ஆத்துமாக்கள் மேல் நாம் அக்கறை கொண்டு அவர்களை சந்திக்கவும் போதிக்கவும் தீவிரமாய் உழைத்துக் கொண்டிருந்தால், வீழ்ந்திடாதபடி நம்மையும் நாம் காத்துக்கொள்ள முடியும்.

எண்ணற்ற விசேஷித்த ஆசீர்வாதங்களைப் பெற்ற சிலர் அவரை மறுதலித்து, அவருடைய அன்பின் செய்தியை பிறருக்கு அறிவிக்காமல் சுற்றித்திரிய அவர்களுக்கு எப்படித் தான் மனம் வருகிறதோ தெரியவில்லை. சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாமல் ஓர் மாபெரும் இரட்சண்ய சந்தோஷமும் நம்பிக்கையும் கிடைக்கிறதே; இந்த நற்பலன்கள் பிறருக்கும் கிடைக்க வேண்டாமா? மற்றவர்களுக்கு செய்தி கூறும் வல்லமையான கருவிகளால் தம் மக்களை தேவன் பயன்படுத்துகிறார். வெறும் மண்பாண்டங்களாகிய நமக்கு இந்த மாபெரும் சிலாக்கியத்தை அளித்த தேவனுக்கு நாம் பயனுள்ளவர்களாய் செயல்பட வேண்டாமா? (2 கொரி 4:7).

கிறிஸ்தவனே நீ தேவனால் வேறு பிரிக்கப்பட்டவன், உன் வாழ்வு வேறுபட்டதாய் காணப்படட்டும்.''



# தாவீதின் மன விருப்பம்

*- பில் மெக்பார்லேண்ட்*

தன்னிகரற்ற ஓர் அழகிய ஆலயத்தை சாலமோன் கட்டி முடித்து அதன் பிரதிஷ்டை ஆராதனையும் நடந்து கொண்டிருக்கும் வேளையில், இந்த மாபெரும் பணி ஏற்பட்ட விதத்தை சாலமோன் நினைவு கூறுகிறான். ''இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயம் கட்ட வேண்டும் என்கிற விருப்பம் என் தகப்பனாகிய தாவீதின் மனதில் இருந்தது'' (2 நாளா 6:7).

ஒரு சிலரது நல்ல மனங்களில் தோன்றிய விருப்பங்களின் விளைவாகவே கர்த்தருக்கென்று பல பெரிய காரியங்கள் சாதிக்கப்பட்டிருக்கின்றன. உண்மையுள்ள தேவதாசன், அவருடைய மகிமைக்கென்று எதையாவது செய்யத் துடிக்கிறான். அதை நிறைவேற்றி முடிக்கும் வரை அது அவனது இதயத்தின் ஏக்கமாயிருக்கிறது.

தேவனுடைய பரிசுத்த தன்மையில் தாவீதிற்கு உண்டாயிருந்த பயபக்தியும், அவன் பெற்ற ஆசீர்வாதங்களின் பலனாக உண்டான நன்றியுணர்வுமே அவனது இந்தக் கனவிற்குக் காரணம். தேவ நாம மகிமைக்கென்று பாடுபடாமல், தன் சுயதேவைகளைக் குறித்து அக்கரை கொள்வது முறையல்ல என்பது அவன் உள்ளத்து உறுத்தலாயிருந்தது. (2 சாமு 7:1,2).

அவனது கனவு சாதாரணமானது அல்ல. தன் தேவனுக்கு ஈடு இணையற்ற ஓர் ஆலயம் தேவை என்று ஆசைப்பட்டான். ''கர்த்தருக்கு கட்டப்படும் ஆலயம், சகல தேசங்களிலும்

கீர்த்தியும் மகிமையும் உடையதாய் விளங்கும்படி, மகா பெரியதாய் இருக்க வேண்டும்'' (1 நாளா 22:5) என்பது அவனது திட்டம். இவ்வளவு ஆசையாய் பல முயற்சிகளை அவன் மேற்கொண்ட போதிலும் இதை செய்து முடிக்கும் பாக்கியம் அவனுக்குக் கிடைக்கவில்லை. ''நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம்; நீ யுத்த மனுஷனாயிருந்து, ரத்தத்தை சிந்தினாய்'' என்று தேவன் அவன் கையைக் கட்டிப் போட்டு விட்டார். (1 நாளா 28:3).

தேவ நாமம் மகிமைப்பட வேண்டுமென்ற ஒரே நோக்கமுள்ள எந்த மனுஷனும், இதை சாதித்த பெருமை யாரைச் சென்றடையுமென்பதைக் குறித்து கவலைப்படு வதில்லை. ஆகவே தாவீது சற்றும் மனமடிவடையாமல், தான் சம்பாதித்து வைத்திருந்த அனைத்தையும், கொண்டு சாலமோன் இந்த ஆலயத்தைக் கட்டும்படி சர்வ ஏற்பாடுகளையும் தீவிரமாய் செய்து வைத்தான். (1 நாளா 29:2). அவருக்கென்று நாம் எத்தனை செய்தாலும் அது ஒருக்காலும் வீண்போகாது.

தாவீதின் மனதிலே இருந்த இந்த விருப்பத்தை தேவன் பாராட்டுகிறார். (2 நாளா 6:8). கர்த்தரைத் தேடுவதிலும் அவருக்குப் பணிவிடை செய்வதிலும் இருந்த தாவீதின் வாஞ்சை நம்மெல்லாருக்கும் ஓர் உந்துதலாயிருக்கிறதல்லவா?

இன்று நாம் கர்த்தருக்கென்று என்ன செய்ய திட்ட மிட்டிருக்கிறோம்? நம்முடைய கனவுகளும் ஏக்கங்களும் என்ன? நம் மனதின் தீர்மானங்களின்படி தான் நம்முடைய வாழ்நாட்காலத்தில் அவருக்கென்று எதையேனும் சாதிக்க முடியும்.

☆☆☆

# வெளிப்படையான சில உண்மைகள்

*- டேவிட் பார்*

வேதாகமம் கூறும் ஒழுக்க நெறிகளை அறியாத அல்லது அது குறித்து சற்றும் கவலையில்லாத ஒரு தலைமுறையை இந்த நவீன யுகத்தில் நாம் காண்கிறோம். கற்பு, மணவாழ்வின் புனிதம், கள்ளமற்ற உள்ளம், என்பவையெல்லாம் காலம் கடந்த செல்லாக் காசு போலாகிவிட்டது. நமது இளைஞர்களுக்கு, தொலைகாட்சி, சினிமா மற்றும் சக நண்பர்கள் கூறுவது தான் வேதவாக்கு என்றாகிவிட்டது. ''நமக்கு எது விருப்பமோ அதைத் தடுக்க எவருக்கும் உரிமையில்லை'' என்பது அவர்களின் வாதம். இதில் வயது முதிர்ந்தவர்களும் கூட சில நேரங்களில் தடுமாறுகின்றனர்.

இளைஞர்களுக்கும், முதியவர்களுக்கும் சில எளிய கருத்துக்கள் இதோ:

வேசித்தனம் தண்டனைக்குரிய ஒரு பாவம்

தகாத பாலுறவு அனைத்தும் இதில் அடங்கும். விபச்சாரம் மற்றும் வேசித்தனத்தில் ஈடுபடுகிற ஒருவரும் தேவனுடைய தண்டனைக்கு தப்ப முடியாது. இவர்கள் பரலோக பாக்கியத்தை இழந்து போவார்கள். (கலா 5:19-21).

ஓரினச் சேர்க்கை இயற்கைக்கு முரணானது - தேவனுக்கும் விரோதமானது (ரோமர் 1:27).

இவ்விதமான தப்பிதங்களுக்கு எய்ட்ஸ் உட்பட பலவிதமான கோர விளைவுகள் உண்டு. இறுதியில் நரக ஆக்கினையும் அடைய வேண்டியதாயிருக்கும்.

ஆபாச காட்சிகள், துர் இச்சைகளையும், காம விகாரத்தை யும் தூண்டுபவை : இவை பத்திரிக்கை, சினிமா, தொலைக் காட்சி, போன்ற எந்த வழியில் வந்தாலும் ஆபத்தானதே, இது பற்றி இயேசு கூறும்போது, ''ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று'' என்றார் (மத் 5:28).

அந்தரங்கத்தில் நடந்தவைகள் ஒரு நாள் அம்பலமாகும்.

வெட்கக்கேடான பல செயல்கள் யாருக்கும் தெரியாத மறைவிடங்களிலே நடப்பதுண்டு (எபேசியர் 5:12). நாகரிக உலகில் பல வசதியான மறைவிடங்கள் அமைவதுண்டு. இதனால் தங்களின் கேவலமான செயல்கள் யாருக்குமே தெரியாது என்று நினைப்போர் உண்டு. ஆனால் இவை எல்லாவற்றையும் தேவன் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார். (நீதி 15:3). அந்தரங்கமான எந்த காரியமானாலும் அதை தேவன் நியாயத் தீர்ப்பிலே கொண்டு வந்து நிறுத்துவார் (பிரசங்கி 12:14).

***காதல் என்ற சாக்கில் பாவம் செய்யாதே.***

''நாங்கள் ஒருவரையொருவர் காதலிக்கிறோம், எனவே இதில் என்ன தப்பு இருக்கிறது? என்று முறைகேடான பாலுறவுக்கு நியாயம் கற்பிப்போர் உண்டு. இது ஒரு வகையில் தங்களையே ஏமாற்றிக்கொள்ளுதல் ஆகும். அன்பு கண்ணிய மானது. நீ ஒரு பெண்ணின் மேல் உண்மையான அன்பு வைத் திருந்தால் அவள் நரகத்திற்குச் செல்லும்படியான பாவத்தில்

அவளைத் தள்ளமாட்டாயே! அன்பு என்ற வார்த்தையை நீ பயன்படுத்தினால் அந்த வார்த்தையைக் கொச்சைப் படுத்தாதே. அப்படியானால் அது அன்பு அல்ல இச்சை (ரோமர் 13:14).

தாம்பத்திய அன்பு தான் பாலுணர்வுகளுக்கு தேவன் வகுத்த வழி!

திருமண பந்தத்தின் மேன்மையும் கடமைகளும் வேதத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது (1 கொரி 7:3-5). கணவனும் மனைவியும் ஒருவரிலொருவர் அன்பு கூற வேண்டு மென்பது தேவ கட்டளை (எபேசி 5:25, 28 ; கொலோ 3:18,19) அன்பில்லா குடும்பம் தேவனுடைய திட்டத்தின்படியானதல்ல!

திருமணம் என்பது நமது மரணம் வரை நம்மை கட்டுப்படுத்தும்.

கிறிஸ்து இதுபற்றி மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார் (மத் 19:3-9). இதுகுறித்து திருமண ஆலோசகரோ, வக்கீலோ, நீதிபதியோ, அல்லது வேறு எந்த நபர் கூறும் மாற்றுக் கருத்துக்கள் ஒரு பொருட்டல்ல. வேசித்தன முகாந்திரத்தினா லொழிய இந்த திருமண உறவு துண்டிக்கப்படுமானால் (விவாகரத்து) அது தேவனுக்கு விரோதமான பாவமாகும். அவ்விதம் விவாகரத்து செய்து விட்டு மறுமணம் புரிவது விபச்சாரக் குற்றமாயிருக்கிறது.

சந்தர்ப்ப சூழ்நிலைகளால் கணவனும் மனைவியும் பிரிந்து வாழ நேர்ந்தாலும் அவர்களின் விவாக பந்தம் தொடர்கிறது.

சட்டரீதியாக விவாகரத்து பெற்றிருந்தாலும், வேறொரு நபரைத் திருமணம் செய்து கொள்ள இவர்களுக்கு அதிகார மில்லை. சேர்ந்து வாழும்போது எவ்விதம் ஒருவருக்கொருவர் துரோகம் செய்யாமல் இருக்க வேண்டுமோ அதே கட்டுப்பாடு இப்போதும் நீடிக்கிறது. எனவே வேறொரு நபரை காதலிக் கவோ, திருமணம் செய்து கொள்ளவோ இவர்களுக்கு சற்றும் உரிமையில்லை. (1 கொரிந்தியர் 7:10, 11 பார்க்கவும்).

பாவத்தினால் மட்டுமே திருமண பந்தம் முறிகிறது.

ஒருவேளை தம்பதியினர் இருவருமே குற்றவாளிகளாய் இல்லாதிருந்தபோதிலும் அவர்களது பந்தத்தை உடைக்கிற சக்தி பாவத்திற்கு மட்டுமே உண்டு. ஆனால் ஆண்களும் பெண் களும் பாவத்தோடு விளையாடிக்கொண்டு தங்கள் வாழ்க்கைத் துணைக்கு துரோகம் விளைவித்து, குடும்பங்களை சீர்குலைத்து, பிள்ளைகளின் எதிர்காலத்தை கேள்விக்குறி யாக்கிக் கொண்டிருப்பது வேதனையளிக்கிறது.

இவ்விதமாய் தேவனுடைய சித்தத்திற்கு எதிர்த்து நிற்பதாய் உண்டாகும் பயங்கரமான நித்திய விளைவு களை நினைத்துப் பார்க்கையில் நெஞ்சம் நடுங்குகிறது. (எபி 10:30,31).

கிறிஸ்து காட்டும் வழியே இனிய இல்லறத்துக்கு உகந்தது. மனித வாழ்க்கையென்றாலே சஞ்சலங்களும், இழுபறிகளும், இருக்கத்தான் செய்யும் (யோபு 14:1) என்றாலும், எபேசி 4:32; 5:22, 23; 1 பேது 3:1-8; அப் 20:35; மத் 6:33 ஆகிய வேத வசனங்கள் கூறும் கிறிஸ்துவின் உபதேசங்களின்படி நம் வாழ் வில் நாம் முனைப்புடன் நடந்து வருவோமானால், இடையி டையே எழும்பும் பிரச்சனைகள் எல்லாவற்றையும் மேற்கொண்டு, இன்பகரமான ஓர் குடும்ப வாழ்வை அனுப விக்க முடியும்.

# சோதனையில் வெற்றி பெறுதல்

*- டி. பியர்ஸ் பிரவுண்*

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிசாசானவனால் சோதிக்கப்பட்ட சம்பவம் வேதத்திலுள்ள ஓர் மிக அழகிய பகுதியாகும். பாவம் செய்யத் தூண்டுதல் வரும்போது அதில் எவ்விதம் ஒருவன் வெற்றிபெற இயலும் என்பதை கற்றுக்கொள்ள நமது ஆண்டவரை கூர்ந்து கவனிப்போமாக. அவர் எல்லாவிதத்திலும் நம்மைப் போல சோதிக்கப்படும் பாவமில்லாதவராயிருக்கிறார் (எபி 4:15).

***நம்முடைய சோதனை வேளைகளில் என்ன செய்ய வேண்டும்?***

முதலாவதாக, நாம் ஆவியானவரால் நடத்தப்பட வேண்டும். தேவ ஆவியானவரால் நமக்கு அருளப்பட்ட வேத வசனங்கள் என்ன வழிகாட்டுகிறதோ அவைகளில் மனப்பூர்வ மாய் நடந்து செல்ல நாம் முதலாவது தீர்மானிக்க வேண்டும் (ரோமர் 8:14). லூக் 22:42ல் ''என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக் கடவது'' என்று இயேசு கூறியதைப் போலவே, நம்முடைய சுயவிருப்பங்களை விட்டு விட்டு தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்திருந்தால் சாத்தான் நம்மை மேற்கொள்வதில்லை.

இரண்டாவதாக, தேவ ஒத்தாசை நமக்குண்டு என்ற உணர்வு நமக்குத் தேவை.

1 கொரி 10:13ல் ''மனுஷருக்கு நேரிடுகிற சோதனையே அல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங் கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்கு தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்'' என்று ஓர் வாக்குத்தத்தம் உண்டு. ஆயினும் இந்த வாக்குத்தத்தத்தை எவ்விதம் நம் வாழ்வில் ருசித்துப் பார்ப்பது? என்பதே நமது கேள்வி.

முதற்கண் இந்த வாக்குத்தத்தத்தை ஒருவன் அறிந்து அதை முழுமனதுடன் நம்ப வேண்டும். எபேசியர் 5:18,19ல் ''ஆவியினால் நிறைந்து'' என்கிற அதே அனுபவம் கொலோ 3:16ல் ''கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள் பரிபூரணமாய் வாசமாயிருப்பதாக'' என்று கூறப்பட்டுள்ளது. எனவே ஆவியானவரின் வசனங்கள் நம் இருதயங்களில் நிறைந்திருக்க வேண்டும். அப்படியிருக்கும் போது எந்த சோதனை வந்தாலும் அதைச் சமாளிக்கும் ஞானம் நமக்கு இருக்கும், தேவனுடைய ஒத்தாசையை நாம் நம்பிச் சார்ந்திருக்கும்போது, பிசாசானவனால் நம்மை மேற்கொள்ள இயலாது.

இறுதியாக வேத வசனங்கள் பிசாசை விரட்டியடிக்கும் என்பதை நம் வாழ்வில் அப்பியாசப்படுத்த வேண்டும்.. ''பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்'' என்று யாக்கோபு 4:7ல் கூறப்பட்டுள்ளது.

இயேசுவானவர் சோதிக்கப்பட்டபோது வேத வசனங் களைத் தவிர வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை.

ஆம், கர்த்தருடைய வசனம் கன்மலையையும் நொறுக்கும் சம்மட்டி அல்லவா? (எரேமியா 23:29). கிறிஸ்துவின் வசனம் பரிபூரணமாய் நம் உள்ளத்தில் வாசம் பண்ணும்போது நாமும் அதே வல்லமையை சாத்தானுக்கு எதிராக பிரயோகிக்க முடியும். ''நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையால் பலப்படவும்'' (எபேசியர் 3:16) வீழ்ந்து போகாமல் வெற்றிபெறவும் தேவன் தாமே கிருபை புரிவாராக.

# மன மேட்டிமை

*- டான். எல். நார்வுட்*

செல்வச் செழிப்பின் காரணமாகவோ, வேறு எந்த அந்தஸ்த்தின் காரணமாகவோ, கிறிஸ்தவர்கள் ஒருபோதும் மன மேட்டிமை கொள்ளுதல் கூடாது. இதனை தற்பெருமை, அகந்தை எனவும் விளக்கலாம்.

இந்த மனமேட்டிமை என்கிற சுபாவம், மனத்தாழ்மை என்கிற மேன்மையான பண்பை நம் வாழ்விலிருந்து முற்றிலும் அகற்றிவிடும். நமது குற்றங்களை அறிக்கை செய்து மனந் திரும்ப விடாமல் தடுத்து நிறுத்திவிடும். தவறுகளை உணர்ந்து மன்னிப்பு கேட்க நம்மை அனுமதிக்காது.

மனிதனால் வாழும் காலம் முழுவதும், ஒரு வேளை நாம் உத்தமமான கிறிஸ்தவர்களாயிருந்தாலும், தேவனுடைய இரக்கத்தையும், மன்னிப்பையும் பெற வேண்டியவர்களாயிருக்

கிறோம் (ரோமர் 3:23). மற்றவர்களுடைய தப்பிதங்களை நாம் மனப்பூர்வமாக மன்னித்தால் தான் தேவ மன்னிப்பும் இரக்கமும் நமக்குக் கிடைக்கும். (மாற்கு 11:25, 26; மத்தேயு 6:1,15).

நாம் பிறருக்கு இரக்கம் காட்டி அவர்களை மன்னிக்க வில்லையென்றால் நம்மை தேவன் மன்னிக்க மாட்டார் என்பதை இயேசு தமது உவமையில் விளக்குகிறார். மத்தேயு 18:23-35. இதன் காரணமாக நித்திய காலமாய் தண்டிக்கப்பட நேரிடும்.

தேவனிடத்தில் நாம் கொண்டுள்ள ஓர் அன்பின் உறவிற்கு இந்த பெருமை குணம் ஓர் மாபெரும் முட்டுக் கட்டையாய் இருக்கிறது. நித்திய ஜீவனை சுதந்தரிக்க விரும்பும் அனைவரும் உதறித்தள்ள வேண்டிய பாதகம் இந்த ''தற்பெருமை''.

தூரந்திரிந்த மகனைப்பற்றிய உவமையில் இந்த மனத் தாழ்மையை இயேசு மிக அழகாக வர்ணிக்கிறார். (லூக் 15:10-32). அவர் தன்னைத் தாழ்த்தி, சற்றும் மாய்மால மில்லாமல், தன் தவறுகளை மனதார ஒத்துக்கொண்டு மனஸ் தாபப்பட்டு தனது தகப்பனின் தயவைப் பெற்றுக் கொண்டான். வெளிப்படையாக மனம் திறந்து தன் தவறுகளை அறிக்கை யிட்டான். தனது மகன் மனப்பூர்வமாக தன் தவறை உணர்ந்து மனஸ்தாபப்பட்டதைக் கண்ட தகப்பன் அவனை மன்னித்து மீண்டும் தன் குடும்பத்தில் ஏற்றுக்கொண்டான்.

நாமும் நமது தவறுகளை உணர்ந்து அறிக்கையிட்டு நம்மைத் தாழ்த்தி, கெஞ்சும்போது பாவங்களை மன்னித்து இரக்கம் பாராட்ட அவர் மனமுள்ளவராயிருக்கிறார். தாழ்மை யுள்ளவர்களாயிருப்பர். அப்படிப்பட்டவர்களின் குற்றங்களை மன்னிக்க தேவனும் கருணையுள்ளவராயிருக்கிறார். ☆

# நான் ஒரு கடனாளி

*- ராய் டியூனவின்*

''ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூறுகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்'' என்று பவுல் கூறியது உங்களுக்கு நினைவிருக்கலாம் (ரோமர் 13:8). ஆயினும் தேவன் தன் மேல் காட்டின தயவுக்கும் அன்புக்கும் சதாகாலமும் கடன்பட்டவனாகவே பவுல் கருதுகிறார். முன்பு பவுல் ஓர் நிர்க்கதியான, நம்பிக்கையிழந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார். ''அப்படியிருந்தும்.... பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும் படிக்கு இரக்கம் பெற்றேன்'' என்று குறிப்பிடு கிறார் (1 தீமோ 1:16). நம்முடைய வாழ்விலும் இதே நிலை தானே இருந்தது!'' ''தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ள வராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்'' என வேதம் எடுத்துக் காட்டுகிறது. (எபேசியர் 2:4,5).

இதை மனப்பூர்வமாய் உணர்ந்துகொண்ட எவருக்கும் பவுலைப் போன்ற ஓர் கடமையுணர்வு ஏற்படும் என்பது நிச்சயம். ''அது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறதே! சுவி சேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ!'' (1 கொரிந்தியர் 9:16).

சேற்றிலே விழுந்து புரண்டு கொண்டிருந்த பவுலை தேவன் தூக்கியெடுத்து, கழுவி தமது சொந்த மகனாக ஏற்றுக்கொண் டார். முன்பு ஒருக்காலும் பாவமே செய்யாதவனைப் போன்ற

நீதிமானாக்கி, தமது சித்தத்தை வெளிப்படுத்தி, ஒரு சுதந்தரவாளியாக, பரலோகவாசியாக மாற்றி, பரிசுத்த ஆவியினால் முத்தரிக்கவும் செய்தார். இதே ஆசிர்வாதங்களை தம்முடைய பிள்ளைகள் எல்லோருக்கும் தேவன் கொடுத்திருக்கிறார். நம்முடைய கடந்த கால நிர்க்கதியான நிலைமையை இன்று எண்ணிப் பார்க்கும் எவருமே பவுலோடு கூட சேர்ந்து, ''நான் மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கடனாளி'' என்று உறுதிபட கூற முடியும்.

✧★✧★✧★

# நன்றி மறந்தது ஏன்?

*- காலின் மெக்கி*

1 கொரி 10:6-10 : அவர்கள் இச்சித்தது போல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்கு திருஷ்டாந்தங்களாயிருக்கிறது. 'ஜனங்கள் புசிக்கவும், குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள்' என்று எழுதியிருக்கிறபடி அவர்களில் சிலர் விக்கிரக ஆராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள்.

அவர்களில் சிலர் வேசித்தனம் பண்ணி, ஒரே நாளில் இருபத்து மூவாயிரம் பேர் விழுந்து போனார்கள். அதுபோல நாமும் வேசித்தனம் பண்ணாதிருப்போமாக.

அவர்களில் சிலர் கிறிஸ்துவை பரீட்சை பார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அது போல நாமும் கிறிஸ்துவை பரீட்சை பாராதிருப்போமாக.

அவர்களில் சிலர் முறுமுறுத்து சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அது போல நீங்களும் முறுமுறுக்கா திருங்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நன்றியறிதல் உள்ளவர்களா யிருக்க வேண்டும். எனினும் நாம் அடிக்கடி நன்றி மறந்தவர் களாயிருக்கிறோம் என்பதை மறுக்க இயலாது. எவ்வாறெனில் நமது அன்றாட அலுவல்களில் தினம் தினம் நாம் மூழ்கிப் போகும் போது, நமது வாழ்வின் ஆசீர்வாதங்களுக்கெல்லாம். ஊற்றுக் காரணருமான தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டு மென்ற நினைவே வருவதில்லை. நன்றி கெட்டவர்களுக்கு ஓர் பொருத்தமான உதாரணம் இஸ்ரவேல் ஜனங்கள் என்றால் மிகையாகாது. 1 கொரிந்தியர் 10-ம் அதிகாரத்தில் இவர்கள் நன்றி மறந்ததன் காரணங்கள் பல உண்டு என பவுல் கூறுகிறார்.

***1. பொல்லாதவைகளை இச்சித்தார்கள் (வச. 6)***

தேவன் தங்களுக்கு அளித்த நல்ல பல ஈவுகளுக்கு நன்றி யறிதல் அற்றவர்களாய்ப் போனார்கள். அடங்காத ஆசையுள்ள வர்களாய், தேவன் வேண்டாமென்று விலக்கினவைகளை யெல்லாம் நாடிப் போய், இறுதியில் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கே கேடு விளைவித்துக் கொண்டார்கள்.

***2. விக்கிரக ஆராதனைக்காரர் ஆனார்கள் (வச 7)***

அவர்கள் மனதில் தாறுமாறான எண்ணங்கள் உருவா யிற்று. தேவனுக்கு சேவை செய்யும் எண்ணம் சற்றும் இல்லாமற் போயிற்று. சிருஷ்டிகரின் தெய்வீக வல்லமையை விட்டு விட்டு கீழ்த்தரமான உருவங்களில் தங்கள் நன்றி கெட்ட நிலையை வெளிப்படுத்தினார்கள். ''அவரை ஸ்தோத்தரியாமலு மிருந்து'' (ரோமர் 1:21).

### 3. வேசித்தனம் பண்ணினார்கள் (வச. 8)

தங்கள் சரீரங்களில் இச்சைகளுக்கு தீனிபோடும் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபட்டார்கள். மிருகத்தனம் குடி கொண்டிருக்கும் உள்ளத்தில் நன்றியுணர்விற்கு இடமேது!

### 4. கிறிஸ்துவை பரீட்சை பார்த்தார்கள் (வச. 9).

தேவன் அளித்த உணவு மற்றும் பொருட்களில் அவர்களுக்குத் திருப்தியில்லை. அவர் அன்றாடம் போஷித்து வந்திருந்தும் அவருக்கு நன்றியறிதல் உள்ளவர்களாய் நடந்து கொள்ளவில்லை.

எனக்கு அன்பானவர்களே, இஸ்ரவேலர் செய்த இப்படிப்பட்ட பயங்கரமான தவறுகளை நாமும் செய்துவிடாத படி எச்சரிக்கையாயிருப்போமாக! அவருக்கு நாம் என்றென்றும் நன்றியறிதல் உள்ள பிள்ளைகளாய் வாழ்வோமாக!

✤✤✤✤✤

## விசுவாசம்

**"விசுவாசம்" என்பது மனிதனிடத்தில் இருந்து புறப்படும் ஒரு உள்ளுணர்வு அல்ல. "விசுவாசம் கேள்வியினால் வரும். தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று வேதம் சொல்லுகிறது. தேவனைப் பற்றியும், கிறிஸ்தவனைப் பற்றியும், வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படாமல், நாம் இவைகளைப் பற்றி ஒன்றும் அறிய முடியாது. தேவனிடத்தில் விசுவாச மாயிருங்கள். என்னிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்று இயேசு சொன்னார்.**

**"இயேசு தேவனுடைய குமாரனு மாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" என்று இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய யோவான் எழுதி இருக்கிறார்.**

# சுவிசேஷத்தைக் கேள்விப்படாத மனுஷனுக்குத் தண்டனையா?

*- டீமர் ஏலம்*

சுவிசேஷத்தைக் கேள்விப்படாவிட்டால் தப்பேதுமில்லை என சிலர் சொல்லுகின்றனர். இப்படிப்பட்ட எண்ணத்தால் தான் இன்று சுவிசேஷ பணி மந்தமாகியுள்ளது. " ஒருமுறை கூட கேள்விப்பட வாய்ப்புக் கிடைக்காத ஒருவனை நித்திய கால மாக தண்டிக்க அன்பே உருவான தேவனுக்கு எப்படி மனம் வரும்?'' என்பது பலரது கருத்து. அன்பானவர்களே, ''என் நினைவுகள் அல்ல'' என்று ஏசாயா 55:8ல் தேவன் கூறுவதைக் கவனியுங்கள்.

மேலும் ஒரு காரியத்தை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, ஒருவன் சுவிசேஷத்தைக் கேள்விப் படாத தினால் அல்ல அவன் பாவியாயிருப்பதாலேயே அழிவுக்குரிய வனாகிறான்.

ஒட்டு மொத்தமாக மனுஷகுலம் முழுவதும் பாவத்தில் வீழ்ந்து போனது. (ரோமர் 3:10, 23). ஒருவனாகிலும் தப்பிப் பிழைக்கவில்லை. இந்நிலையில் மனுக்குலத்தின் பாவத்திற்கு பிராயச்சித்தம் செய்து அவனுக்கு ஓர் விமோசனம் அருள, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தேவைப்பட்டது. ''இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது'' என வேதம் திட்ட வட்டமாகக் கூறுகிறது. (எபி 9:22). இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எல்லோருடைய பாவங்களையும் நீக்கி சுத்திகரிக்க சிந்தப்பட்டது உண்மைதான். ஆயினும் தேவ வசன நிபந்தனை களுக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு மட்டுமே இந்த புண்ணிய இரத்தத்தின் பலன் கிடைக்கும்.

**ஒருவன் இந்த இரத்தத்தால் பாவமன்னிப்பை பெற வேண்டுமானால்,**

சுவிசேஷத்தை விசுவாசித்து (எபி 11:6), மனந் திரும்பி (லூக் 13:3), அறிக்கையிட்டு (மத். 10:32, 33), (ரோமர் 10:9,10) இரத்தம் சிந்திய சம்பவமாகிய அவர் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற வேண்டும். (ரோமர் 6:3-8). இந்த அத்தியாவசிய நிபந்தனைகள் மூலமாகத் தான் ஒருவன் புதிதாகப் பிறக்கிறான். புதிதாகப் பிறக்காத யாருமே இரட்சிக்கப்பட முடியாது (தப்பிக்க முடியாது) என்று இயேசு பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன்'' (யோவான் 3:3-5). இயேசு இந்த வார்த்தைகளை திட்டவட்டமான வினயத்தோடு சொல்லியிருக்கையில், இந்த விஷயங்களைக் கேள்விப்படாதவன் தப்பித்துக் கொள்ள வாய்ப்பு ஏது?

இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சபையில்சேர்த்துக் கொள்ளுகிறார் என்றும், சபையாகிய சரீரத்துக்கு அவர் இரட்சகராயிருக்கிறார் என்றும் வேதம் கூறுகிறது. (அப். 2:47, எபேசி 5:23) அப்படியிருக்கும் போது கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து கேள்விப்படாதவன் இரட்சிக்கப்பட்டவரின் கூட்டத்தில் இருக்க வாய்ப்பில்லையே.

ஞானஸ்நானம் பெற்றவர்கள் மட்டுமே கிறிஸ்துவை அணிந்து கொண்டவர்கள். ''ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவை தரித்துக் கொண்டீர்களே'' (கலா 3:27).

கேள்விப்படாதவனுக்கு தேவன் தண்டனை கொடுப்பது அநியாயம் என்று சொல்பவர்கள் சற்று எச்சரிக்கையாயிருக்க வேண்டும். பாவிகளுக்கு நீதியால் நியாயத் தீர்ப்பு வழங்கும் பொறுப்பு தமக்குண்டு என்பது தேவனுக்கு தெரியாதா?

பாவம் என்பது நித்திய காலமாய் தண்டிக்கப்படும் அளவிற்கு மோசமானது அல்ல என்பது அநேகரின் கற்பனை. பாவத்தை மனித கண்ணோட்டத்தில் பார்ப்பதை விட்டு விட்டு தேவனுடைய கண்ணோட்டத்தில், பரிசுத்த கண்களால் பார்க்க வேண்டும். தேவன் நீதியுள்ளவர் (சங்க 89:14. எரேமி 23:5-8). குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்பது நீதியின் சட்டம். சர்வ வல்ல தேவனால் எந்தக் குற்றத்தையும் காணாமல் இருக்க முடியாதே.

எனினும் பாவத்திற்கு நிவாரணமாக தேவன் தம்முடைய சொந்த குமாரனையே கொடூர சிலுவையில் அர்ப்பணித்தார். அந்த அருமருந்தாம் இயேசுவின் இரத்தத்தை நம்மேல் உள்ள அன்பினாலும் இரக்கத்தினாலும் தான் தேவன் தந்தருளி யிருக்கிறார்.

உதாரணத்திற்கு ஒரு கொடும் வியாதியால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதனை எடுத்துக்கொள்வோம். அந்த வியாதியைப் போக்க வல்ல அருமையான ஒரு மருந்து இருந்தாலும், அது குறித்து அவனுக்குத் தெரியவே இல்லையென்றால் அவனை அந்த வியாதி கொன்றுவிடுமல்லவா? அது போலவே பாவத்தி லிருந்து விடுதலை பெறும் வழியை ஒருவன் அறியாதவனா யிருந்தால் அவன் தப்பிப் பிழைக்காமல் மாண்டு போவது நிச்சயம்.

கேள்விப்படாதவர்கள் தப்பித்துக் கொள்ளலாம் என்றால் ''எல்லாருக்கும் போய் சொல்லுங்கள்'' என்று அவர் ஏன்

கட்டளையிட்டார்? கேட்டவர்களும் கூட அதை விசுவாசியாமற் போய் ஆக்கினை அடைவார்கள் (மாற் 16:26) என்று அவர் சொல்லியிருப்பதால், "ஆக்கினையை வருவிக்கும் ஒரு செய்தியை தேவன் அனுப்பிவிட்டார்" என்று நாம் அவர் மேல் குற்றம் சாட்ட இயலுமா?

இல்லையே; மக்கள் அழிவதற்கு காரணம் அவர்களைப் பீடித்திருக்கும் பாவம் தானே ஒழிய, சுவிசேஷத்தை கேள்விப் படாத குற்றத்தினால் அல்ல. பாவ நிலையில் இருக்கும் எவருமே கிறிஸ்துவின் பரிசுத்த சரீரத்தில் பங்கு கொள்ள இயலாத நிலையிலிருக்கின்றனர். இதற்காகத்தான் இயேசு "சுவிசேஷத்தை அனைவருக்கும் பிரசங்கியுங்கள்" என்று ஆணையிட்டார். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவர் இரத்தத்தால் பாவமன்னிப்பைப் பெறாத எவருமே அழிவின் பாதையில் தான் நின்று கொண்டிருக்கிறார்கள்.

*******

## ஊக்கம் அருளும்

ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்த மிகவே
நேசா உதியும் சுத்தரே நித்தம் மகிழவே

வீசிரோ வான ஜோதி கதிரிங்கே
மேசியா எம் மணவாளனே
ஆசாரியரும் வான்ராஜனும்
ஆசீர்வதித்திடும்.

இத்திருச்சபையோடென்றும் என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டும் பின் சென்றும் ஓங்க செய்தருளும்
இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே
இன்பத்தோடுன் பாக்கியம் சூட்டுமே
உம்மிலே தங்கி தரிக்கவே ஊக்க மருளுமே.

# நமது லட்சியப் பணி என்ன?

*- ஆல்பர்ட் கார்ட்னர்*

சபை தெய்வீகமானது, இதன் இலட்சியப் பணியும் தெய்வீகமானது. இதைக் குறித்த ஒரு சரியான விளக்கம் அநேக தவறான அபிப்பிராயங்களைத் தவிர்க்கும். அதுவுமின்றி நாம் செய்ய வேண்டிய பணிகளை மேம்படுத்தவும், நமது இலட்சியத்தைக் குறித்த கண்ணோட்டத்தில் கவனம் சிதறாமல் இருக்கவும் உதவும். அநேகர் இவ்விஷயத்தில் வழிமாறிப் போய்விட்டனர். சுறுசுறுப்பாக இயங்குகின்றனரே தவிர தெய்வீக எதிர்பார்ப்பை அவர்கள் நிறைவேற்றுவதில்லை. சபையானது, ஆத்தும ஆதாயப் பணியைத் தவிர வேறு எந்தவிதமான பணி செய்தாலும் அதைக் கண்டு சாத்தான் அஞ்சுவதில்லை.

அப்போஸ்தல நடபடிகளில், சபையின் சரித்திரத்தை நாம் கண்ணோக்கும் போது, அப்போஸ்தலரும், அன்றைய பிரசங்கிமாரும் செய்த ஊழியத்தைப் பார்த்து மலைத்துப் போவோம். பட்டணம் விட்டு பட்டணம் செல்லும்போது இன்னும் அநேகருக்கு சுவிசேஷத்தை சொல்லியாக வேண்டும் என்ற தணியாத தாகம் அவர்களுக்குள் இருந்தது.

போகையில், ''அநேகருக்கு போதித்து சீஷராக்கி, ஞானஸ்நானம் கொடுப்பதே'' அவர்கள் குறிக்கோளாயிருந்தது. (மத் 28:19). அழியும் ஆத்துமாக்களை இரட்சிக்கும் வல்லமை சுவிசேஷத்திற்கு உண்டு என்ற ஆழ்ந்த நம்பிக்கை தான் பவுல் அப்போஸ்தலனை உலகம் முழுவதும் பிரசங்கிக்க உந்தித் தள்ளியது. தடைகள், எதிர்ப்புகள் என்று எது வந்தபோதும்

அவன் தன் இலட்சியத்தை விட்டு விடவில்லை. கொரிந்து பட்டணத்தில் கர்த்தர் பவுலை நோக்கி; '' நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே..... இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு!'' (அப் 18:10) என்றார்.

அன்றிருந்த நிலை வேறு, இன்றைய நிலை வேறு என்று நாம் ஏன் எண்ணுகிறோம்? அன்று உலகத்தைக் கலக்கிய அதே சுவிசேஷ ஊழியத்தை உலகத்திற்கேற்றபடி நெளித்து வளைத்து விடுவோமானால் அதுதான் வல்லமையை இழந்து செயலற்ற தாகிவிடுவது நியாயம் தானே.

சற்று கற்பனை செய்து பாருங்கள். பவுல் அத்தேனே போன்ற பட்டணத்துக்கு போய் அங்கிருந்த விக்கிரக ஆராதனைகளைக் கண்டு ஆவியில் வைராக்கியம் கொண்ட போது, ''சுபிட்சமாய் வாழ்வது எப்படி? என்று முதல் நாள் செய்தியிலும், பின்னர் மூன்று நாட்கள் நடந்த கூட்டங்களில் ''அஞ்ஞான உலகில் ஞானமாய் வாழ்வது எப்படி?'' என்றும் பூசி மெழுகி பிரச்ங்கித்திருப்பாரா?

ஊழியப் பாதையில் ஆத்துமாக்களுக்கு போதித்து இரட்சிக்கிற இந்த அறுவடைப் பணி நடைபெறாதபோது மற்ற சமுதாய நலப் பணிகள் மேல் நமது கவனம் திசை திரும்புகிறது. சமூக நலப் பணி நன்மையானது தான், முக்கியமானது தான்; அது சுவிசேஷ பிரசங்க ஊழியத்திற்கு ஓர் மாற்று மருந்தாய் மாறாத வரை.

அப்போஸ்தலர்கள் பிர்சங்கித்தபோது மக்கள் கீழ்ப்படிந்து சபைகள் உருவாயின. பின்னர் அவர்கள் வேறு பட்டணங் களுக்குச் சென்று இதே பணியைத் தொடர்ந்தனர். இயேசுவின் இலட்சியப்பணி லூக்கா 19:10ல் மிக அழகாகவும் தெளி

வாகவும் சொல்லப்பட்டுள்ளதைக் காண்க. ''இழந்து போனதை (தொலைந்து போனதை) தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்''. நம்முடைய நோக்கமும் இது தானே! நாம் எதைச் செய்தாலும் அது இந்த இலட்சியத்திற்கு பயனுள்ளதாயிருக்க வேண்டும்.

இதைக் காட்டிலும் முக்கியத்துவம் குறைந்த எதிலும் நாம் தலையிட்டுக்கொண்டு, உழைத்துக்கொண்டிருப்பது தேவனுக்குப் பிரியமானது என்று ஒரு போதும் எண்ணலாகாது. இயேசு தமது அப்போஸ்தலர்களை நோக்கி... ''நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் கைக்கொள்ளும் படிக்கு அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்'' என்றார் (மத்தேயு 28:19-20). ''சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்'' என்பது அவரது ஆணை. எனவே அதற்கு அடிபணிந்து செயல்பட வேண்டியது நமது கடமை. உலகில் சுவிசேஷத்தை கேள்விப்படாத ஒருவன் மீதியிருந்தாலும், நமது பணி இன்னும் முற்றுப்பெறவில்லை என்று தான் பொருள்.

''நீங்கள் உலகமெங்கும் புறப்பட்டுப்போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான்'' (மாற்கு 16:15, 16). இந்த இலட்சியப் பணி நம் சபைகளில் தங்கு தடையின்றி தொடரட்டும்!

✧✧✧✧✧

# மல்கியாவின் அறிவுரைகள்

- லியான் கோல்

***ஆசிரியர் :***

பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகம் என்ற சிறப்பு இந்த மல்கியாவிற்கு உண்டு. மல்கியா என்பது ஒரு நபரின் பெயரல்ல. இதன் எழுத்தாளரைப் பற்றி நாம் அறிந்தது சொற்பமே. எனவே இப்புத்தகத்தின் எழுத்தாளன் யாரென தெரியாது என்றும் சிலர் கருதுகின்றனர். எஸ்றா எனும் வேதபாரகன் தான் இப்புத்தகத்தின் ஆசிரியர் என யூதரில் பலரும் நம்பினர். அவர் நெகேமியா ஆற்றிய பணிகளில் இவர் நெருங்கிய தொடர் புடையவராயிருந்தார். (மல்கியா 1:8ஐயும் நெகேமியா 5:15,18ஐயும் ஒப்பிட்டுப் பார்க்கவும்). அவரது பெயர் ''கர்த்தருடைய தூதுவன்'' என்று பொருள் படும். அந்த நற்பெயருக்கு ஏற்றபடி அவன் வாழ்ந்தான்.

இன்றைய நாட்களில் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டிய மிக உன்னதமான சத்தியங்கள் இந்தப் புத்தகத்தில் உள்ளன.

***தேவனை அசட்டை செய்தல்***

தேவன் அருளிய அவரது ஒப்பற்ற அன்பை அவரது ஜனங்கள் அசட்டை செய்தனர். தம்முடைய நாமத்தையே அவர்கள் அசட்டை செய்ததாக தேவன் குற்றம் சாட்டுகிறார். எவ்வாறெனில், தேவனுக்கு ஏற்புடையதல்லாத பலிகளையும் காணிக்கைகளையும் அவருக்குச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். இன்றும் தேவன் தங்களுக்கு தரும் ஆசீர்வாதங்களை தங்கள் சுயநலத்துக்காக மட்டும் பயன்படுத்தி வரும் கிறிஸ்தவர்களை நாம் கண்கூடாகக் காண்கிறோம். தேவன் நம்மை நேசிக்கிறபடியால், நாமும் அவரில் அன்பு கூற

வேண்டுமென்பதை அவர்கள் எண்ணிப் பார்ப்பதேயில்லை. ''அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூறுகிறோம். (1 யோவான் 4:19).

### *உண்மையுள்ளவர்களா அல்லது வெறும் ஊழியம் செய்பவர்களா?*

ஆசாரியர்களிடம் உண்மையும் உத்தமமும் காணப்படவில்லை. இன்று, கிறிஸ்தவர்கள் அனைவருமே தேவனுடைய ஆசாரியர்கள் (1 பேதுரு 2:5). ஆதலால், இந்த பாடம். நமக்குத் தான் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மல்கியாவின் நாட்களில் ஆசாரியர்கள் சுறுசுறுப்பாக வேலை செய்தனர். ஆயினும் அது ஒரு பாரம்பரிய மதச் சடங்காகத்தான் இருந்தது. நம்முடைய நாட்களிலும் கூட பெரும்பாலும் ஆராதனை என்பது உள்ளான விசுவாசத்தின் வெளிப்பாடாக இல்லாமல் வெறும் வெளிப்படையான சடங்காச்சாரமாக மாறும் அபாயம் தெரிகிறதல்லவா? பல சமயங்களில் வெறும் சில்லறை விஷயங்களில் நாம் அதிக ஈடுபாட்டைக் காண்பிக்கிறோம். ஒரு சகோதரி ஒருமுறை சொன்னதைப் போல : ''சபை வேலைகளிலேயே என் நேரமெல்லாம் செலவழிந்து போகிறது, அதனால் ஆத்தும ஆதாயம் செய்ய நேரம் கிடைப்பதில்லை''.

### *விவாகரத்து*

மல்கியாவின் நாட்களில் விவாகரத்து என்பது பொதுவாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட காரியமாயிருந்தது. திருமண முறிவு, கவலைக்குரியதுதான் ஆனால், இன்று சபையில் அது ஒத்துக் கொள்ளப்பட்ட காரியமாகவே உள்ளது. பல முறை விவாகரத்து செய்தல், மீண்டும் மீண்டும் திருமணம் செய்து கொள்ளுதல் என்பன நம்மிடையே வாடிக்கையாகி விட்டன. ஆயினும், தேவன் இன்றும் தள்ளிவிடுதலை வெறுக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். (மல்கி 2 : 16)

இன்று போலவே மல்கியாவின் நாட்களிலும் மதிப்பீடுகள் நேர் தலைகீழாக மாறியிருந்தன. பொல்லாதவர்களை நல்லவர் களாகவும், நல்லவர்களை பொல்லாதவர்களாகவும் மதிப்பீடு செய்திருந்தனர் (மல்கி2:17). இன்று ஆவிக்குரிய காரியங் களை விட உலகப்பிரகாரமான காரியங்களில்தான் அதிக நாட்டம். சுகபோகங்களையும், உல்லாசங்களையும் நாடி அலையும் இன்றைய சமூகத்தில், ''முதலாவது தேவனுடைய இராஜ்யத்தை யும் அவருடைய நீதியையும் தேடுங்கள் '' என்ற இயேசுவின் வாக்கிற்கு ஏது மரியாதை?

## தேவனை வஞ்சித்தல்

மல்கியாவின் நாட்களில் வாழ்ந்த மக்களிடையே காணப்பட்ட அதி பயங்கரமான குற்றம் இதுவே என்பது பலரது கணிப்பு. அவர்கள் கர்த்தருக்கு ஒன்றுமே கொடுக்கவில்லை என்று சொல்லவில்லை. ஆனால் கொடுக்க வேண்டியதை கொடுக்கவில்லையே! ஒரு குறிப்பிட்ட அளவு கட்டாய காணிக்கை கொடுத்தாக வேண்டுமென்றும், நமக்கு இன்று ஒரு சட்டம் இல்லை, எனினும் நமது வரவுக்குத்தக்கதாக கொடுக்க வேண்டுமென்ற கட்டளை உண்டு. (1 கொரி 16: 2). இன்று நமது வருமானத்திற்கு ஏற்றபடி காணிக்கை அளிக்கிறோமா? அடிக்கடி நமது உலகப் பிரகாரமான தேவைகளை சமாளிக்க கர்த்தருடைய காரியங்களுக்கு அள்ளித்தர மறுக்கிறோம்.

தேவ தயவையும் அன்பையும் அன்றாடம் ருசி பார்க்கிற நாம் அவரது இரக்கத்தையும், ஆசீர்வாதங்களையும் புறக்கணிக் கலாமா?

இந்தப் பிரபலமற்ற தீர்க்கதரிசியின் அறிவுரைகளைக் கேட்டு நாம் சீரிய பயன் அடைவோமாக!

# கிறிஸ்துவின் அடிச்சுவட்டில்

*- ஹார்வி போர்டர்*

"..... கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியில் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால்,

நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்" (பிலிப்பியர் 2:1,2)

"கிறிஸ்துவுக்குள் ஆறுதல், தேறுதல், ஐக்கியம், உருக்கமான பட்சம், இரக்கங்கள் ஆகிய யாவும் செரிந்து கிடப்பதாக பவுல் பிலி 2:1,2ல் குறிப்பிடுகிறார்.

ரோமர் 6:3ன் படி நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும்போது அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறோமல்லவா? மேலும் 5ம் வசனத்தில் நாம் அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டவர்கள் என்றும் பவுல் கூறுகிறார். இது ஒரு திருமண உறவுக்கு இணையானது. தம்பதியர் இருவரும் தங்கள் வாழ்க்கையை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளுகின்றனர். அன்பையும், வலிமையையும் தமக்குள் பங்கு போட்டுக்கொள்ளுகின்றனர். அதுபோலவே, விவரிக்க முடியாத ஒரு உன்னத உறவை நாம் கிறிஸ்துவுடன் பெற்றிருக்கிறோம். எனவே நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம் என்ற எண்ணமே நமக்கு ஓர் மாபெரும் ஆறுதலையும், தேறுதலையும் அளிக்கிறது.

யார் என்னை உதாசீனப்படுத்தினாலும் கிறிஸ்து என்னை நேசிக்கிறார் என்பதுவே நமக்கு ஓர் தெம்பை அளிக்கிற தல்லவா?

மேலும், பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணுகிறார் என்றும், அவரால் நமக்குள் ஓர் இணைபிரியாத ஐக்கியம் உண்டென்றும் பவுல், ''ஆவியின் யாதொரு ஐக்கியம்'' என்ற வார்த்தைகளில் குறிப்பிடுகிறார். தேவனுக்குள்ளும், இயேசுவுக்குள்ளும், அதே ஆவியானவர் நமக்குள்ளும் வாசம் பண்ணி நம்மைத் தேற்றி ஆற்றி நடத்துவது மாபெரும் பாக்கியமல்லவா?

தேவனுடைய குடும்பமாகிய சபைக்குள் நிலவும் அரவணைப்பையும், பரிவையும் பவுல் பின்வருமாறு நினைப் பூட்டுகிறார்: ''உருக்கமான பட்சமும், இரக்கங்களும்'' (வச1) சிறியோர் பெரியோர் மற்றும் விலங்குகள் கூட பரிவை எதிர்பார்த்து ஏங்குகின்றனர். பரிவு என்பது அகில உலக பாஷையன்றோ?

இவ்வித உணர்வுகளுடன் ஒருவரையொருவர் நடத்த வேண்டுமென்று பிலிப்பிய விசுவாசிகளுக்கு பவுல் புத்திமதி கூறுகிறார். ''நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்பும் உள்ளவர் களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய், ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்'' (வச 2)

ஒவ்வொரு சபையிலும், இவ்வித பரிவர்த்தனை கட்டாயம் அவசியம். மேலும், ''ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத் தாழ்மை யினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர் களாக எண்ணக் கடவீர்கள்'' (வச 3).

இந்த மகத்தான போதனைகள் எக்காலத்தவர்க்கும், எந்நாட்டவர்க்கும் பொருந்தக் கூடியவை. எனவே இந்த வசனங்களுக்கு நாம் மிகுந்த சிரத்தையோடு செவிமடுப் போமாக!

# அடிமைத் தளைகளை புதைத்திடுவோம்

*- பாபி டாக்கரி*

முன்னுரை : மேற்கிந்திய தீவுகளில் ஒன்றாகிய ஜமெல்கா தீவில் இருந்த அடிமைகளுக்கு 1838ம் ஆண்டு விடுதலை கிடைத்தது. குறிப்பிட்ட அந்த சுதந்திர வேளை வருவதற்கு சற்று முன்னர் ஒரு மாலையில் அந்த அடிமைகள் ஒரு பெரிய சவப்பெட்டியை உண்டுபண்ணி, அதில் தங்களைக் கட்டிப் போட்டிருந்த சங்கிலிகள், கை விலங்குகள், கழுத்துப்பட்டை கள், சவுக்குகள், சூட்டுக்கோல்கள் மற்றும் தாங்கள் ஏற்கனவே அணிந்திருந்த அடிமை ஆடைகள் முதலியவற்றைப் போட்டு மூடினர். நள்ளிரவில் சுதந்திரம் அறிவிக்கப்பட்டபோது அந்த சவப்பெட்டியை ஓர் பெரிய சவக் குழியில் புதைத்துவிட்டு, ஆரவார சத்தத்துடன் தேவனை துதித்து மகிழ்ந்தார்கள்.

***ஞானஸ்நானம் பெறும்போது நடைபெறும் ஆவிக்குரிய சம்பவம் இதுவே.***

1 கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்படுகிறோம்; பழைய பாவ மனுஷன் சாகடிக்கப்படுகிறான்; பாவத்தி லிருந்து நாம் விடுதலை பெற்று, புதுவாழ்வு பெற்று எழும்புகிறோம்.

2. பாவச் சங்கிலிகள் யாவும் ஞானஸ்நான கல்லறைக்குள் புதைக்கப்படுகின்றன.

***விளக்கமாக :***

I. பாவத்திற்குரிய தண்டனையிலிருந்து விடுதலை

(1) பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23). எல்லோரும் குற்றவாளிகள் (ரோமர் 3:23).

(2) ஞானஸ்நானம் பெறுகிறவர்களுக்கு மட்டுமே இயேசுவின் மரணத்தால் உண்டான பாவமன்னிப்பு கிடைக்கிறது. (அப் 2:38)

(3) பழைய பாவங்களின் குற்றத்திலிருந்து விடுதலை பெறுகிறோம். பாவக்கணக்கு முற்றிலும் தீர்க்கப் பட்டு ஓர் புதிய ஆரம்பம் நம் வாழ்வில் உருவாகிறது. (அப் 22:16).

II. பாவத்தின் பிடியிலிருந்து விடுதலை

1. ''நாம் இனி பாவத்துக்கு ஊழியம் செய்யாதபடிக்கு'' (ரோமர் 6:6).

2. பாவத்தில் வாழ்கிறவர்கள் சாத்தானின் பிடியிலிருக் கிறார்கள்.

அ. சாவுக்கேதுவான அவர்கள் சரீரங்களில் பாவம் ஆளுகை செய்கிறது (6:12). அவர்களை பாவம் மேற்கொள்ளுகிறது . (6:14).

ஆ. நாம் பாவத்தில் வாழும்போது நாம் பிதாவிற்கு அடிமைகளாயிருக்கிறோம். (6:16).

3. ஞானஸ்நானம், சாத்தானின் ஆளுகைக்கு முடிவு கட்டுகிறது; ஞானஸ்நான கல்லறையில் அவனது துள்ளல் அடங்குகிறது. (6:7).

III. பாவப் பழக்கத்திலிருந்து விடுதலை

1. பாவத்துக்கு மரித்தவர்கள் பாவப் பழக்கங்களில் நிலைத்திருக்க முடியாது (6:1, 2).

அ. நீதிக்கு பணிவிடை செய்யவே நாம் விடுதலை பெற்றோம். (6:17, 18)

ஆ. பரிசுத்த ஆவியானவரை ஈவாகப் பெற்றோம். (அப். 2:38).

2. ஞானஸ்நானம் பெற்றவர்களின் வாழ்வில் பிழைகளே இருக்காது என்று பவுல் சொல்லவில்லை.

அ. மாறாக, நாம் பாவ வாழ்க்கை வாழக் கூடியவர்களாக இருக்க மாட்டோம்; பாவப்பழக்கங்கள் உருவழிந்து போய்விட்டன; பாவ ஆசைகள் தொலைந்து போயின.

ஆ. தேவ தயவும் அவரது அன்பும் நம்மை பாவம் செய்யவிடாமல், நீதியை செய்யவேத் தூண்டும்.

***முடிவுரை :***

"வல்லமையுண்டு உண்டு, உண்டு அற்புத வல்லமை

இயேசுவின் இரத்தத்தால் வல்லமை உண்டு,

உண்டு அற்புத வல்லமை ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்".

# பகைவரிடம் நடந்து கொள்வது எப்படி

*- பி.ஆர்.எஸ்*

எல்லோருக்கும் பகைவர்கள் உண்டு. இயேசுகிறிஸ்து பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்தும் கூட, அவருக்கும் பகைவர்கள் இருந்தனர். அதுவும் மதச் சம்பந்தப்பட்ட பகைவர்கள். அவர் நீதிபரர் என்பதாலே அவரைப் பகைத்தார்கள். ஏனெனில், தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட, யாவரும் நீதிமான்களாக இருக்க வேண்டும் என்று அவர் போதித்தார். அதன் விளைவாக அவர் சிலுவையில் அறையப்பட்டார். மதச் சார்பற்ற ரோம அரசு அவரை சிலுவையிலறைந்தது. ஆனால் அவருடைய மதச் சம்பந்தப்பட்ட பகைவர்கள் தான் உண்மையிலேயே அவருடைய மரணத்திற்குக் காரணமாக இருந்தவர்கள்.

நமக்கும் பகைவர்கள் உண்டு. சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து கர்த்தருடைய குடும்பத்திலே அங்கமாக்கப் பட்டவர்களாகிய நம்மைச் சுற்றிலும் கூட எதிர்ப்பாளர்கள் உள்ளனர். பரலோகம் செல்லும் நோக்கத்திலே கிறிஸ்தவ ஜீவியத்தை நடத்த முயற்சித்துக் கொண்டு இருக்கிறோம். இருப்பினும் நம் மனதை புண்படுத்துகிறவர்களும், குற்றம் கண்டுபிடிக்கிறவர்களும், நமக்கு எதிராக செயல்படுபவர்களும் இருக்கவே இருக்கிறார்கள்.

இந்த உலகம் எல்லாவிதசோதனைகளையும், நமக்குத் தந்து, கர்த்தரிடத்திலிருந்து நம்மை பிரிக்க முயற்சிக்கிறது.

அவிசுவாசம், அறிவியல் மூலம் மெய்மையடையும் முறை, (HUMANISM), உலகப் பற்று முதலியவை நம்மை அழிக்க உபயோகிக்கப்படும் ஆயுதங்களாகும்.

பொய்யான மதத் தலைவர்கள் மற்றும் பொய் மதங்களின் மீது தங்கள் வாஞ்சையை தவறாக வைத்து இருப்பவர்கள், கிறிஸ்துவையும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதினாலே நம்மையும் எதிர்க்கின்றனர். இன்னும் நம் எதிராளியான சாத்தான், அவனுடைய சீடர்களுடன் நம் ஆத்துமாக்களை நரகத்திலே தள்ள முயற்சிக்கிறான், தெளிந்த புத்தியுள்ளவர் களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான். (1பேதுரு. 5:8) என்று பேதுரு எச்சரிக்கிறார்.

## *சத்துருக்களை சிநேகியுங்கள்*

''உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்... உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்'' என்று கிறிஸ்து சொன்னார். மேலும் சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். பரலோகராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி பற்பல தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாக இருப்பீர்கள். சந்தோஷப்பட்டுக் களி கூறுங்கள். பரலோகத்தில் உங்களுடைய பலன் மிகுதியாயிருக்கும். உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே. (மத்5:9-12)

மேலும், ''கண்ணுக்குக் கண், பல் லுக்குப் பல்'' என்று உரைக்கப்பட்டதை கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். ''ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு'' (மத்5:38- 39) என்றார்.

பின்னும் அவர் கூறுவதைக் கேளுங்கள். ''உனக் கடுத்தவனைச் சினேகித்து, உன் சத்துருவை பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதை கேள்விப் பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் சத்ருக்களைச் சிநேகியுங்கள். உங்களை சபிக்கிறவர்களை நீங்கள் ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.

''இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவிற்கு புத்திரராயிருப்பீர்கள். அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும், அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிற்ாா''. (மத்தேயு 5:43-45)

ஆனால் எவ்வாறு சத்துருக்களை, நம்மை வெறுப்பவர்களை, நிந்திக்கிற வர்களை துன்பப்படுத்துகிறவர்களையும் சினேகிக்க முடியும்? மனித சுபாவத்தின்படி, இது முடியாத காரியமாக இருக்கலாம். ஆனால் கிறிஸ்தவர்களோ, 2 பேதுரு 1:4-ல் கூறியபடி, தேவனுடைய திவ்ய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு வளர வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

அகாபே - அன்பு

''இச்சையினால் உலகத்தில் உண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்ய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அருளப்பட்டிருக்கிறது''. ஆகையால் மேற்கூறிய கேள்விக்கு விடை ''அன்பில்'' இருக்கிறது. இந்த அன்பு மிக உயர்ந்த ரக அன்பு. கிரேக்க மொழியில் அகாபே என்று பெயர். இந்த அன்பை நம் பகைவர் மீது செலுத்த வேண்டும். இது எத்தகைய அன்பு? உணர்ச்சிப்பூர்வமான அன்பு அல்ல. மாறாக, மற்றவன் நமக்கு தீமை செய்தாலும் அப்படிப்பட்டவனுக்கு சிறந்தது எது என்று தீர்மானித்து அதை செயல்படுத்துகின்ற அன்பாகும்.

அத்தகைய தெய்வீக அன்பு தீமைக்கு நன்மை செய்ய வைக்கும். தீமை செய்தவனைத் துன்பப்படுத்தவோ, கெட்டுக் போகவோ செய்யாது. அதற்குப் பதிலாக அப்படிப்பட்டவன் இரட்சிக்கப்பட விரும்பும், நம்பிக்கையோடு அவன் மாற்றப்பட உதவி செய்யும்.

நாம் தேவனுக்கு சத்துருக்களாய் இருக்கையில், நாம் தேவனுக்கு அந்நியராக இருக்கையில், நம் பாவத்தினிமித்தம் நமக்காக தம் ஜீவனை தியாகம் செய்த, இப்படிப்பட்ட அன்பைத் தான் கர்த்தர் நம்மீது வைத்திருந்தார். அப்படிப்பட்ட அன்பிற்கு, இரக்கத்திற்கு நாம் பாத்திரர்களாக இல்லாதிருந்தும், நம்மேல் அன்பு கூர்ந்தார். அவரது குடும்பமாகிய சபையில் அங்கமாயிருப் பவர்களாகிய நாமும், கெட்டுப்போன பாவிகள் மீதும் மற்றும் பகைவர்கள் மீதும் இதே விதமான அன்பையே காட்ட வேண்டும்.

அப்படியென்றால் நம்மையும் மற்றவர்களையும் கெடுக்க முயற்சிக்கும் துன்மார்க்கரைப் பற்றி என்ன சொல்லுவோம்? அவர்களுடைய அக்கிரமங்கள் தண்டிக்கப்படாமல் விட்டுவிட வேண்டியவைகளா? துன்பப்படுத்தப்பட்ட நாம் பழி வாங்கு வதற்கு தடை செய்யப் பட்டால் காரியங்களை எவ்வாறு சரி செய்வது?

தவறு செய்பவர்களுக்கு போதித்து அவர்களை மாற்றுவது தான் நம் வேலை!

தண்டனை வழங்குவதற்கான கருவிகள் தேவனிடத்தில் தான் உண்டு. நாட்டில் இருக்கும் அரசாங்கத்திற்கு அப்படிப் பட்டவர்களை நியாயம் விசாரித்து, தீமை செய்கிறவர்களை தண்டிக்கும் அதிகாரத்தை அளிக்கிறார். மனந்திரும்பாதவர் களை தேவன்தாமே நியாயத் தீர்ப்பு நாளில் தண்டிப்பார்.

கடந்த 2001-ம் ஆண்டு செப்.11-ம் தேதி, அமெரிக்கா வில் உள்ள நியூயார்க், வாஷிங்டன் நகரங்கள் மீது தீவிர வாதிகள் நடத்திய தாக்குதலால் அநேக ஆயிரம் பேர் பலியானார்கள். உலக வர்த்தக மைய கட்டிடமும், பென்டகன் இராணுவ மையக் கட்டிடத்தின் ஒரு பகுதியும் நாசமாயின. சுமார் 80 நாடுகளைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் செத்தார்கள். அதைத் தொடர்ந்து அநேக விதங்களில் உலகமுழுவதும் உள்ள மக்கள் அந்த அழிவினிமித்தம் கஷ்டப்பட்டார்கள்.

அன்புக்குப் பாத்திரமானவர்களை பறிகொடுத்த தனிப் பட்ட நபர்கள், இப்படிப்பட்ட பயங்கரவாதிகளை தண்டித்தே யாக வேண்டும். ஆனால் அது தனிப்பட்ட நபர்களின் வேலை யல்ல. இது கிறிஸ்தவர்களுடைய பொறுப்புமல்ல என்பது நிச்சயம். "கண்ணுக்குக் கண்" என்ற சட்டம் கிறிஸ்தவர்களுக்கு

கொடுக்கப்பட வில்லை. ஆனால் ''அது வேதாகமத்தில் உள்ளதே, தேவன் என்ன மாறிவிட்டாரா?'' என்று நீங்கள் ஆட்சேபிக்கலாம். அப்படியல்லவே அல்ல.

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்களுக்கு சரீரப்பிரகார மான சமூக சட்டங்களையும் (Civil Laws), ஆவிக்குரிய பிரமாணங்களையும் (Spiritual Laws) தேவன் கொடுத்திருந்தார். ஏனெனில், இஸ்ரவேல் அந்நாளில், ஒரு மதச் சார்பற்ற (Secular Nation) மற்றும் ஆவிக்குரிய நாடாக (Spiritual Nation) இருந்தது. சமூக வழி நடத்துனர்கள் (Civil Leaders) தீமை செய்கிறவர் களை தண்டிக்கும்படி போதிக்கப்பட்டிருந்தனர். அவர் களுடைய ஆவிக்குரிய வழி நடத்துனர், அவர்களை ஆவிக் குரிய காரியங்களில் வழி நடத்தினர். ஆனால் புதிய ஏற் பாட்டு பிரமாணத்தின் கீழ் ஜீவிக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம் ஆவிக்குரிய சரீரமாகிய சபையில் ஆவிக்குரிய பிரமாணத்தின் கீழ் (Spiritual Laws) ஜீவிக்கிறோம். சமூக ரீதியான மதச்சார்பற்ற சட்ட திட்டங்களை நாட்டின் அரசு அமலாக்க வேண்டும் என்று போதிக்கப்பட்டிருக்கிறோம்.

தனிப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்பட்ட பவுல் எழுதுகிறதாவது ''ஒருவனுக்கும் தீமைக்கு, தீமை செய்யாதிருங்கள். எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதான மாயிருங்கள்''.

''பிரியமானவர்களே, பழி வாங்குதல் எனக்குரியது. நானே பதிற் செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால் நீங்கள் பழி வாங்காமல், கோபாக் கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியா

யிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு. அவன் தாகமாக இருந்தால் அவனுக்கு பானங்கொடு. நீ இப்படி செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின் மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப் படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு'' (ரோமர் 12:19-21)

இதற்கு மாறாக, தேவன் சமூக அரசுக்கு இப்படிச் சொல்லுகிறார். ''தீமை செய்கிறவன்மேல் கோபாக்கினை வரப் பண்ணும்படி அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக் காரனாயிருக்கிறானே'' ஆதலால் உலகில் உள்ள எல்லா நாட்டு அரசாங்கமும், சட்ட விரோதமான காரியங்களை செய்கிற வர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும், ஆதரவற்ற ஏழைகளுக்கு கெடுதி செய்வோரை தண்டிக்கவும் நியமிக்கப் பட்ட தேவனுடைய ஆட்கள், புதிய ஏற்பாட்டில் கூறியுள்ளவாறு நடக்க கட்டளையிடப்பட்டிருக்கிறோம். ''எந்த மனுஷனும் மேலான அதிகாரம் உள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக் கடவன். ஏனென்றால் தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரம் தேவனாலே நியமிக்கப்பட்டிருக் கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான். அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்கு தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள்''.

''மேலும் அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க் கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள். ஆகையால் நீ அதிகாரத்திற்கு பயப்படாதிருக்க வேண்டுமானால் நன்மை செய். அதனால் உனக்கு புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு அவன் தேவ ஊழியக்காரனாயிருக் கிறான். நீ தீமை செய்தால் பயந்திரு. பட்டயத்தை அவன்

விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை. தீமை செய்கிறவன் மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி அவன் நீதியை செலுத்துகிற தேவ ஊழியக் காரனாய் இருக்கிறானே''. (ரோமர் 13:1-4)

தேவன்தாமே அந்தக் கடைசி நாளில் நியாயத்தீர்ப்பு செய்யும் பொழுது தீமை செய்கிறவர்களும், கீழ்ப்படியாத வர்களும் தாங்கள் செய்த தீமைக்குத்தக்கவாறு ஆக்கினை யடைவார்கள்.

''தேவனுடைய வார்த்தையே முடிவானதாக இருக்கும். மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப் பட்டன. ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தக மும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புஸ்தகங் களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியை களுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். ஜீவ புஸ்தகத் திலே எழுதப்பட்டவனாக காணப்படாதவ னெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்''. (வெளி 20:12,15)

★★★★★

# வாலிபனே தேவனிடத்தில் திரும்பு

ஒரு வாலிபன் தன் வாழ்க்கையை சந்திக்கும் பொழுது, அவன் எத்தனையோ விதமாக, வருங்காலத்தைப்பற்றி என்ன வெல்லாமோ கனவு காண்கிறான். ஆனால் வழியில் எத்த னையோ எதிர்ப்புகள், தடைகள், ஏமாற்றங்கள், போராட் டங்கள் ஏற்படுகிறது. அதை அவன் அறியான்.

வாலிபத்தைப் போல ஒரு சுவாரஸ் யமான, மகிழ்ச்சியான நாட்களும் இல்லை. அதே சமயத்தில் அதைப்போல ஏமாற்றத் திற்குள்ளாக்கும் பருவமும் வேறில்லை. ''இளங்கன்று பய மறியாது'' என்ற முதுமொழிக்கிணங்க பிரதிபலனை குறித்து கவலைப்படாமல், துணிச்சலோடு எதையும் முயன்று பார்க்கும் சுபாவம், வாலிபப் பிராயத்திலுள்ள ஆண், பெண் இருபாலருக்கும் உண்டு.

வாலிபனின் ஜீவியம் ஒரு சவால் விடக்கூடிய ஜீவியம் தான். அவனுடைய ஜீவியத்தில் வெற்றியும் தோல்வியும் எதைப் பொறுத்திருக்கிறது? அவர்களுடைய வாழ்க்கையி னுடைய வெற்றியின் ரகசியம் தான் என்ன? அவர்கள் வெற்றியின் ரகசியம் 2 அம்சங்ளைப் பொருத்ததாக இருக்கும்.

முதலாவது, எச்சரிக்கையாக இருக்கும் மனோபாவம். அதாவது, எதையும் ஏனோதானோவென்று எடுத்துக் கொள்ளாமல், விநயமாக ஞானத்தோடு செயல்படுதல் ஆகும். வாழ்க்கையில் எல்லாம் தானாகவே அமைந்து விடும் என்ற

எண்ணத்தைத் தவிர்த்து, குறிக்கோளுடன் கூடிய முயற்சி களையும் இது குறிக்கும்.

இவை எல்லாம் வாலிபன் ஞானத்தோடு எதைத் தேர்ந்தெடுக்கிறானோ அதைப் பொறுத்தது.

முன்பின் தெரியாமல் உணர்ச்சிவசப்பட்டு கவர்ச்சியை தேர்ந்தெடுத்து அதன் பிரதிபலனாக பலவித இன்னல்களை அடைந்து, மனமொடிந்து, மாளாத்துக்கத்தில் இருக்கும் வாலிப சகோதர, சகோதரிகளை நாம் அன்றாடம் சந்திக்கிறோம்.

கொஞ்சம் புத்திசாலித்தனமான காரியங்களைத் தேர்ந் தெடுத்திருந்தால், இந்த நிலைக்கு ஆளாகி இருக்க மாட்டேனே என்று புலம்புவோர் ஏராளம். வேதமும் இதைத் தான் கூறுகிறது: ''தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசா சானவன் கெர்ச்சிகிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றித்திரிகிறான்'' (1 பேதுரு 5:8)

இப்படிப்பட்ட அநேக எச்சரிக்கைகள் வேதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றை மதித்து செயல்பட்டால் எத்தனையோ விளைவுகளிலிருந்து காப்பாற்றப்படலாம். அநேகர் இந்த எச்சரிக்கைகளை மீறி, தங்கள் இஷ்டம் போல் ஜீவித்து, அதன் பயனாக, தங்கள் சரீரத்தையும், அதற்கு மேலாக ஜீவனையும் கெடுத்துக் கொள்கிறார்கள்.

இரண்டாவது, வெற்றியின் ரகசியம் தெய்வீக வழிகாட்டி யில் இருக்கிறது. தெய்வீக வழிகாட்டி என்றால் தேவனுடைய வசனத்தால் வழி நடத்தப்படுதல். நாம் எதைச் செய்தாலும், தேவனுடைய சித்தத்திற்கு உட்பட்டு செயல்பட வேண்டும்.

''வேதவசனங்கள் யாவும் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளு தலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'' (2தீமோ 3:16,17).

வேதவசனம் கலங்கரை விளக்கம் போல இருந்து, அபாயங்களை சுட்டிக்காட்டி, பாதுகாப்பான வழியில் நம்மை நடத்தும், இல்லாவிட்டால், எது சரி? எது தவறு? எது நன்மை? எது தீமை? என்று நாம் எப்படி வரையறுக்க முடியும்?

மேலும், வேதவசனம் தீய செல்வாக்கினின்று நம்மை காப்பாற்றுகிறது. நாம் வாழும் இந்த உலகத்தில் கேட்டில் அமிழ்த்தக்கூடிய எத்தனையோ வித கவர்ச்சிகள் உண்டு. எந்தப் பக்கம் திரும்பினாலும் நம்மை தீய வழியில் உந்தித்தள்ளும் கெட்ட செல்வாக்கு உண்டு. தீய நண்பர்கள், சினிமா, கேளிக்கை போன்ற எத்தனையோ காரியங்கள் உலகில் உண்டு. தாவீது கூறுகிறார். ''நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்'' (சங்.119:11)

வாலிபர்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தை வெற்றி யுடன் தொடர, அவர்களுக்கு ஒரு சரியான அளவீடும், வழி காட்டுதலும் தேவை. அவர்கள் வாழ்க்கைப் படகு அறியாத கடலிலே செல்ல வேண்டியிருக்கும். சரியான பாதையில் நடத்த ஒரு திசைகாட்டும் கருவி தேவை. தேவ வசனத்தைப் படித்து அதன்படி செல்லும்பொழுது, சரியான திசையில் செல்வார்கள். அனுபவம் என்பது ஒரு பள்ளிக்கூடம். வாழ்க்கை வேதாக

மத்தின் பிரகாரம் அமைக்கப்படும்போதுதான் அதன் பாடங்களை நன்கு கற்றுக் கொள்ள முடியும்.

வாலிபர்கள் தங்களுக்கு தாங்களே வழிகாட்டியாக இருக்க முடியாது.

தேவ வசனத்திற்கு முழுவதும் தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

தேவனுடைய வசனம் வெறும் சட்ட புத்தகமல்ல. நமக்கு வேண்டிய ஆலோசனைகளை கூறி, அவ்வப்போது எச்சரித்து, ஆபத்து காலத்தில் உதவி செய்யும் நல்ல நண்பன், ஆசான்.

ஆகையினால் பிரியமுள்ள வாலிப சகோதரனே, சகோதரியே, உன் இருதயத்தை தேவனுடைய வார்த்தையால் நிரப்பு. தேவனுக்கு விரோதமாய் பாவஞ் செய்யாமலிருப்பாய். (சங்.119 :11) அப்பொழுது நீ உன் நடைகளில் பிசகுவதில்லை (சங்.37:31), ''அழிவுள்ள வித்தினால் அல்ல. என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. மாம்சமெல்லாம் புல்லைப் போலவும் மனுஷருடைய மகிமை எல்லாம் புல்லின் பூவைப் போலவு மிருக்கிறது. புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். உங்களுக்கு சுவிசேஷமாய் அறிவிக்கப் பட்டு வருகிற வசனம் இதுவே''. (1பேதுரு 1:23-25) தேவனுடைய வசனம் நம் விசுவாசத்திற்கு ஆதாரம். ''விசுவாசம் கேள்வியினால் வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்''. என்று பவுல் கூறுகிறார். (ரோமர் 10:;17)

நாம் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பிக்கப்படுகிறோம். (யாக் 1:18) தேவனுடைய வசனத்தின் துணை கொண்டு தான் நாம் சரியான ஆராதனை செய்ய முடியும். (யோவான் :4:24;17:17)

வாலிப சகோதரனே, சகோதரியே உன் இருதயத்தை தேவனுடைய வார்த்தையினால் நிரப்பு. தேவனிடத்தில் திரும்பு.

★★★★★

## சபையைப்பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்

1. *புதிய ஏற்பாட்டில் நீங்கள் காணும் ஒரே சபை, "கிறிஸ்துவின் சபை" (ரோமர் 16:16)*
2. *சபைக்கு என்று ஒரு பெயர் சூட்ட வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், சபை கிறிஸ்துவுக்கு சொந்தமானது. அவரே தம் ரத்தத்தினால் விலைக்கு வாங்கினார். (அப். 20:28). ஆகவே கிறிஸ்துவின் சபை என்று புதிய ஏற்பாட்டில் காண்கிறோம்.*
3. *கிறிஸ்துவின் சபை என்றால் கிறிஸ்துவுக்கு சொந்தமான சபை என்று பொருள். மேலும், கிறிஸ்துவே அதற்கு தலையாக இருக்கிறார். (எபேசியர் 1:21-23) (கொலோசெயர் 1:18) (எபே. 5:23).*
4. *கிறிஸ்துவின் சபைக்கு ஒரு மனிதன் தலையாக இருக்க முடியாது. சபை எந்த மனிதனுடைய நாமத்தையும் தரித்துக்கொள்ள இயலாது. எந்த மனிதனும் கிறிஸ்துவின் சபையை ஸ்தாபித்திருக்க முடியாது.*
5. *சிலர் கிறிஸ்துவின் பெயரை மட்டும் தங்கள் சபைக்கு சூட்டிக் கொள்ளுகின்றனர். அதனால் மாத்திரம் அது கிறிஸ்துவின் சபையாக மாறிவிடாது.*
6. *கிறிஸ்து சொன்னார் "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன" (லூக்கா. 6:46)*

# தேவ வசனம்

''கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது மாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை தூய்மையும் கண்களை தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருக்குப்பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப் படத்தக்கதும், தேனிலும், தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் மதுரமுள்ளது மாய் இருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன். அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு''. (சங்கீதம் 19:7-11).

இந்தப்பகுதியிலிருந்து கர்த்தருடைய வேதம் எப்படிப்பட்ட குணாதிசயங்களையுடையது என்பதையும் அதன் வேலைகளையும் ஆராய்வோம்.

கர்த்தருடைய வேதத்தின் தன்மைகளையும், வேலைகளையும் ஆராய்வதற்கு முன்னர் சில கேள்விகளைக் கேட்டு அதற்கான பதிலையும் நோக்குவோம். கர்த்தருடைய வேதம் குறைவற்றதானால், அது ஏன் எடுத்துப் போடப்பட்டு, அதற்கு பதில் வேறொரு வேதம் கொடுக்கப்பட்டது? எபிரெயருக்கு எழுதிய ஆசிரியர் ''அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால், 2-ம் உடன்படிக்கைக்கு இடம் தேட வேண்டுவதில்லையே'' என்று ஏன் கூறினார்? (எபி. 8:7).

கர்த்தருடைய வேதம் ஒரு ஆத்துமாவை உயிர்ப்பிக்கக் கூடுமேயானால், நம் ரட்சிப்பிற்கு மற்ற காரியங்கள் அவசிய மாயிருப்பதற்கு காரணம் என்ன? முதலாவது, 'குறைவற்றது' என்ற எபிரெய வார்த்தைக்கு இணையான கிரேக்க வார்த்தை 'குற்றமற்றது' 'கறையில்லாதது' என்று மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. எபி. 8:7-ல் கர்த்தருடைய வேதம் பிழையானது என்று குறிக்கக்கூடிய சொல் அல்ல இது.

கர்த்தருடைய வேதம் குற்றமற்றது ஆனால் ஏதோ ஒன்று குறைவுபடுகிறது. என்ன குறைவுபடுகிறது என்று பார்க்கும் பொழுது, எபி.10:4ல் கூறியுள்ளபடி, அது பாவங்களை நிவிர்த்தியாக்க முடியாததாய் இருந்தது. உதாரணமாக ஒரு பொருள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு குற்றமற்றதாக இருக்கலாம். ஆனால் வேறொரு நோக்கத்திற்கு குறைவு பட்டதாக இருக்கலாம்.

சிறிய வெட்டுக் கத்தியை எடுத்துக் கொள்வோம். இந்த கத்தி, எந்த நோக்கத்திற்கு செய்யப்பட்டதோ, அதாவது வெண்ணை வெட்ட, அந்த நோக்கத்தில் குற்றமற்றதாக இருக்கும். ஆனால் வேறொரு நோக்கத்திற்கு உபயோகிக்கும் போது, அதாவது மரத்தை வெட்ட உபயோகிக்கும் போது, அது குறைவுள்ளதாக காணப்படும்.

பழைய மோசேயின் நியாயப் பிரமாணம் அல்லது உடன்படிக்கை கிறஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தி யாய் இருக்கும் விஷயத்தில் குறைவற்றதாக இருந்தது. (கலா. 3:24) பாவத்தை அறிகிற அறிவில் குறைவற்றதாக இருந்தது (ரோமர், 3:20) இன்னும் அனேக காரியங்களில் குறை வற்றதாக இருந்தது. ஆனால் சில காரியங்களில் பிழையான தாக, குறைவுள்ளதாக இருந்தது. அதாவது பாவங்களை நிவர்த் தியாக்க முடியாததாக இருந்தது. (ரோமர், 3:20 கலா. 2 : 16)

சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம் என்று யாக்கோபு குறிப்பிடும்போது, வேறொரு வார்த்தையை உபயோகிக்கிறார். அதன் பொருள் முழுமையான நிறைவான என்ற அர்த்தத்தில் கூறப்பட்டது. இந்த வேதம் அல்லது பிரமாணம் எதை செய்ய எதிர்பார்க்கப்பட்டதோ அதை செயலாற்றியதோடு, செயல்பட வேண்டிய யாவற்றையும் செய்து முடித்து விட்டது. இனியும் வேறொரு பிரமாணம் நமக்குத் தேவையில்லை.

இனி கர்த்தருடைய வேதத்தின் அல்லது பிரமாணத்தின் மேன்மையையும், வேலைகளையும் ஆராய்வோம்.

மோசேயின் நியாயப் பிரமாணத்தைப் பற்றி சொல்லப்படுகிற எல்லா நல்ல அம்சங்களும், இன்று நாம் ஜீவிக்கிற கிறிஸ்துவின் பிரமாணத்திற்கும் கூறலாம் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ரோமர்6:14-ஐ யாரேனும் வாசித்துவிட்டு, நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறோம் என்று கூறி இருக்கிறபடியால், நியாயப்பிரமாணத்திற்கு எந்த அம்சத்திலும் கீழ்ப்பட்டிருக்க வில்லை என்று எண்ணிவிடக் கூடாது.

அதைக்கூறிய பவுல் தாமே 1 கொரி. 9:21-ல் ''நான் கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளானவனாயிருக்கிறேன்'' என்றார். பூரணப்பிரமாணம் என்பது கிறிஸ்துவின் பிரமாணத்திற்குட்பட்டதாக இருக்கிறது.

இன்று ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட பகுதியில் குறிப்பிட்ட கர்த்தருடைய வேதம் பழைய ஏற்பாட்டின் காலத்தில் இருந்தது. இது எந்த நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டதோ, அதை செவ் வனே நிறைவேற்றியது. ''நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும், பரிசுத்தமாயும்,

நீதியாயும், நன்மையாயும் இருக்கிறது'' என்கிறார் பவுல் (ரோமர்.7:12)

ரோமர். 8:3-ல் மேலும் பவுல் குறிப்பிடுவது, அந்த மோசேயின் நியாயப் பிரமாணம், பழைய உடன்படிக்கை, அதைப் பொருத்தமட்டில் நன்மையாயும், வல்லமையுள்ள தாயும் இருந்தது. ஏனெனில் தேவனால் கொடுக்கப்பட்டது. அதில் ஒன்றும் பிசகில்லை. பலவீனமாயிருந்த நியாயப் பிரமாணம் என்றுதான் குறிப்பிடுகிறார். அந்த நியாயப் பிரமாணம் குறைவற்றது, குறைவற்ற வேதத்தின், நியாயப் பிரமாணத்தின் வேலை என்ன?

அநேக காரியங்களைப் பார்த்தோம். அதில் இன்னொன்று, ஆத்துமாவை உயிர்ப்பித்தல். உயிர்ப்பித்தல் என்ற எபிரெய வார்த்தைக்கு இணையான கிரேக்க வார்த்தை புதுப்பித்தல் என்று பொருளைக் கொடுக்கிறது. ஒரு ஆத்துமாவை தேவனி டத்தில் திருப்பக் கூடிய தாக அது இருந்த போதிலும், நியாயப் பிரமாணத்தின் எந்தப் பகுதியும் பாவங்களை நிவர்த்தியாக்க முடியாததாயுமிருந்தது.

அடுத்து, கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி என் பது, நியாயப்பிரமாணத்திலிருந்து முற்றிலும் வித்தியாசப்பட்ட ஒன்றல்ல, தேவன் கூறிய யாவும் இதில் அடங்கி இருக் கிறது. கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளும் (யாத். 31:18) அதாவது 10 கற்பனைகளும் அடங்கி இருக் கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமுமாயிருக்கிறது என்றால் நம்பத் தகுந்தவை என்று பொருள். தேவன் வாக்குத்தத்தம் மாறாதவர். இந்த சாட்சிகள் பேதையை ஞானியாக்குகிறது என்றால் உலகம் தரக்கூடிய எல்லா அறிவு ஞானம் எவையும்

இதற்கு ஈடாகாது. இருப்பினும், எத்தனையோ பேருக்கு இந்த சாட்சிகளை, தேவனுடைய புத்தகத்தை படிக்க வாஞ்சை இருப்பதில்லை. உலக புத்தகங்களை படிக்கும் அளவிற்கு, தேவனுடைய புத்தகத்தை படிப்பதற்கு அக்கரை காட்டுவ தில்லை.

கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தை சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது. நியாயங்கள் என்றால் தேவனால் நியமிக்கப்பட்டவைகள். தேவனுடைய கட்டளை களுக்கு வித்தியாசப்பட்டவை தேவன் பகலைத் தொடர்ந்து இரவை நியமித்தார். ஆனால் அதை கட்டளையாக எண்ணு வது கிடையாது. உதாரணமாக ஞானஸ்நானம் ஒரு செம்மை யான காரியம்; ஏனெனில் இது ஒரு கட்டளையாக கொடுக்கப் பட்டது.

மனுஷர் நமக்கு எதைச் செய்ய விரும்புகிறோமோ அதை அவர்களுக்கு நாம் செய்வது ஒரு கொள்கை. ஏனெனில் அது ஒரு சரியான காரியம். நாம் எது சரி என்று அறிந்திருகிறோமோ அதை செய்யும் பொழுது, நம் இருதயம் சந்தோஷப்படும். கர்த்தருடைய நியாயங்கள் செம்மையானது. அதாவது நேர்மறையானது. தேவன் ஒரு காரியத்தை செய் என்று கூறி இருக்க அதை செய்வது செம்மையான காரியம். நாம் அதை நன்மையானதாக காண்கிறோம் என்பதால் அல்ல. ஏற்கனவே தேவன் தம் நேர் மறையான கட்டளையால் நம் கண்களை திறந்திருக்கின்ற காரணத்தால் தேவன் நமக்கு இதை செய்யும்படி கூறி இருப்பதை அறிந்தால், அதற்கு கீழ்ப் படிவதே ஞானமுள்ள காரியம்.

# யதார்த்தமாக இருந்தால் மட்டும் போதாது

ஒருவன் தேவனை எப்படி தொழுது கொண்டாலும், நேர்மையோடு ஆராதித்தால் போதும். தேவன் அதை ஏற்றுக்கொள்வார் என்று, தேவ பக்தியுள்ளவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் அநேகர் இப்படிச் சொல்லுவார்கள்.

நாம் எவ்வளவு நேர்மையுள்ளவர் களாக ஆராதனை செய்தாலும், யோவான் 4:24-ல் கூறியுள்ளபடி ஆவியோடும் உண்மையோடும் தேவனை ஆராதிக்கவில்லையெனில், அப்படிப்பட்ட ஆராதனையை தேவன் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத்தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர் களாயிருக்கும்படி பிதா விரும்புகிறார்.

தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத்தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்று கிறிஸ்து சமாரியா ஸ்திரீயினி டத்தில் பேசும் பொழுது கூறி இருக்கிறார்.

மேலும், நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளு கிறீர்கள் என்றார். கிறிஸ்துவின் அப்போஸ்தலனான பவுலும், அத்தேனே பட்டணத்து மக்கள் தாங்கள் அறியப்படாத

தேவனுக்கு என்று ஒரு பலிபீடத்தை கட்டி, ஆராதனை செய்து வந்ததை கவனித்து, நீங்கள் அறியாமல் ஆராதிக்கிறீர்கள் என்றார்.

இன்றும்கூட அநேக மக்கள் அறியாமல் ஆராதனை செய்கிறவர்களாக இருக்கிறார்கள். வேதாகமத்தில்கூட, 25 பேர் அறியாமல் கீழ்த்திசையை நோக்கி சூரியனை நமஸ்கரித்து வந்தி ருக்கிறார்கள்.

இன்றும் புதிய ஏற்பாட்டிலும், அறியாமல் தியானாள் தேவதையை ஆசியா முழுமையும் சேவித்து வந்திருக்கிறார்கள். உண்மையான தேவனை, அவர் காட்டிய வழியில் தொழுது கொள்வதே சரியான ஆராதனை. அதைவிட்டு மனிதர்களுக்கு பயந்து, தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படியாமல் போவது ஒரு ஞான முள்ள காரியம் ஆகாது.

பேதுருவும், மனிதர்களுக்கு கீழ்ப்படிவதைப் பார்க்கிலும், தேவனுக்கு கீழ்ப்படிவதே உத்தமம் என்றான்.

அநேகர் இன்னமும், நேர்மை யோடு எந்த காரியத்தை செய்தாலும், தேவன் ஏற்றுக்கொள்வார் என்று நினைக்கின்றனர். ஒருவன் நேர்மையோடு, தேவனை அல்லாத அவருடைய சிருஷ்டிகளை ஆராதிப்பானேயானால், தேவன் எப்படி அந்த ஆராதனையை ஏற்றுக்கொள்வார்?

ஆபேல் விசுவாசத்தினால், காயீனுடைய பலியிலும் மேன்மை யான பலியை செலுத்தினான். அதினாலே தேவன் ஆபேலின் பலியை அங்கீகரித்தார்.

விசுவாசம் கேள்வியினால் வரும் தேவனுடைய வசனத்தை கேட்பதினால் வரும். அதாவது, ஆபேல், தேவன் கட்டளையிட்டபடியெல்லாம் பலியை செலுத்தினதினாலே,

அந்த விசுவாசத்தினால் செலுத்திய பலியை, தேவன் ஏற்றுக்கொண்டார்.

அதாவது, தேவன் எதிர்பார்த்த ரத்தபலியை, ஆடுகளை, பலி செலுத் தினான். காயீனோ நேர்மையோடுதான் தானும் பலி செலுத்தி இருப்பான். ஆனால் விசுவாசத்தினால் அதாவது தேவன் கட்டளையிட்ட பிரகாரம் பலியை செலுத்தாமல், நிலத்தின் கனிகளைச் செலுத்தினான். தேவன் அவனுடைய பலியை நிராகரித்தார்.

சத்தியத்தை அறிவீர்கள், சத்தியமே உங்களை விடுதலை யாக்கும் என்று கிறிஸ்து கூறியிருக்கிறார்.

நேர்மை மாத்திரம் நம்மை ரட்சிக்காது.

சத்தியமாவது என்ன? தேவன் பேசிய வார்த்தைகளே சத்தியம்.

ஆகையினால் நம் ஆராதனை தேவனால் அங்கீகரிக்கப் பட, அது ஆவியோடும், உண்மையோடும் இருத்தல் அவசியம்.

ஆவியோடும் என்றால், முழு இருதயத்தோடும் என்று பொருள்.

உண்மையோடும் என்றால், சத்தியத்தோடு அதாவது தேவனுடைய கற்பனையின் பிரகாரம் என்று அர்த்தம்.

அதைவிட்டு எவ்வளவு நேர்மையோடு, யதார்த்தமாய் செய்தாலும், அப்படிப்பட்ட ஆராதனையை தேவன் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

ஆராதனையில் நாம் கைக்கொள்ளும் ஒவ்வொரு முறையும், செயலும், தேவனுடைய கட்டளை பிரகாரம் இருக்க வேண்டும்.

தொன்றுதொட்டு, நம் முன்னோர்கள் பாரம்பரியத்தினால், பழக்கத்தினால், செயல்பட்டு வந்த காரியங்கள் என்பதனாலே அவற்றை நாமும் அப்படியே பின்பற்ற வேண்டும் என்பதல்ல. அவர்கள் அறியாமையினால் அவைகளை செய்து வந்திருக்கலாம்.

நாம் இன்று தேவனுடைய வார்த்தைகளை கொண்டு, அவர் கூறியவாறே செயல்படவேண்டும்.

கிறிஸ்துவும் மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே என்றார், நம்முடைய நீதியின் தந்தை.

நாம் நினைத்தபடி எல்லாம், நம்மைத் திருப்திபடுத்த, ஆராதிக்கக்கூடாது. தேவனை பிரியப்படுத்துவதே நம்முடைய குறிக்கோளாக இருக்க வேண்டும்.

வேதவசனப்படியான உண்மையான சபை எது? என்று அடையாளம் கண்டுகொள்ள, அந்த சபையின் ஆராதனை முறைகளை வைத்தும் நிர்ணயிக்கலாம்.

வேதவாக்கியங்களின்படி, புதிய ஏற்பாட்டு சபை ஆராதனையில் ஐந்து அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவை, பாடுதல், காணிக்கை கொடுத்தல், ஜெபித்தல், வேதவாசிப்பு மற்றும் கர்த்தர் பந்தி. இவை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முதலாவது பாடுதல் : பாடுதலைக் குறித்து திட்டவட்டமாக, புதிய ஏற்பாட்டில் இரு வசனங்கள் உள்ளன. சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள்

இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம் பண்ணி என்று எபே. 5:19ல் வாசிக்கிறோம்.

இங்கு வாய்ப்பாட்டு இசையைத் தான் குறிப்பிட்டிருக் கிறதேயன்றி, வாத்தியக் கருவிகளைப்பற்றி ஒன்றுமே சொல்லப்படவில்லை.

மற்றுமொரு வசனத்தைக் கேளுங்கள். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரண மாக வாசமாயிருப்பதாக. சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளி னாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரை பக்தியுடன் பாடி.... இங்கும் வாய்ப்பாட்டு இசையைப்பற்றி சொல்லப்படுகிறது.

இருதய நரம்பை மீட்டி எழுப்பக் கூடிய இசையே தவிர, வாத்திய கருவிகளுடன் கூடிய இசையல்ல.

இசைக்கருவிகளை உபயோகித்தால் என்ன தவறு? தாவீது ராஜா 10 நரம்பு வீணை. சுரமண்டலம், தம்புரா இவைகளை உபயோகிக்கவில்லையோ என்பார்கள். தாவீது ராஜா காலத்தில் இன்னும் அநேக காரியங்கள் அந்த நியாயப் பிரமாணத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

மிருகபலி, பலமனைவிகளை வைத்து கொள்ளுதல் பண்டிகை கொண்டாடுதல் போன்ற காரியங்கள் இருந்தன.

கேள்வி என்னவெனில் இன்று நாம் மோசேயின் மூலமாய் கொடுக்கப்பட்ட பழைய நியாயப்பிரமாணத்தின் கீழ் ஜீவிப்பதில்லை. கிறிஸ்துவின் மூலமாக கொடுக்கப்பட்ட புதிய உடன்படிக்கையின் கீழ் ஜீவிக்கிறோம். இதில் அந்த காரியங்களுக்கு இடமில்லை.

ஆகையினால் புதிய ஏற்பாட்டு சபை ஆராதனையில், வாத்தியக் கருவிகள் இல்லாத வாய்ப்பாட்டு இசையே தேவனால் அங்கீகரிக்கப்படும்.

இரண்டாவது, வேதவாசிப்பு:- வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கின்றன. தேவனுடைய, மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத்தகுதியுடையவனாயிருக்கும்படி அவைகள் உபதேசத் திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், நீதியை படிப்பிக்கு தலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது.

ஜீவனுக்கும், தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் தேவன் நமக்கு தந்தருளியிருக்கிறார். அப்படி என் றால் இவை கள் போதுமானவை. முழுமையானவை. இந்த வேத வாக்கி யங்களோடு ஒன்றையும் கூட்டாமல், குறைக்காமல் உள்ளதை உள்ளபடி போதிக்க வேண்டும். (வெளி. 22:18, 19).

அதை விட்டு, சபைகோட்பாட்டு புத்தகங்களிலிருந்து நாம் பிரசங்கிக்க கூடாது. மத சம்பந்தப்பட்ட எல்லா விஷயங் களிலும், வேதவாக்கியங்களே முழு அதிகாரமுடையவை களாயிருக்கிறது.

மூன்றாவது, கர்த்தருடைய பந்தி : இது கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய, ஞாபகார்த்த பந்தி. இதில் உப யோகிக்கப்படவேண்டிய பொருட்கள், புளிப்பில்லாத அப்பமும், திராட்சை ரசமும்.

அப்பம், கிறிஸ்துவின் பிட்கப்பட்ட சரீரத்தையும், திராட்சை ரசம் அவர் சிந்திய ரத்தத்தையும் நினைவுபடுத்து கிறது. ''என்னை நினைவு கூறும்படியாக இதைச் செய்யுங்கள் என்று கிறிஸ்து கூறினார்''.

ஆகவே இது ஒரு நினைவு கூறும் பந்தி. இதன் நோக்கத்தை அறிந்து செயல்பட வேண்டும்.

அவனவன் தன்னைத்தானே சோதித்தறிந்து செயல்பட வேண்டும். இது ஒரு கேளிக்கை விருந்தல்ல. ஒரு பிரசாதமு மல்ல. ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் (ஞாயிற்றுக் கிழமைகளிலும்) கிறிஸ்தவர்கள் கூடிவரும் போது, இதில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

அதைவிட்டு மாதம் ஒருமுறை, வருடத்துக்கு ஒரு முறை என்பது வேத வசன போதனை அல்ல.

நாலாவது ஜெபம் : ஜெபம் கிறிஸ்தவனுக்கு முதுகெலும் பைப் போன்றது. ஜெப வாஞ்சையுள்ளவனாக கிறிஸ்தவன் இருத்தல் அவசியம். சமயம் கிடைக்கும் பொழுதெல்லாம், சோர்ந்து போகாமல் ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக் கிறோம்.

தேவ சித்தத்தைச் செய்து, அவருக்கு முன்பாக நீதியாக ஜீவிக்க முயலுபவனின் ஜெபம்தான் பெலனுள்ளது. பாவி களுக்கு தேவன் செவிக்கொடுக்கிறது இல்லை என்று வேதம் கூறுகிறது.

ஐந்தாவது, காணிக்கை : தன் தன் வரவுக்குத்தக்கதாக, அவனவன் வாரத் தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமைகளில், சேர்த்து வைத்திருந்த, தேவனுடைய பாகத்தை உற்சாகமாய் கொடுக்க வேண்டும். வற்புறுத்துதலினாலே, விசனமாகவோ, கட்டாயமாகவோ கொடுக்க வேண்டுவதில்லை.

விசுவாசிகள் கொடுக்கும் வார காணிக்கையைத் தவிர, கலை நிகழ்ச்சிகளை நடத்தியோ, சீட்டு போட்டோ வேறு எந்த உபாயத்தினாலும் காணிக்கை திரட்டினார்கள் என்று வேதத்தில்

சான்றுகள் இல்லை. கிறிஸ்தவர்கள் அல்லாதவரிடத்திலும் காணிக்கை பெற வேண்டிய அவசியம் இல்லை.

விசுவாசிகள், தங்களுக்கு கர்த்தர் செய்த மகாகிருபையை எண்ணி, தன்னையே தியாகம் செய்த அளவுக்கு அதிகமாய் காணிக்கை கொடுக்க முன் வரும்போது, ஊழியத்துக்கு வேண்டிய பணம் தாராளமாக இருக்கும். யாரோ தேவனை வஞ்சிக்கும் போதுதான் பணமுடை ஏற்படும்.

அன்புள்ள நண்பரே, யதார்த்தமாக தேவனை ஆராதிக்கிறவனாய் இருக்கிறாயா?

நீ தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற உனக்காக ஜெபிக்கிறோம்.

✧✧✧✧✧✧

## சத்தியவான் யார்?

- ஜெர்ரி ஜென்கின்ஸ்.

மதவட்டாரங்களில் மக்கள் சந்திக்கும் ஒரு பெரிய பிரச்சனை, ''நான் சத்தியத்தைப் பின்பற்றுகிறேனா''? சத்தியத்தை பின்பற்றுவது முக்கியம், ஏனெனில் சத்தியத்தில் நடவாமல் போவது, கர்த்தரிடத்திலிருந்து அன்னியோன்னியத்தை துண்டித்துக்கொள்வதற்குச் சமம்.

நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால் சத்தியத்தின்படி நாம் நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம் (1 யோவான் 1:6). மேலும் சத்தியம் செயலுடன் சம்பந்தப்பட்டதற்கான சான்றுகள் உண்டு. நாம் சத்தியத்தில் நடக்க வேண்டும். சத்தியத்தின்படி நடக்க வேண்டும்.

நாம் சத்தியத்தின்படி நடப்பவர்கள் என்று நமக்கு எப்படித் தெரியும்? அது முடியவே முடியாது என்பர் சிலர். நம் உணர்வு

களின் மூலம் அறியக்கூடும் என்று மற்றவர் கூறுவார்கள். அல்லது தேவனுடைய நேரடி தலையீட்டினால் அறிவு வருவதாக கூறுவார்கள். கேள்வி என்னவெனில் நான் சத்தியத்தின்படி நடப்பவன் என்று நான் எப்படி நிச்சயமாகக் கூறமுடியும். மீண்டும் சரியான விடைக்கு நம் கர்த்தரிடம் திரும்புவோம். அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி, ''அப்படியானால் நீ ராஜாவோ'' என்றான். இயேசு பிரதியுத்தரமாக, ''நீர் சொல்லுகிறபடி நான் ராஜா தான், சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன். இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன். சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்'' (யோவான் 18:37)

நீங்கள் சத்திவான் என்றால், கீழ்க்கண்ட பாடங்களில், இயேசுவின் குரலை கேளுங்கள்.

1. ஞானஸ்நானம் பற்றி அவருடைய குரலைக் கேட்டீர்களா?

   ''விசுவாசியாதவனோ, ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' (மாற்கு 16:16).

2. ஆத்தும ஆதாயத்தைக் குறித்து அவர் குரலைக் கேட்டீர்களா?

   ''என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்'' என்றார் (மத்தேயு 4:19).

3. கொடுத்தலைப்பற்றி அவருடைய குரலைக் கேட்டீர்களா?

   ''வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்'' என்றார் (அப் 20:35).

4. ஜெபத்தைப் பற்றி அவருடைய குரலைக் கேட்டீர்களா?

   ''சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் (லூக்கா 18:1).

5. கீழ்ப்படிதலைப்பற்றி அவருடைய குரலைக் கேட்டீர்களா?

   "என்னை ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன''
   (லூக்கா 6:46).

''பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி, கர்த் தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. (மத்தேயு 7:21)

✦✦✦✦✦